விலை ரூபா 25.00

டில்லியில் உண்ணாவிரதம்  பக்கம் 8

பசுபிக்குக்கு நகர்த்தும் அமெ.  பக்கம் 09

முதலையைக் கண்டு மக்கள் பதற்றம்  பக்கம் 15

கப்டன் இனிமேல் லெப் கேணல்  பக்கம் 23

பக்கங்கள் : 28

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 191

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 22 திங்கட்கிழமை (04/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# கிட்லரை விஞ்சியது இலங்கை அரசு

## வடக்கு இராணுவ மயப்படுத்தப்பட்டது குறித்து கூட்டு எதிர்க்கட்சிகள் கருத்து

கொழும்பு, ஜூன் 4

வடக்கில் சந்திக்குச்சந்தி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் கூட இவ்வளவு இராணுவ முகாம்கள் இருந்தனவா என்பது சந்தேகம். வடக்கு மக்களின் அன்றாட வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடு அதிகமாக இருப்பதால் மக்கள் நிம்மதியாக வாழ முடியாதுள்ளனர்.

– இவ்வாறு கொழும்பில் நேற்று பொது எதிரணிக்கட்சிகள் தெரிவித்தன.

மேலும், வடக்கில் தேர்தலை நடத்துவதற்கு அரசிற்கு அச்சமில்லையெனில், சுயாதீன பொலிஸ், தேர்தல்கள் திணைக்களம், அரச சேவைகள் திணைக்களங்கள் என்பவற்றை நிறுவி அங்கு தேர்தலை நடத்துமாறும் அரசிற்கு பொது எதிரணிக்கட்சிகள் சவால் விடுத்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற பொது எதிரணிக்கட்சிகளின் ஊடக


FILE

வியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட விடயங்கள் பொது எதிரணிக்கட்சிகளின் உறுப்பினர்களால் தெரி 04↘

## கூடங்குளம் அணு உலைக் கதிர்வீச்சு

### இலங்கையில் எச்சரிக்கை கருவி

கொழும்பு, ஜூன் 4

தமிழகம், கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுவரும் அணு மின்னுலையிலிருந்து அணுக்கதிர்வீச்சு பரவினால் அதை எச்சரிக்கும் வகையில் கருவிகளை அமைக்க இலங்கை தயாராகி வருகிறது.

கூடங்குளம் அணு மின் உலையின் செயற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கடலோரப் பகுதிகளில் அணுக் கதிர் வீச்சு அளவை உணர்த்தும் எச்சரிக்கைக் கருவிகளை நிறுவ இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி 8 கருவிகள் கடலோரப் பிராந்தியத்தில் அமைக் 04↘

## நைஜீரிய விமான விபத்தில் 153 பேர் சாவு!

கொழும்பு, ஜூன் 4

நைஜீரியாவில் நேற்று இடம்பெற்ற பயணிகள் விமான விபத்தில் சுமார் 153 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டின் விமான சேவை அதிகார சபை அறிவித்துள்ளது.

நைஜீரியாவிலுள்ள அதிக சனத்தொகைமிக்க நகராகவும், பொருளாதார கேந்திர முக்கியதுவமிக்க நகராகவும் விளங்கும் லாகோஸ் எனுமிடத்திலுள்ள இருமாடிக் கட்டடமொன்றில் மோதுண்டே விமானம் விபத்திற்குள்ளாகியுள்ளது. 04↘

## வீதியைக் கடந்தவரை விழுங்கியது விதி

தென்மராட்சி, ஜூன் 4

காலையில் மோட்டார் சைக்கிளால் விழுந்து ஏற்பட்ட காயத்துக்கு மருந்து கட்டுவதற்காக வைத்தியசாலைக்கு சைக்கிளில் வந்தவர் இடைவழியில் பஸ்ஸுடன் மோதுண்டு சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணிக்குச் சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் இடம்பெற்றது.

ஒழுங்கையில் இருந்து ஏ-9 வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து நடந்த போது அந்த வழியே வந்த வாகனம் ஒன்றில் ஏற்றி சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் 04↘

## நண்டு பிடிக்கச் சென்ற சிறுவன் குண்டு வெடித்துக் காயம்

முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு, சுண்டிக்குளம், சாலை பகுதியில் நண்டுபிடிப்பதற்காகச் சென்ற 14 வயதுடைய சிறுவன் மர்மப்பொருள் வெடித்ததில் படுகாயமடைந்துள்ளான்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்ததாவது:-

14 வயதுடைய குறித்த சிறுவன் தனது வீட்டிலிருந்து 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள, சாலை வாவியில் நண்டு பிடித்துக் கொண்டிருந்தபோதே திடீரென மர்மப் 04↘


வாக்குறுதிகளை நிறைவேற்றாதவரை

## இந்தியப் பிரதமர் இலங்கை வரார்

டில்லி, ஜூன் 4

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத வரை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கைக்குச் செல்லப் போவதில்லை என்று புதுடில்லியின் உயர்மட்ட அரச வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னர் கடந்த மூன்று ஆண்டு



களில் இலங்கை அரசு இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது.

இந்தியப் 04↘

## தெரிவுக்குழுவுக்கு வருமாறு அழைத்து கூட்டமைப்பு மீது சேறுபூச அரசு முயற்சி

### பொது எதிரணிக் கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 4

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் தமது உண்மையான நிலைப்பாட்டையும், ஒழுங்குப் பத்திரத்தையும் நாட்டில் பகிரங்கப்படுத்த முடியாத அரசு, கூட்டமைப்பினரை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அழைத்து, அவர்கள் மீது சேறு பூச முயற்சிக்கின்றது. இதற்கு ஒருபோதும் இடமளியோம் என தெரிவித்துள்ளன பொது எதிர்க்கட்சிகள்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதற்கு முட்டுக்கட்டையிடும் சூத்திரதாரிகளும், பேரினவாதிகளும் அரசுக்குள்ளேதான் இருக்கின்றனர். இத்தகைய அரசை நாம் இனிமேலும் ஆட்சியிலிருக்க அனுமதிக்கக்கூடாது. மஹிந்த அரசை வெடித்துச் சிதறவைத்து வீட்டுக்கு ஓட வைப்பதற்கு எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மாபெரும் நாடுதழுவிய போராட்டத்தை நடத்தவுள்ளோம் எனவும் அவை அரசுக்கு 04↘

## அதிகாரப்பகிர்வுக்கு இணங்கினால் ஆட்சிப் பயணம் அஸ்தமிக்கும்

### எச்சரிக்கிறது தேசிய பிக்குகள் முன்னணி

கொழும்பு, ஜூன் 4

அதிகாரப்பகிர்விற்கு அரசு இணங்குமானால் அதன் ஆட்சிப் பயணம் அஸ்தமிக்கும் காலம் வெகு தொலைவில் இருக்காது எனக் கருத்து வெளியிட்டு அதிகாரப்பகிர்வைக் கடுமையாக எதிர்க்கின்றது தேசிய பிக்குகள் முன்னணி.

அதிகாரப் பரவலாக்கத்திற்கு கடும் போக்குடைய அமைச்சர்களும் பேரினவாத அமைப்புகளின் தலைவர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவரும் நிலையில், அவர்களுக்கு ஒத்தூதும் வகையில் 04↘

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில்

## மூத்த அமைச்சர்களின் கருத்தை புறக்கணிக்கிறது மஹிந்த அரசு

### ஜனநாயக மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 4

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சாதக சமிக்ஞைகளைக் காட்டிவரும் மிதவாதப் போக்குடைய அமைச்சர்களின் கருத்தைப் புறந்தள்ளிவிட்டு, பேரினவாதிகள் - சூத்திரதாரிகளின் இனவாதப் போக்குடைய காரசாரமான கருத்துகளுக்கு உரமூட்டும் வகையில் அரசு செயற்படுகின்றதென ஜனநாயக மக்கள் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து முஸ்லிம் பள்ளிகளின் விவரம் திரட்டும் தீவிர முயற்சியில் இரகசியப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். இது மிகவும் கண்டனத்துக்குரியதாகும். இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்பதை அரசு மறந்து செயற்படுகின்றது என்று அந்த முன்னணியின் பொதுச்செயலாளர் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் 04↘

## புத்தர் கேதீஸ்வரத்தில் பக்தர்கள் கண்ணீரில்

மன்னார், ஜூன் 4

திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு நேற்றும், நேற்று முன்தினமும் வந்த பக்தர்கள் பாலாவிக் கரையோரத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையைப் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதனர்.

நேற்றுமுன்தினம் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் தேர்த்திருவிழாவும், நேற்றைய தினம் தீர்த்த உற்சவமும் மிகச் சிறப்பான முறையில் இடம்பெற்றிருந்தன.

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் ஆலயத்துக்கு திரண்டு வந்திருந்தனர். தீர்த்தத் திருவிழாவான நேற்று பாலாவியில் நீராடுவதற்குச் சென்றனர். அவர்களுக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது.

பாலாவித் தீர்த்தக் கரையில் இருந்து 50 மீற்றர் தொலைவில் பெரியளவிலான புத்தர் சிலை ஒன்று காவித் துணியொன்றினால் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தது.

இதனைப் பார்த்த வெளியிடங்களைச் சேர்ந்த மக்கள் அதிர்ச்சியில் உறைந்து நின்றனர். கதிர்காமம் முருகன் ஆலயத்துக்கு ஏற்பட்ட கதிதான் 04↘

# இலங்கை ஜனாதிபதிக்கு தண்டனை கிடைக்கும் வரை ஓயக்கூடாது

## தமிழ்த்தேசிய பொதுவுடமைக் கட்சி அறிக்கை

**இலங்கை ஜனாதிபதியை, லண்டனில் விரட்டி யடித்து பிரிட்டன் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வரலாறு படைக்க வேண்டும்.**

ஈழத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதிக்கு பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை வாங்கித் தரும் வரை உலகத் தமிழர்கள் ஓயக்கூடாது என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் பெ.மணியரசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை மறுதினம் புதன்கிழமை லண்டனில் பொது நலவாயநாடுகளின் வர்த்தக மாநாடு நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ள, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு செல்லவுள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்ற வந்த மஹிந்தவை, ஹீத்ரு விமான நிலையத்தை விட்டு இறங்க விடாத அளவுக்கு, வீரத்துடன் போராடிய பிரிட்டன் தமிழ் மக்களுக்கு, தற்போது மீண்டும் அதே போன்று விரட்டியடிக்கும் நல்வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இலங்கை ஜனாதிபதிக்கு தண்டனை கிடைக்கும் என்று நம்பும் வகையில், அண்மையில் ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த லைபிரீய முன்னாள் அதிபர் சார்ள்ஸ் டைலர் என்ற கொடுங்கோலனுக்கு 50 ஆண்டுகள் வாழ்நாள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், ஐ.நா. மனித உரிமை அவையில், இலங்கையின் போர்க் குற்றங்கள் விசாரிக்க வேண்டும் என்று பல்வேறு நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

உலக நாடுகள் மத்தியிலும், மனித நேய மற்றும் சனநாயக சக்திகள் மத்தியிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இலங்கை ஜனாதிபதியை, லண்டனில் இருந்து விரட்டி யடித்து பிரிட்டன் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வரலாறு படைக்க வேண்டும்.

அவர் விரட்டியடிக்கப்படும்போது, ஈழத்தமிழினப் படுகொலையை உலகம் மேலும் கூர்ந்து கவனிக்கும். உலகம் உரிய நடவடிக்கை எடுக்கும்.

எனவே, நாளை மறுதினம் புதன்கிழமை பிரிட்டன் வரும் இலங்கை ஜனாதிபதியை பிரிட்டன் தமிழ் மக்கள் வீரத்துடன் விரட்டியடிக்க வேண்டும் என்று உரிமையோடும், உறவோடும் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறேன் - இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# அல்குவைதா, தலிபான் தீவிரவாதிகளுக்கு உதவுவோருக்கு எதிராக நடவடிக்கை

## இலங்கையிலும் வருகிறது சட்டம்

**குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் ஒரு வருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை அல்லது 10 லட்சம் ரூபா அபராதம் அல்லது இரண்டு தண்டனை களும் வழங்கப்படும்.**

இலங்கையில் அல்குவைதா மற்றும் தாலிபான் தீவிரவாதிகளுக்கு உதவும் தனிப்பட்டோர் மற்றும் நிறுவனங்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். இதற்கான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

1999 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய இந்தச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின்படி குறித்த இரண்டு தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பில் பொதுமக்கள் நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த அதிகாரிகளிடம் முறையிட முடியும். அல்குவைதா மற்றும் தலிபான் அமைப்புகளுடன் தொடர்புகளை கொண்டிருப்போர் தண்டிக்கப்படும் குற்றத்தை செய்தவர்களாகக் கருதப்படுவர்.

குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் ஒருவருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை அல்லது 10 லட்சம் ரூபா அபராதம் அல்லது இரண்டு தண்டனைகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# பம்பலப்பிட்டியில் படுகொலையானவர் கௌசல்யனின் மெய்ப்பாதுகாவலர்

## அடையாளம் காட்டினார் தந்தை

கொழும்பு, ஜூன் 4

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யனின் மெய்க்காவலராகப் பணியாற்றியவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டியில் முன்னணி பாடசாலை ஒன்றுக்கு வெளியே கடந்த வெள்ளிக்கிழமை கொலைசெய்யப்பட்டு வீசப்பட்ட சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவரின் சடலத்தை அவரது தந்தை நேற்றுமுன்தினம் அடையாளம் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு, கல்லாறைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை உதயகாந்தன் (வயது - 38) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் கௌசல்யனின் மெய்காவலராக 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டுவரை பணியாற்றியவராவார்.

இதன் பின்னர் பிரிட்டனுக்குச் சென்று குடும்பத்துடன் வசித்து வந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், கொழும்பு திரும்பிய இவர் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் தொழில் செய்து வந்தார் என்றும் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பின்னர் இவரது சடலம் பம்பலப்பிட்டியில் வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்.கேணல் கௌசல்யன் ஒட்டுக் குழுவால் வெலிக்கந்தையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-சி)



தாய்லாந்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு அங்கு சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாங்கொக்கில் உள்ள தங்க விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# வீதிக்கு மின் விளக்கு

தென்மராட்சி, ஜூன் 4

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் 4-5 எல்லை வீதியின் சந்தியில் வீதி விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி துர்க்கையம்மன் கோயில், மருதடி பிள்ளையார் கோயில் ஆகியவற்றுக்கு செல்லும் பக்தர்கள் உட்பட வீதியைப் பயன்படுத்தும் மக்கள் நுணாவில் பருத்தித்துறை வீதியிலிருந்து 4-5 எல்லை வீதிக்குச் செல்லும் சந்தியில் மின்விளக்குப் பொருத்துமாறு நகராட்சி மன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். மக்களின் கோரிக்கையை ஏற்று சந்தியில் வீதி விளக் குப் பொருத்தியமைக்கு இந்தப் பகுதி மக்கள் நகராட்சி மன்ற நிர்வாகத்தினருக்கு நன்றி யைத் தெரிவித்துள்ளனர். (ந-9)

# வீதியைப் புனரமைக்க கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சி வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் இருந்து எல்லை வீதிக்குச் செல்லும் வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவ தால் அந்த வீதியைப் பயன்படுத்துவோர் சிரமங்களைஎதிர்நோக்கிவருகின்றனர்.

ஒரு கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத தால் பல இடங்களில் மணல் வீதியாகக் காணப்படுகின்றது. மழை காலங்களில் நீண்ட தூரத் துக்கு வெள்ளம் தேங்கி நிற்ப தால் இந்த வீதியைப் பயன் படுத்தும் மாணவர்கள் அரச உத்தியோகத்தர்கள் உற்பத்தியாளர்கள் உட்பட பொதுமக்கள் சிரமத்துடனேயே பயணிக்கின்றனர். அல்லாரையில் உள்ள தோட்டங்களில் பயிர் வகை கள் பயிரிடுவோர் இந்த வீதியையே பயன்படுத்துகின்றனர் என்றும் உரிய அதிகாரிகள் இந்த வீதியைப் பார்வையிட்டு மழை காலம் ஆரம் பிப்பதற்கு முன்னர் புனரமைத்துத் தருமாறும் அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர். (ந)

# மண்டேலா கிண்ண உதைபந்தாட்டம் களத்தில் இறங்கவுள்ளது தமிழீழ அணி

நெல்சன் மண்டேலா வெற்றிக் கிண்ணத்துக்காக இந்த மாதம் நடைபெறவுள்ள-2012 உதைப்பந்தாட்ட போட்டித் தொடர் ஒன்றில், நாடுகடந்த தமிழீழ அரசின் அணி ஒன்று கலந்து கொள்ளவுள்ளது.

வட ஈராக் நாடான குருதிஸ்தானில் நடை பெறும் இந்த விளையாட்டு நிகழ்வில் தமிழீழம் என்ற பெயரில் நாடுகடந்த தமிழீழ அணி அணி கலந்து கொள்கிறது. சர்வதேச ரீதியாக இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்த நிலையில் உள்ளவர்களில் தெரிவு செய்யப்பட்ட காற்பந்து வீரர்கள் இந்த அணியில் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ள னர். என். எப்போர்ட் என்ற அமைப்பு இந்தப் போட்டிக்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் பெறாத மற்றும் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் அனுமதி கிடைக்காத நாடுகள் இதில் விளையாடவுள்ளன. இதன் படி, இந்தப் போட்டி யில் நாடு கடந்த தமிழீழ அரசு வட சைப்பிரஸ், ஈராக், குருதிஸ்தான், மேற்கு சஹாரா, சென்ஸிபார், ரேடியார், டாபுர் போன்ற நாடுகள் பங்குபற்ற வுள்ளன.

இந்தப் போட்டியில் பங்கு கொள்வதன் மூலம், நாடுகடந்த தமிழீழ அரசுக்கு சர்வதேச ரீதியில் சிறந்த அங்கீகாரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில், தமிழீழ அணி இதில் ஈடுபடுத் தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# சூரியனைக் கடக்கும் வெள்ளிக்கிரகம் இலங்கை மக்கள் அவதானிக்கலாம்

சூரியனை வெள்ளிக்கிரகம் கடந்து செல்லும் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வை இலங்கை மக்கள் அன்றையதினம் காலை 7 மணியளவில் அவதானிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சூரிய வட்டத்தின் ஊடாக வெள்ளிக்கிரகம் நகர்ந்து செல்வதை வெள்ளிக்கிரகத்தின் சூரிய கடப்பு என்று தெரிவிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் வெள்ளிக்கிரகம் ஒரு சிறிய புள்ளிபோல சூரியனின் முன்பாக ஊர்ந்து செல்வது போல காணலாம். புதன் மற்றும் வெள்ளிக்கிரகங்களின் சுற்றுப்பாதைகள் பூமியின் சுற்றுப்பாதையின் உட்புறமாக அமைந்துள்ளன.

எனவே இந்த இரண்டு கிரகங்கள் மட்டுமே சூரியனுக்கும், பூமிக்கும் இடையே வர இயலும். வெள்ளியின் சூரிய கடப்போ 243 ஆண்டுகளுக்கு 4 முறையே நிகழ்கிறது. இவை இரட்டிப்பாக அதாவது 8 ஆண்டுகள் இடைவெளியில் அமைந்த இரட்டை நிகழ்வுகளாக நிகழும். இந்த இரட்டை நிகழ்வுகளுக்கு இடைப்பட்ட காலம் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்டது ஆகும்.

தொலை நோக்கி கொண்டு சூரியனின் பிம்பத்தை வெண் திரையில் விழச் செய்து பார்த்தால் சூரியனின் குறுக்கே கறுப்புப் புள்ளி போன்ற தோற்றத்துடன் வெள்ளிக்கிரகம் கிழக்கில் இருந்து மேற்காகக் கடந்து செல்வதைக் காணலாம். வெள்ளியுடன் சூரியப் புள்ளிகளும் தெரியும். ஆனால் வெள்ளியைக் காட்டிலும் சூரியப்புள்ளிகள் சற்று ஒளியுடன் இருப்பதைக் காணலாம்.

சூரியனை வெள்ளி கடக்கும்போது வெறும் கண்ணாலோ, தொலைநோக்கி, பைனாகுலர் போன்ற உருப்பெருக்கி கொண்டு பார்க்கலாம். சூரியனை நேரடியாகப் பார்க்கக் கூடாது. அவ்வாறு பார்த்தால் பார்வை இழக்க நேரிடும். சூரியனின் பிம்பத்தை ஒரு வெண் திரையில் விழச் செய்து அதைக் காணலாம். (வ)

## 25 கரையோரக் கிராமங்களில் சுனாமி முன்னாயத்த ஒத்திகை

யாழ்ப்பாணம், ஜூன் 4

சுனாமி எச்சரிக்கை தொடர்பான முன்னாயத்த ஒத்திகை 25 கிராமங்களில் நடத்தப்படவுள்ளது.

இதற்கென 10 பிரதேச செயலர் பிரிவுகளை சேர்ந்த 25 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் இந்த சுனாமி எச்சரிக்கை நிகழ்வு இடம்பெறும்.

யாழ். செயலக இடர் முகாமைத்துவ பிரிவு குறிப்பிடும் ஒரு நாளில் இந்த முன் எச்சரிக்கை ஒத்திகை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-41)

## யாழ்.நகர் சந்தையில் கால்நடைகள் அசிங்கம்

யாழ். நகர் மரக்கறி சந்தை வளாகப் பகுதியில் கால்நடைகள் அசிங்கம் செய்து வருகின்றன. இதனால் வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சந்தை வளாகம் கால்நடைகளின் இரவு தங்குமிடமாக காணப்படுகின்றமையால் வியாபாரிகள் தமது பொருள்களை வைத்துவிட்டுப் போவதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டாக்காலி கால்நடைகள் சந்தைப் பகுதியில் உள்ள பழக் கடைகளிலும் நட்டத்தை ஏற்படுத்துகின்றன என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

நகரில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ். பஸ் தரிப்பிடம், முற்றவெளி, பண்ணை, கொட்டடி போன்ற பகுதிகளில் இந்தக் கட்டாக்காலி கால்நடைகள் அதிகளவில் நடமாடுகின்றன. (ம-17)

## மக்கள் குடியமர்வதற்கு உரிய சூழல் கொழும்புத்துறை பகுதியில் இல்லை

கொழும்புத்துறை, ஜூன் 4

கொழும்புத்துறைப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு 2 ஆண்டுகளாகியும் மக்கள் குடியமர்வதற்குரிய சூழல் ஏற்படுத்தப்படவில்லை.

இதனால் மீள் குடியமர்வு தாமதமடைகின்றது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள எழிலூர், புனிதபுரம், துண்டி ஐயனார் கோவிலடி போன்ற பகுதிகள் குடியேற்றத் திட்டப் பகுதிகளாகும்.


எழிலூர் குடியேற்றத் திட்டத்தில் 58 வீடுகளும் புனிதபுரம் குடியேற்றத் திட்டத்தில் 10 வீடுகளும் ஐயனார் கோயிலடி குடியேற்றத் திட்டத்தில் 10 வீடுகளும் வீடமைப்பு அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

இந்த வீடுகள் போர்ப் பாதிப்பால் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இவற்றைத் திருத்தியமைக்கும் பணிகள் வீடமைப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இதற்கான வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் தமது மீள் குடியமர்வு தாமதமடைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே மக்கள் நடமாட்டமின்றி சேதமடைந்து காணப்படும் இந்தப் பகுதி வீடுகளை பலர் கலாசார சீரழிவு, துர்நடத்தை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர் என்றும் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-135)

## ரயில் பாதையில் அமைந்த ஆலய முகப்பு இடிப்பு



வலி வடக்கு, ஜூன் 4

பல லட்சம் ரூபா செலவில் ரயில் பாதையில் கட்டப்பட்ட கந்தர்மடம் ஆத்திசூடிப் பிள்ளையார் ஆலயம் தற்போது ரயில் பாதை போடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இடிக்கப்பட்டு வருகின்றது.

பொதுமக்களின் நிதியில் திட்டமிடல் எதுவும் இன்றி அமைக்கப்பட்ட இந்த ஆலயமே தற்போது ரயில் பாதை போடப்படுவதற்காக இடிக்கப்பட்டு அரைகுறையில் காணப்படுகிறது.

இந்த ஆலயத்தை நிர்மாணிப்பதற்கு வெளிநாடுகளில் இருக்கும் பலர் பெரும் தொகை நிதியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# யாழ். பொலிஸ் பிரிவுகளில் இரவு நேர ரோந்துப் பணிகள்

### யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவிப்பு

*வலி.வடக்கு, ஜூன் 4*

*குடாநாட்டின் அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் இரவு நேர ரோந்துப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் கடந்த ஒரு வார காலத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் யாழ்ப்பாணம், சுன்னாகம், வட்டுக்கோட்டை, கோப்பாய், கொடிகாமம், ஊர்காவற்றுறை, அச்சுவேலி பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன.*

இந்தப் பகுதியில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்பட்ட பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களுக்கும் யாழ். மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இடையே வாராந்தம் நடைபெறும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் பகல் யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் இடம்பெற்றது.

இதில் கருத்துக் கூறிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் இரவு நேர ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் காரணமாக நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த 33 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களுடன் குறிப்பாக திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடம் இருந்து சாவகச்சேரிப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற திருட்டுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களில் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுக்கள் சம்பந்தமான தகவல்களும் பெறப்பட்டுள்ளன.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-86)

## ஹன்டர் வாகனத்தில் இருந்து தவறி வீழ்ந்ததில் படுகாயம்


தென்மராட்சி, ஜூன் 4

ஹன்டர் வாகனத்தில் இருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஏ-9 வீதியில் மிருசுவிலில் இடம்பெற்றது.

வீதி அபிவிருத்திப் பணிக்குக் கற்கள் ஏற்றி வந்த குறித்த வாகனத்தில் இருந்தே தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாத்தறை திக்வெலவைச் சேர்ந்த விதானகே அனுர பிரியந்த (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)



விழிப்புலனற்றோரின் நலன்கருதி யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் கணினிப் பயிற்சி மையம் ஒன்றை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ஆரம்பித்து வைத்துள்ளது. சங்கத் தலைவர் செ.கனகசபை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமெரிக்காவைச் சேர்ந்த செல்வி. எஸ்.கேன், பொஸ்கோ நிறுவன அதிபர் எஸ்.சிவச்சந்திரபோஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைக்க யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் முன்னாள் நிர்வாக உறுப்பினர் கந்தசாமி கணினிப் பயிற்சி மையத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் விழிப்புலனற்றோர் சங்கத்தின் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-288)

## மின்வலு ஏற்ற இறக்கத்தால் இலத்திரனியல் பொருள்கள் நாசம்

கொழும்புத்துறை, ஜூன் 4

இலங்கை மின்சார சபையால் வழங்கப்படும் மின்சாரத்தில் ஏற்படும் மின்வலு ஏற்ற இறக்கத்தால் பல இடங்களிலும் கணினி மென்பொருள்கள், மின்சார உபகரணங்கள், மின் குமிழ்கள் சேதமடைகின்றன என்று பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் இவ்வாறு சீரற்ற உயர் மின்வலுவால் பல மின் பாவனைப் பொருள்கள் பழுதடைந்துள்ளன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மின்விநியோகம் அடிக்கடி தடைப்படுவதால் தொழில் நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதனால் கல்விப்புலம் சார்ந்தோர் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது கல்வி, அலுவலகப் பணிகளை மேற்கொள்வதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.(ம-135)

## வடமராட்சி இந்து மகளிர் இரு பிரிவுகளாக மாறியது

வடமராட்சி, ஜூன் 4

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வெள்ளிக்கிழமை தொடக்கம் வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி, வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலை என இரு பிரிவுகளாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் ஒரு பாடசாலையாக உள்வாங்கப்பட்டதைத் தொடர்ந்து, இதன் ஆரம்பப் பிரிவை மூடத் திட்டமிட்டிருந்தது.

இதற்கு கடுமையான ஆட்சேபத்தை பெற்றோர்கள், நலன்விரும்பிகள் தெரிவித்தனர். இதனையடுத்து இதன் ஆரம்பப் பிரிவை இதே கல்லூரிக்கு அருகில் செயல்பட வைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை பல்வேறு அமைச்சுகளிடமும், பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் முன்வைத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் தனியாக ஆரம்பப் பிரிவு பாடசாலையைச் செயற்பட வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**இரு பாடசாலைகளுக்குமிடையே வளங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கு வெளியே தம்பசிட்டி வீதியின் மறுபக்கத்தில் ஏற்கனவே ஆரம்பப்பிரிவு பாடசாலையாக இருந்த அதே இடத்தில் ஆரம்பப் பிரிவுப் பாடசாலை தொடர்ந்து இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீதியின் மறுகரையில் மகளிர் பாடசாலை வழமை போல இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு பாடசாலைகளுக்கு இடையே வளங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## நிகழ்வுகள் இன்று

**பொஷன் நிகழ்வு**

நயினாதீவு நாகவிகாரையில் இன்று பொஷன் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (41)

**கலந்துரையாடல்**

''அபிவிருத்தி என்ற சொற்பதங்கள் பல பயன்படுத்தப்பட்டாலும் யாழ்.மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படவில்லை'' எனும் தொனிப் பொருளிலான நிலா முற்றம் பகுதி-6 தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் மாலை 4.30 மணிக்கு இல.82 பிறவுன் வீதி பிறவுன் பொப்புலர் ரவலர்ஸ் அன்ஸ் ரூர்ஸ் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**செயலமர்வு**

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் ''சான்றோர் தினம்'' நிலையத் தலைவர் க.இராசலிங்கம் தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அமரர்களான ஆறுமுகம் தில்லைநாதப்புலவர், ஐயம்பிள்ளை பொன்னையா, விசுவநாதர் சேதுகாவலர், பண்டிதர் கா.பொ.இரத்தினம், நாகலிங்கம் நடராஜா, கனகசபை வேந்தனார், மருனதயினார் கந்தையா சுப்பிரமணியம், நாகலிங்கம் இராமச்சந்திரன், கதிரவேலு இராசையா, தில்லையம்பலம் சிவசாமி ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (எ)

**இறுவட்டு வெளியீடு**

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் மீது பாடப்பட்ட நாவலடி நிழலிலே எனும் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று மாலை ஆலயத்தில் நடைபெறும்.

### வீதியைக் கடந்தவரை விழுங்கியது விதி

உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி நுணாவில் மத்தியைச் சேர்ந்த சரவணமுத்து பரமநாதன் (வயது 55) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ம-9)

### நண்டு பிடிக்கச் சென்ற சிறுவன் குண்டு வெடித்துக் காயம்

பொருளொன்று வெடித்தது. இதனால் அவனது காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான்.

இதேவேளை, சில மாதங்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக புதையுண்டிருந்த வெடிபொருள் வெளியே வந்திருக்கக் கூடிய சாத்தியங்கள் இருப்பதால் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் - என்றார். (ங)

### புத்தர் கேதீஸ்வரத்தில்; பக்தர்கள் கண்ணீரில்

திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கும் ஏற்படப் போகிறது என்று சிலர் வாய்விட்டுப் புலம்பினர். இன்னும் சிலர் புத்தர் சிலையைப் பார்த்தவாறு கண்ணீர் சிந்தி அழுதனர். புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள காணிக்குள் தொல்பொருள் திணைக்களத்தின் அறிவித்தல் பலகையொன்று தொங்கவிடப்பட்டுள்ளது என்றும், தேவாரத் திருத்தலமான திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் சிலையை அமைத்துத் தமது எண்ணத்தை நிறைவேற்ற முனையும் பேரினவாதிகளின் செயலைத் தட்டிக் கேட்க முடியாத நிலையில் தாம் உள்ளமையை எண்ணியும் பலர் மனம் வெதும்பினர். (ங-க)

## அதிகாரப்பகிர்வுக்கு இணங்கினால் ஆட்சிப் பயணம் அஸ்தமிக்கும்

இவ்வறிவிப்பை விடுத்துள்ளது பிக்குகள் முன்னணி.

நாட்டில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்ற அரசின் கூற்றை நிராகரித்த பிக்குகள் முன்னணி, தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையுடன் அரசு விளையாடக்கூடாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கு அரசு உடன் தீர்வை வழங்க வேண்டுமே தவிர தமிழ்த் தலைமைகள் தங்களின் அரசியல் நலனைக் கருத்திற்கொண்டு கேட்பவற்றை வழங்கக் கூடாது என்று தேசிய பிக்குகள் முன்னணியின் உபதலைவர் கல்யாண ரன்ஸ்ரீ தேரர் நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

தமிழ் மக்கள் இன்று அதிகாரங்களைக் கோரவில்லை. பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறே அவர்கள் வேண்டி நிற்கின்றனர். எனவே தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு விரைவில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், வடக்கில் வேலையின்றித் தவிக்கும் பட்டதாரிகளுக்கு அரசு உடன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மீள்குடியேற்றம், புனர்வாழ்வு ஆகிய நடவடிக்கைகளை திறம்பட செய்து முடிக்க வேண்டும். மாறாக உலகை ஏமாற்றும் நடவடிக்கைகளாக அவை இருக்கக்கூடாது.

சம்பந்தன், பிள்ளையான் போன்றவர்களுக்கு தங்களது அரசியல் நடவடிக்கைகளை பலப்படுத்திக் கொள்வதற்காகவே அதிகாரங்கள் தேவைப்படுகின்றன. இவற்றைத் தமிழ் மக்கள் கோரவில்லை என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரப் பரவலாக்கத்திற்கு இணங்கியதால் அன்று ஆட்சிப்பீடம் ஏறி இரண்டு வருடங்களுக்குள் ஆட்சியை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோன்று இந்த அரசு அதிகாரப் பரவலாக்கத்திற்கு இணங்குமானால் ஆட்சியை விட்டு வெளியேற வேண்டிய நிலைதான் ஏற்படும் என்பது உறுதியான கருத்தாகும். இதுதான் யதார்த்தமும் கூட.

நாட்டில் தமிழ் அரசியல் கைதிகள் இருக்கின்றனர். இல்லை என அரசு கூறமுயற்சிப்பது தவறான செயலாகும். தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்க்கையுடன் அரசு விளையாடக்கூடாது. அவர்களை விரைவில் விடுதலை செய்ய வேண்டும்- என்றார்.

### நைஜீரிய விமான விபத்தில் 153 பேர் சாவு!

'ட்னர்' என அழைக்கப்படும் இந்த விமானத்தில் 153 பயணிகள் பயணித்துள்ளனர். விமான நிலையத்திலிருந்து சற்றுத் தொலைவிலேயே இந்தக் கோர விபத்து நேர்ந்துள்ளது. லாகோஸியிலிருந்து அபுஜா நகருக்குப் புறப்பட்டவேளையிலேயே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

## மூத்த அமைச்சர்களின் கருத்தை புறக்கணிக்கிறது மஹிந்த அரசு

தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர்களான பேராசிரியர் திஸ்ஸ விதாரன, ராஜித சேனாரத்ன, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வையும், அதிகாரப் பகிர்வையும் வழங்கவேண்டும் என அரசை வலியுறுத்துகின்றனர்.

மூத்த அமைச்சர்களின் கருத்துகளை ஏற்காத அரசு, இனவாதப்போக்குடைய ஜாதிக ஹெல உறுமய கட்சியாளர்களின் கருத்துக்களை வரவேற்று, அவற்றை தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கின்றது. அதிகாரப் பகிர்வுக்கு கலந்துரையாடல் மூலம் தீர்வு வழங்கவேண்டும். இதனை மூத்த அமைச்சர்கள் அரசிற்கு எடுத்துக் கூறுகின்றபோதிலும், அரசு இதனைக் கருத்திற்கொள்ளாது செயற்படுகின்றது. இது நாட்டிற்கு ஆரோக்கியமான விடயமல்ல.

முஸ்லிம் பள்ளிவாசல்களின் விவரம் திரட்டும் நோக்கில் இரகசியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கக்கூடாது. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு தமிழ் அரசர்களும் ஆட்சி புரிந்துள்ளனர். யாழ்ப்பாணத்தை சங்கிலிய மன்னனும், வவுனியாவை பண்டார வன்னியனும், இறுதியாக ஆட்சி புரிந்துள்ளனர்.

தமிழ்மக்களுக்கும் இலங்கையில் உரிமை உள்ளது. அவர்களின் சமய, கலாசார, பண்பாட்டு அம்சங்களை அழிக்கும் நோக்கில் அரசு செயற்படக்கூடாது. இனவாதப் போக்கைக் கைவிட்டு, நாட்டில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநிறுத்த அரசு முயற்சிக்கவேண்டும் - என்றார்.

### இந்தியப் பிரதமர் இலங்கை வரார்

பிரதமர் மன்மோகன் சிங் கடந்த 2008ஆம் ஆண்டில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதுவும் இருதரப்புப் பயணமாக அமையவில்லை. சார்க் மாநாட்டுக்காகவே அவர் இலங்கை சென்றார். கடந்த 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் புதுடில்லிக்கு இருதரப்புப் பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமரை கொழும்புக்கு வருமாறு அழைத்திருந்தார்.

இந்த அழைப்பு விடுத்து இரண்டு ஆண்டுகளாகியும், மன்மோகன் சிங் அதை ஏற்று கொழும்புக்குச் செல்லவில்லை. இந்தநிலையில், ஜனாதிபதி மகிந்த வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதபோது, இந்தியப் பிரதமர் எவ்வாறு இலங்கைக்கு பயணம் மேற்கொள்வார் என்று இந்திய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதிகாரப் பகிர்வை வழங்குவதாக, இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவிடமும், சுஸ்மா சுவராஜிடமும் தெரிவித்திருந்தார். இவையெல்லாம் வெறும் கடதாசியிலே உள்ளன. 'சீபா' எனப்படும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவை இந்தியாவை ஏமாற்றமடைய வைத்துள்ளன.

இந்த உடன்பாடு தயாராகி இரண்டு ஆண்டுகளாகியும் தூசி படிந்த நிலையிலுள்ளது. இந்தியாவுக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றியிருந்தால், கடந்த மாதம் கொண்டாடப்பட்ட புத்தரின் 2555ஆவது பரிநிர்வாண தின வைபவத்துக்கு மன்மோகன்சிங் கொழும்பு சென்றிருப்பார்-என்றார். இதேவேளை 1957ஆம் ஆண்டு மே மாதம், புத்தஜெயந்தியில் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்தினால் இந்திய - இலங்கை உறவு நிலையில் மேலும் விரிசல் ஏற்படக் கூடும் எனவும் தெரிவிக் கப்படுகிறது. இதேவேளை, அதிகாரப் பகிர்வு மற்றும் 'சீபா' உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் என்பவற்றை மேற் கொள்ள இலங்கை அரசுக்கு இந்தியா விடுக்கும் மறைமுக அழுத்தமாகவும் இந்தக் கருத்து அமைந்துள்ளதாகவும் கூறப் படுகிறது. (ங)

## தெரிவுக்குழுவுக்கு வருமாறு அழைத்து கூட்டமைப்பு மீது சேறுபூச அரசு முயற்சி

எச்சரிக்கை விடுத்தன. எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பொது எதிர்க் கட்சிகள் மேற்கண்டவாறு தெரிவித்தன. பொது எதிரணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்ததாவது:-

**கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன**

தமிழ் மக்களுக்கு இதயசுத்தியுடன் தீர்வொன்றை வழங்க முன்வராத மஹிந்த அரசு, காலங்கடத்துவதிலேயே முனைப்புக் காட்டி வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும் என அரசு தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அரசு தனது உண்மையான நிலைப்பாட்டையும் - ஒழுங்குப் பத்திரத்தையும் நாட்டில் பகிரங்கப்படுத்த வேண்டும். எந்த அறிக்கையின் அடிப்படையில் அரசு தீர்வை மேற்கொள்ளத் தயாராகின்றது என்பதை அது தெளிவுபடுத்த வேண்டும்.

தம்மால் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளை அரசு சரியாக நடைமுறைப்படுத்தாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அழைக்கின்றது. இது அரசின் காலங்கடத்தும் செயலையே எடுத்துக்காட்டுகின்றது.

சர்வதேசத்திற்கு தரகு வேலை பார்க்கும் மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்ப பொது எதிர்க்கட்சிகளாகிய நாம் தயார். நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்த்துச் செயற்பட முன்வரவேண்டும் - என்று நவசமசமாஜக் கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

**ஜயலத் ஜயவர்தன எம்.பி.**

வடக்கில் தேர்தலை நடத்துவதற்கு அரசிற்கு அச்சமில்லையெனில், சுயாதீன பொலிஸ், தேர்தல்கள் திணைக்களம், அரச சேவைகள் திணைக்களங்களை நிறுவி அங்கு தேர்தலை நடத்துமாறு அரசிற்கு சவால் விடுக்கின்றேன்.

வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு அரசு அரசியல் தீர்வை வழங்கத் தயார் எனில், ஏன் அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த மறுக்கின்றது? இன்று வடக்கில் இடம்பெறுகின்ற அனைத்து சிவில் நடவடிக்கைகளிலும் இராணுவத்தினரின் தலையீடு அதிகரித்து வருகின்றது. இதனை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும்.

நாம் தேர்தலைக் கண்டு அஞ்சுபவர்களல்லர். நாம் எப்போதும் தேர்தலுக்குத் தயார். மாகாணசபைத் தேர்தல் நடத்துவது குறித்து அரசுக்கு அச்சம் இல்லையெனில், வடக்கில் அனைத்துத் துறைகளையும் சுயாதீனப்படுத்தி வடமாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டும். அதுமட்டுமல்லாது, நாட்டு மக்கள் சுதந்திரமாகத் தகவல் அறியும் சட்டமூலத்தையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

**அருண சொய்ஸா**

கடந்த 27ஆம் திகதி மட்டக்களப்பில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் 14ஆவது மாநாட்டில் அதன் தலைவர் சம்பந்தன் எம்.பி. தனது உரையில் -

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு சிங்கள சமூகம் முன்வரவேண்டும். ஜனாதிபதி மஹிந்த அரசு இனிமேலும் தீர்வு விவகாரத்தில் காலங்கடத்தக்கூடாது. இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் - எனத் தெரிவித்திருந்தார்.

இவரது உரையில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க சிங்கள மக்கள், அரசியல்வாதிகள் அனைவரும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்க முன்வரவேண்டும் - என்று ருஹுணு தேசிய கட்சிச் செயலாளர் அருண சொய்ஸா தெரிவித்தார்.

## இலங்கையில் எச்சரிக்கை கருவி

கப்படும் என்று அவர்கள் கூறினர்.

தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள கூடங்குளம் மின்னுற்பத்தி நிலையம் இன்னும் சில மாதங்களில் செயற்பட உள்ளது. இந்த அணு மின் நிலையத்திலிருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் இலங்கை உள்ளதால் இத்தகைய எச்சரிக்கைக் கருவிகளை நிறுவ உள்ளதாக இலங்கை அணு சக்தி ஆணையத் தலைவர் ஆர்.எல்.விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கதிர்வீச்சு அவசர காலத் திட்டம் ஒன்றைத் தயாரித்ததாகவும் அவர் கூறினார்.

சர்வதேச அணுசக்திக் குழுவின் உதவியுடன் 8 அணுக்கதிர் வீச்சு உணர் கருவிகள் கடலோரப் பகுதிகளில் நிறுவப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்தக் கருவிகள் கொழும்பு மற்றும் மேற்கு மாகாணமான கலப்பிட்டிய மற்றும் தலைமன்னார், திருகோணமலை, கண்டி ஆகிய பகுதிகளில் நிறுவப்படும்.

இவை அனைத்தும் அணு சக்தி ஆணைய மைய அலுவலகங்களிலிருந்து இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அடுத்த இரண்டு மாதங்களில் இந்த எச்சரிக்கைக் கருவிகள் செயற்பாட்டுக்கு வரும் என்றும், அணுக்கதிர் வீச்சு அபாயம் ஏற்படும் போது அதுகுறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க இவை உதவியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

கூடங்குளம் பகுதியானது இலங்கையை ஒட்டி அமைந்துள்ளதால் ஏதேனும் அசம்பாவித சம்பவங்கள் அல்லது பூகம்பம், ஆழிப் பேரலை போன்ற விபத்துகளால் ஆபத்து ஏற்பட்டால் அதுகுறித்து எச்சரிக்கை விடுப்பதற்கு இக்கருவிகள் உதவியாக இருக்கும்.

இந்தியாவில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு இலங்கை எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை, அதேசமயம் ஆதரவும் தெரிவிக்க வில்லை. 31 நாடுகளில் மொத்தம் 450 அணு மின் உலைகள் இருக்கின்றன என்றும் விஜேவர்தன தெரிவித்தார்.

கடந்த 30 ஆண்டுகளில் 2 விபத்துகள் மட்டுமே நிகழ்ந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## கிட்லரை விஞ்சியது இலங்கை அரசு

விக்கப்பட்டன.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேத்ர தெரிவித்தவை வருமாறு:-

45 - 50ஆயிரம் வரையிலான தமிழ் மக்கள் இன்னமும் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் எப்போது தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள்? அவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டில் பல அராஜகங்களை அரங்கேற்றிவரும் அரசினால், தற்போது நாட்டில் தேசிய சொத்துகளான புதையல்களும் கொள்ளையடிக்கப்படுகின்றன. எல்லாவல மேதானந்த தேரர்தான் அரசு புதையல்களைத் தோண்டி எடுப்பதற்குத் தரகராகச் செயற்படுகின்றார். இவர் பௌத்த தர்மத்தை மீறிச் செயற்படுகின்றார். மதத் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாவதைத் தடைசெய்தல் வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தனிநபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளார். இது மிகவும் சிறந்ததாகும். நாமும் இதற்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

இந்திய நடிகைகளின் பங்கேற்புடன் நடத்தப்படும் கார்ல்டன் ரக்பி உற்சவத்துக்கு 210 மில்லியன் ரூபாவை அரசு செலவுசெய்துள்ளது. இதில் 74 ஆயிரம் ரூபாவே இலங்கையின் ரகர் வீரர் ஒருவருக்கு வழங்கப்படுகின்றது. ஏனைய மில்லியன் கணக்கான பணம் அனைத்தும் இந்திய நடிகைகளுக்கும் வெளிநாட்டு வீரர்களுக்கும் வழங்கப்படுகின்றன.


சர்வதேசத்தின் அழுத்தம் மஹிந்த அரசுமீது பிரயோகிக்கப்பட்டதால்தான் தாம் விடுதலை அடைந்தார் என சரத் பொன்சேகா கூறுகின்றார். இவரது விடுதலைக்கு யார் பாடுபட்டார்கள் என்பதை அறியாதவர்போல் பொன்சேகா கூறுகின்றார்.

பொன்சேகாவுக்கென நாட்டில் தனி மரியாதையும் வரவேற்பும் உள்ளது. அரசுடனோ அல்லது டிரான் அலஸுடனோ அவர் கூட்டுச் சேர்ந்தாரெனில் சிறிசேன குரேக்கு நடந்ததே அவருக்கும் நடக்கும் - என்றார்.

# இலங்கையைக் கைப்பற்ற அமெரிக்கா கடும் முயற்சி

## விமல் குற்றச்சாட்டு

**வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டுமென்ற அமெரிக்காவினதும் ஏனைய சக்தி களினதும் தொடர்ச்சியான வலியுறுத்தல்களுக்கு இதுவே காரணம்.**



கொழும்பு, ஜூன் 4

இலங்கையை கைப் பற்றுவதற்கு அமெரிக்கா முயற்சிக்கிறது என்றும், அந்த இலக்கை அடைவதற்காக பிரிவினைவாதிகளுடன் அது சேர்ந்திருக்கின்றது என்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாரவிலவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கையின் பூகோள அமைவிடமும் அதன் இயற்கை வளங்களும் அமெரிக்க நலன்களுக்கு முக்கியமானவை. இதனால் நாட்டை சீர்குலைக்க முனையும் பிரிவினைவாத அமைப்புகளை அமெரிக்கா சார்ந்திருந்து நாட்டைக் கைப்பற்ற முயற்சிக்கிறது.

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டுமென்ற அமெரிக்காவினதும் ஏனைய சக்திகளினதும் தொடர்ச்சியான வலியுறுத்தல்களுக்கு இதுவே காரணம்.

இலங்கையை கைப்பற்றுவதற்குத்தான. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும் எனக் கோருகின்றன. வடக்கில் பிரிவினை வாதத்தை மீண்டும் விதைத்து நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்துவதற்கு அது உதவலாம் -என்றார். (சி)

## தலைமைத்துவப் பயிற்சியின் பின்னர் பல்கலைகளில் பகிடிவதை அதிகரிப்பு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சியின் பின்னர் பல்கலைக் கழகங்களில் பகிடிவதைகள் அதிகரித்துள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் நோக்கங்களே இதற்கான காரணமாக அமைந்துள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க கூறியுள்ளார். ஜனநாயகம் தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும் கதைக்கும் அரசியல் கட்சிகள், தமது மாணவ ஒன்றியங்களின் ஊடாக பகிடிவதைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பகிடிவதைகள் அவர்களுக்கு மாத்திரமின்றி அவர்களது குடும்பங்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## மஹியங்கனைக் காட்டில் மீட்கப்பட்ட சடலங்கள் காதலர் இருவருடையன

கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி காணாமல்போன காதல் ஜோடியொன்றின் சடலத்தின் சிதைவுகள் மஹியங்கனையிலுள்ள அலிகந்துற காட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சடலங்களுக்கு அருகில் பீடைநாசினி போத்தல்களும் இருந்தன என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். மஹியங்கனை குருவிதென்னவைச் சேர்ந்த 22 வயதான இளைஞரதும் பலகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயது யுவதி ஒருவருமே இறந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். (சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சாமந்தி வேலாயுதம்** LL.B.(Hons)

கடந்த 24.05.2012 வியாழக்கிழமை

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்



நடைபெற்ற கொழும்பு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவின் போது, சட்டமாணி இறுதியாண்டு பரீட்சையில் சிறந்த செயல்திறனுக்கான சேர் பொன்னம்பலம் அருணாசலம் விருது, கே.சின்யா விருது, சட்டவியல் பாடத்துக்கான சட்டபீடாதிபதியினால் வழங்கப்படும் சிறப்பு விருதுகளுடன் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட

**செல்வி சாமந்தி வேலாயுதம்**

அவர்களை மேன்மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று எதிர்காலம் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

சித்தப்பா
குடும்பத்தினர்.


## மட்டு. கந்தவேள் முருகன் ஆலயத்தினுள் இராணுவ உடையணிந்தோர் அட்டகாசம்





மட்டக்களப்பு தாந்தாமலை முருகன் ஆலயத்தை அண்டிய, முத்தையா சுவாமிகள் வசித்த கந்தவேள் முருகன் ஆலயத்தினுள் கடந்த வெள்ளிக்கிழமை பிரவேசித்த இராணுவ உடையணிந்தோர் அங்கிருந்த கருங்கற்களினாலான தூண்கள், சிறிய கட்டடம் மற்றும் வழிபாட்டுப் பொருள்களை அடித்து நொறுக்கியுள்ளனர்.

அங்கு நேரில் சென்று பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இச்சம்பவம் தொடர்பாக தெரிவித்தவை வருமாறு-

தாந்தாமலை முருகன் ஆலயமும் அதனை அண்டிய பிரதேசங்களும் இந்துக்களின் பூர்வீக வழிபாட்டுக்குரிய புனித பிரதேசமாகும்.

இந்தப் பிரதேசங்களில் அண்மைக்காலமாக பெரும்பான்மை இனத்தவர்களும் இராணுவத்தினரும் இந்துக்களின் வழிபாட்டு தலங்களை அழித்துவிட்டு, பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு முயற்சித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாகத்தான் கடந்த சில மாதங்களுக்கு முன் கச்சைக்கொடி சுவாமி மலை எனும் இந்துக்களின் பூர்வீக பிரதேசத்தில் அங்குள்ள பௌத்த பக்குகள் இராணுவம் மற்றும் பொலிசாரின் உதவியுடன் பௌத்த விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவற்றையும் நான் நேரில் சென்று பார்வையிட்டு விகாரை அமைப்பதை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கேட்டிருந்தேன்.

எனவே, இந்துக்களின் பூர்வீக வழிபாட்டுத் தலங்களைப் பூண்டோடு அழித்துவிட்டு அந்த இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கு இலங்கை அரசின் அனுசரணையுடன் பௌத்த பிக்குகள் செயற்படுகின்றனர். இதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்பளிக்கின்றனர் - என்றார். (சி)


## கண்ணீர் அஞ்சலி



யா/ இந்துக் கல்லூரியின்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஐ.கமலநாதன் அவர்களின்
அன்புத் தாய்

**திருமதி அன்னம்மா ஐயாத்துரை**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் மீளாத்துயருடன்.....
**மாணவர்கள்.**



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**விநாசித்தம்பி நடராசா**

(முன்னாள் கணக்காளர் இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம், உப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேமிப்பு வங்கி கொழும்பு, Royal Trust - Toronto)



தோற்றம்
14★07★1938
(யாழ்ப்பாணம்)

மறைவு
05★06★2011
(கனடா)

எமது வாழ்வின் வழிகாட்டியாக இருந்து எங்கள் மேல் அன்பையும், பாசத்தையும் பொழிந்த உங்களை எங்கள் தெய்வமாகக் கருதுகின்றோம். என்றும் உங்கள் நினைவில் வாழும்....

508, வாடன் அவனியூ,
ஸ்காபரோ, ரொரன்டோ,
கனடா.

அன்பு மனைவி திருமதி கனகேஸ்வரி நடராசா, (ஓய்வுபெற்ற ஆசிரியை)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(18922) (45.06.9)



## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ் International Courier & Cargo Service

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1Kg க்கு | லண்டன் 655 /= | ஜேர்மனி 785 /= | பிரான்ஸ் 795 /=
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.
- மேலதிக கட்டணம் எதுவும் இன்றி யாழ்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் பொதிகள் உங்கள் வீட்டிற்கே வந்து ஏற்றுக்கொள்ளப்படும். (Door to Door Service)
- அவசர கடிதங்கள் உலகின் எப்பாகத்திற்கும் 24 மணி நேரத்தில் விநியோகிக்கும் சேவை. (TDD Service)

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

இல. 01, பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். தொ. இல : 021 222 6113

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 ★ 03 ★ 1934

மறைவு 17 ★ 05 ★ 2011

### அமரர் செல்லையா வேலாயுதம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டு பொலிஸ் சேவையில் பணியாற்றி ஓய்வின் பின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் ஜெனீவாவில் வசித்து 2011 வைகாசி பௌர்ணமியில் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா வேலாயுதம் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலியின் கண்ணீர்ப்பூக்கள்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(c/411)(6-8-9) மனைவி, பிள்ளைகள் (சுவிஸ்), சகோதரர்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 05 ★ 02 ★ 1930



விண்ணக வாழ்வில் 04 ★ 06 ★ 2011

### அமரர் கி. பாலசிங்கம்

ஆண்டவரது இல்லத்திற்கு போவோம்
என்ற அழைப்பை நான் கேட்டபோது
அக மகிழ்ந்தேன்

(தி.பா 122 : 1)

மரணம் உம்மை பிரித்தாலும்
ஆண்டுகள் பல சென்றாலும்
உம் பாதுகாப்பில் நாம்
என்றும் வாழ்ந்திடுவோம்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (04.06.2012) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் அதன்பின்பு நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்க உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் பணிவாகக் கேட்டுக்கொள் கின்றோம்.

மாதா கோயிலடி, துன்னாலை கரவெட்டி (18938)(7-8-9) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி கல்யாணி மகேந்திரநாதன்



ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும், நாகதம்பிரான் வீதி, ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கல்யானி மகேந்திரநாதன் நேற்று (03.06. 2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கந்தசாமி -திருத்தேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான செல்லர்- சின்னம்மா தம்பதியரின் மருமகளும், மகேந்திரநாதனின் அன்பு மனைவியும், கஜனா, விறஜா, கஜீபன் ஆகியோரின் பாசமிகு தாயும், ச.தீபனின் (பணியாளர் -பனை அபிவிருத்தி சபை) மாமியும், டிலக்ஷன், சபிகேஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவானியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2012) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

தகவல்: ச.தீபன் (மருமகன்)

## வீதி அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக மக்கள் முறைப்பாடு

அக்கராயன்,ஜூன் 4

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெறும் வீதி அபிவிருத்தி வேலைகளில் குறைபாடுகள் நிலவுவதாக மக்கள் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தக் குறைபாடுகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொக்காவிலிலிருந்து ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான், மல்லாவி வரையுமான பகுதியில் நடைபெறும் அபிவிருத்திப் பணிகளில் பழைய குழாய்களைப் பயன்படுத்தி இடம்பெறும் வீதிப் பணிகள் தொடர்பாக மக்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன் துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் மின்சாரம் மக்களுக்கு வழங்கப்படாமை தொடர்பாகவும் மக்கள் குரல் எழுப்பினர். அத்துடன் வீட்டுத் திட்டங்களில் காணப்படும் இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து மக்களுக்கு வீடுகளைத் துரிதமாக அமைத்து வழங்குமாறு மக்கள் வேண்டினர். மேலும் இந்தியன் வீட்டுத் திட்டத்தின் மூலம் துரிதமாக வீடுகளை வழங்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், துணுக்காய்ப் பகுதியில் மக்கள் டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் தொடர்பாக அதிக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.- என்றார். (க-18)

## ஓய்வுபெற்ற ஊழியர்கள் தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஜூன், 4

ஓய்வுபெற்ற இ.போ.ச ஊழியர்கள் நாளையும், நாளை மறுதினமும் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.ஏ.அஸ்கர் அறிவித்துள்ளார்.

இளைப்பாறிய ஊழியர்களின் பணிக்கொடைத் தண்டப்பணம் சம்பந்தமான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 50 ரூபா முத்திரை, வங்கிக் கணக்குப் புத்தகம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ளவர்கள் வவுனியா சாலையிலும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பிரதான பிராந்திய நிலையத்திலும் தொடர்பு கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (16)


## தவறிவிட்டது

உதயகுமார் என்பவருடைய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், A.T.M. அட்டை ஆகியன பாஷையூருக்கும் கோக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது.

தொடர்பு- 0778696763, 0214911059

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, 03 ஆம் கட்டை கல்வியங்காடு அருகில் 3¾ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 8736923, 075 8085760, 077 6680350

(18849)(-7-8)

## இசை நிகழ்ச்சி

யாழ். கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் விநாயகர் ஆலய பூங்காவனத் திருவிழாவை முன்னிட்டு நாளை (05.06.2012) செவ்வாய்க்கிழமை மாலை **திருமலை சுப்பர் சோனிக்ஸ்** இசைக்குழுவினரின் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறும்.

(சி/439)(9-7-8) உபயகாரர்

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வைத்தியசாலைக்கு அருகில் 4 பரப்புக் காணியில் 5 அறைகள் கொண்ட வீட்டுடன், 5 பலா, 12 தென்னை, 4 மாமரம் அடங்கலாகவும், வைத்தியசாலை, கோயில், பாடசாலை, சுப்பர் மார்க்கட் போன்றவற்றை அண்மித்ததாகவும் உள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 0777349357.

(C/613) (6,7,10)

## காணி விற்பனைக்கு

இணுவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும் இராமநாதன் நுண்கலை பீடத்திற்கு அருகாக உள்ள 7 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 4734953

(18931)(-7-8)


## OBITUARY NOTICE

**DAMAYANTHI THAMBIRAJAH (NANGO),**

ENTERED GLORY ON 1ST JUNE 2012. DAUGHTER OF LATE MR. & MRS. T. BALASANTHIRAN, DAUGHTER IN LAW OF LATE MR. &MRS. P.THAMBIRAJAH, BELOVED WIFE OF ALEX THAMBIRAJAH (RETIRED TEACHER, ST. JOHN'S COLLEGE, JAFFNA). LOVING MOTHER OF DEBORAH (AUS) & JESURAN (AUS), MOTHER-IN-LAW OF JEYENDIRAN & JASMIN, GRAND MOTHER OF DANIESHA & GIDEON. LOVING SISTER OF ALEX (UK), GODWIN (AUS), ARUNTHATHI (AUS), JAYANO (USA), SUGANTHI (UK) & LATE SISTER VASANTHI (CEYLON PENTECOSTAL MISSION). SISTER-IN-LAW OF LATE KARUNA (UK), LALITHA (AUS), SARVANANTHAN (AUS), SAHAN (UK), GEORGE &RANGI THAMBIRAJAH (CANADA) & LATE PADMINI (AUS).

CORTEGE LEAVES RESIDENCE, NO: 158, OLD PARK ROAD, JAFFNA ON MON 4TH JUN 2012 AT 6.00 PM FOR SERVICE AT THE CEYLON PENTECOSTAL MISSION HALL, NO: 111, KANDY ROAD, CHUNDIKULI, JAFFNA AT 2.30 PM ON TUES 5TH JUN 2012, BURIAL AT THE CPM CEMETERY, KODDADY, JAFFNA.

NO: 158,
OLD PARK ROAD,
JAFFNA.

**Informant:**
**Mr.Alex Thambirajah**

## மரண அறிவித்தல்



திருமதி

### அருட்செல்வி ஆனந்தராஜா

இணுவிலைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருட்செல்வி ஆனந்தராஜா கடந்த 16.05.2012 நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார் இரத்தினம் -இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஆனந்தராஜாவின் அன்பு மனை வியும், ஆரதி, மெஸ்சிகா, தரணிகா ஆகியோரின் பாசமிகு தாயும், அருள்மலர் (இலங்கை), அருள்தாஸ், (பிரான்ஸ்), தபேஸ்வரன் (நேசன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இராசமணி, சிவராசா, துரைசிங்கம் ஆகியோரின் மருமகளும், பாஸ்கரன், ஜெரோனா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2012) திங்கட்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் லேன்,
இணுவில். (18949) (45.6)

தகவல்: இரத்தினம்(தந்தை).

## நீங்கா நினைவில் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அவதாரம் 05 ★ 12 ★ 1943



சிவபதம் 19 ★ 05 ★ 2008

### அமரர் சிவசிறி கணபதிப்பிள்ளை அழகேந்திரம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச. உத்தியோகத்தர் யாழ். சாலை)

திதி: பூரணை: 04.06.2012

பாரினில் பாரிவள்ளலாய் வாழ்ந்துற்ற அழகனே
பாமரமக்களுக்குப் பணிப்புரிமையீந்த பார்த்தீபனே
பேசும் பொற்கலங்கள் ஈசன் தாள் என்றாயே
பாசமும் பற்றும் நீங்கி மாண்புடைத்தெய்வ மானாயே

"திருப்பரங்குன்றம்"
பிரான்பற்று பண்டத்தரிப்பு.

அன்புசால் குடும்பத்தினர்

(18800) (45.6.9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சர்வதேச விசாரணைக்கு தொடர்ந்து வலியுறுத்தல்

இலங்கையில் நடந்து முடிந்த கொடிய போரின் போது இடம்பெற்றதான போர்க் குற்றச்சாட்டுகள் பல்வேறு மட்டங்களில் இருந்து வெளியிடப்பட்டன. குறிப்பாக ஐ.நா.செயலாளர் நாயகம் அமைத்த நிபுணர் குழு மட்டுமன்றி வேறு பல மனிதஉரிமை அமைப்புகளும் இவ்வாறு குற்றஞ்சாட்டின. இவைகளுக்கு மேலாக சனல் 4 காணொலியும் போர்க் குற்றங்கள் தொடர்பாக நேரடியாக எடுத்தவை என்ற முறையில் காணொலி காட்சிகளை வெளியிட்டது.

ஆனால் இவை அனைத்தையுமே நிராகரித்து விட்டது அரசு. இதற்கிடையில் அரசே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி பல மாதங்கள் ஆகின்றன. அந்த அறிக்கையையும் ஏதேதோ காரணங்கள் கூறி கிடப்பில் போட்டு விடுவதற்கு எத்தனங்கள் நடைபெற்றன. விசாரணைக் குழுக்களின் அறிக்கைகளைக் கிடப்பில் போட்டுவிடுவதென்பது இலங்கை அரசுக்கு புதியதொரு விடயமல்ல. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தனிப்பட்ட ஒன்று. அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றும் கூட முக்கியமானவர்கள் சொல்லிப் பார்த்தார்கள். இந்த நிலைமையில் தான் ஜெனிவாவில் கடந்த மார்ச்சில் இடம்பெற்ற மனித உரிமைகள் சபையின் மாநாட்டில் அமெரிக்காவின் முன்முயற்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் இந்த அறிக்கையை விரைவாக நடைமுறைப்படுத்தும் படியாக அழுத்தம் கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தும் கூட அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டப்பட்டு வருகின்றது.

இந்த நாட்டில் என்ன நடக்கிறது, மனித உரிமை விடயத்தில் அரசு எந்த அளவில் அக்கறை கொண்டு செயற்படுகின்றது என்பதை வெளிநாடுகள் குறிப்பாக ஐ.நா.மனித உரிமை சபையும் அதில் அண்மையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆதரித்த நாடுகளும் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றன என்பது சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் வெளியிட்ட அதன் 50 ஆவது உலக அறிக்கையை வைத்து புரிந்து கொள்ளலாம். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு இலங்கையில் இடம்பெறும் சம்பவங்களில் அக்கறையுண்டு. இலங்கையிலுள்ள அமெரிக்கா, பிரிட்டன் தூதுவர்கள் அவ்வப்போது இந்த விவகாரங்கள் பற்றி கருத்துக்கள் வெளியிடுவதைப் பார்க்கிறோம்.

சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள தனது உலக அறிக்கையில் இலங்கையில் இடம்பெற்றதான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயேச்சையான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. போரின் போது நடைபெற்றவைகளுக்கு மிக முக்கிய நம்பகமான சாட்சியாக இருந்துள்ள அண்மையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் ராணுவத் தளபதி சரத்பொன்சேகா அந்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்துள்ள நிலையில் சர்வதேச விசாரணையை ஏன் வற்புறுத்துகிறீர்கள் என்ற கேள்விக்கு அந்த நிறுவனத்தின் இலங்கை விவகாரங்கள் தொடர்பான நிபுணர் யொலாண்டா போஸ்டர் பதில் அளித்துள்ளார்.

என்ன நடந்தது என்பது தொடர்பாக முறையாக நடத்தப்படும் விசாரணை மூலமே தெளிவுபடுத்த முடியும். சரத்பொன்சேகாவின் தனிப்பட்ட அபிப்பிராயம் முக்கியமல்ல என்பது அந்தப் பதில், ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு மின் அஞ்சல் மூலம் அவர் அளித்துள்ள பேட்டியில் சர்வதேச விசாரணை ஏன் வேண்டும் என்பதற்கு கொடுத்த விளக்கம் வருமாறு:

போர்க் குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றுள்ளதக்கான நம்பகமான ஆதாரம் இருப்பதாக ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ள அவர் இவ்வாறான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக செயற்படுவதற்கு இலங்கையில் தற்பொழுது நம்பகமான உள்ளக பொறிமுறை எதுவும் முழு அளவில் செயற்படவில்லை. அதனாலேயே சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்துகின்றோம் என்றார்.

இலங்கையில் தற்பொழுது நடைபெற்று வரும் விசாரணைகளில் சர்வதேச உரிமை அமைப்புகளுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.



# உள்ளூர் மீனவர்களை மடக்குவோருக்கு தெற்கு மீனவரைத் தெரியவில்லையா?

### இப்படிக் கேட்கிறார் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 4

சட்ட விரோதமான முறையில் கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்தும் உள்ளூர் மீனவர்களைப் பொலிஸாரின் துணையுடன் மடக்கிப் பிடிக்கும் கடற்றொழில் திணைக்க அதிகாரிகளால் தென்னிலங்கை மீன்வர்களை ஏன் இன்னமும் கட்டுப்படுத்த முடியவில்லை?

இவ்வாறு கேள்வி எழுப்புகின்றார் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம்.

வட பகுதியில் அத்துமீறி சட்ட விரோதமான முறையில் கடற்றொழிலை மேற்கொண்டுவரும் தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை தொடர்வதுக்கு என்ன காரணம் என வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் எஸ்.தவரட்ணத்திடம் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு தொடக்கம் வடமராட்சி கிழக்கு வரையான கடல் பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் சுதந்திரமாக நடமாடி கடற்றொழில் செய்து வருகின்றனர்.

அதிகாலைவேளை படகுகள் சகிதம் குறுக்கும் மறுக்குமாக ஓடி தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி கடற்றொழில் செய்து வருகின்றனர்.

இதன் காரணமாக கரைவலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு கரைவலையை நம்பி சுமார் 70 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. தென்னிலங்கை மீனவர்களால் 150 இற்கும் மேற்பட்ட கரைவலைத் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானி அறிவித்தலை மீறும் வகையில் தடைசெய்யப்பட்ட உபகரணங்களை தென்னிலங்கை மீனவர்கள் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியவர்கள் யார்?

கடற்றொழில் அமைச்சர், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், கரையோர கடற்படை மற்றும் இராணுவம் இவர்களுக்கு அனுசரணையா என்ற சந்தேகமே எழுகிறது.

தென்னிலங்கை மீனவர்கள் இவர்களுக்கு லஞ்சம் கொடுத்து இவ்வாறு அத்துமீறி சட்டவிரோத தொழில்களைச் செய்து வருகின்றனரோ என்று கடற்றொழிலாளர்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது.

உள்ளூர் மீனவர்களை மடக்கிப் பிடிக்கும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் தென்னிலங்கை மீனவர்களை ஏன் மடக்கிப் பிடிக்க முடியாமல் உள்ளது.

கடல் வளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு முன்னதாக இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். அதன் பின்னர் உள்ளூர் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.-என்றார்.

(ம-3)

## 365 நாள் சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.பிராந்திய மக்கள் வங்கியின் கன்னாதிட்டி கிளை தனது 365 நாள் சேவையை நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பித்து வைத்துள் ளது.

மக்கள் வங்கியின் கன்னாதிட்டி கிளை வருடத்தின் 365 நாளும் வாடிக்கையாளர்களுக்கான சேவையை வழங்கவுள்ளது.

மக்கள் வங்கியின் 51 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தச் சேவையை ஆரம்பித்துள்ளதாக பிராந்திய முகாமை யாளர் தெரிவித்தார்.

இவற்றில் பணவைப்புக்கள், கடன் வசதிகள், அடகுவைத்தல் மற்றும் மீளப் பெறுதல் ஆகிய சேவைகளும் மேற்கொள்ளப்படும். இந்தச் சேவையின் ஆரம்ப நிகழ்வில் பணவைப்பில் நேற்றைய தினத்தில் அதிக தொகை வைப்பில் இட்ட 3 பேருக்கு மக்கள் வங்கி சார்பில் பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில்



வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ம-13)

### தாய்மதம் திரும்புதல் அங்குரார்ப் பணக் கூட்டம்

வலி வடக்கு, ஜூன் 4

யாழ். மாவட்ட இந்து பிராந்திய மகா சபையால் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தாய்மதம் திரும்புதல் என்னும் நிகழ்வின் அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை மண்டபத்தில் இந்து மகா சபையின் இணைப்பாளர் மருத்துவர் இ.சிவசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் எஸ்.சிற்றம்பலம் விசேட அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். சுவதமி சின்மயமிஷன் துறவி ஜாக்கிரத் சைத்தன்யா ஆசியுரையையும் வழங்குவார்.

நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள சமய நாயன்மார்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் குரு பூசையை முன்னிட்டு ஒரு வார காலத்துக்கு தாய்மதம் திரும்புதல் என்னும் பொருள் பற்றிய விழிப்புணர்வு பிரசாரங்கள் இந்து மகா சபையால் முன்னெடுக்கப்படவுள்ளன. அதன் ஒரு கட்டமாக இந்த கூட்டம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## நிதி ஒதுக்கீடு

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச சபைக்கு உட்பட்ட காந்திஜி சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்புக்கு பன்முகப்படுத்திய வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த நிதி ஒதுக்கீட்டை 2012 ஆம் ஆண்டு பன்முகப்படுத்திய நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்க முன்வந்துள்ளார். சனசமூக நிலையத்தை பயன்படுத்தும் மக்கள் நன்மை கருதி அதனை அபிவிருத்தி செய்யும் முகமாக ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## அச்சுவேலியில் புதிய ஆரம்பப் பாடசாலை

அச்சுவேலி, ஜூன் 4

அச்சுவேலியில் புதிய ஆரம்பப் பாடசாலை ''அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை'' என்ற பெயருடன் கடந்த முதலாம் திகதியில் இருந்து செயற்பட்டு வருகின்றது. பாடசாலையின் முதலாவது அதிபராக வேலுப்பிள்ளை குணலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆரம்ப பிரிவாகச் செயற்பட்ட கட்டடத் தொகுதியோடு கூடிய பகுதி அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையாக மாற்றப்பட்டுச் செயற்படுகின்றது.

அச்சுவேலி மத்திய கல்லூரி தரம் ஒன்று தொடக்கம் தரம் மூன்று வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாகச் செயற்பட்டு வந்தது.

மத்திய கல்லூரி தேசிய மட்டத்தில் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு மூன்று வருட காலப் பகுதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளீர்ப்புச் செய்யப்படும் பாடசாலைகள் தரம்- 6 தொடக்கம் தரம்- 13 வரையான வகுப்புக்களை மட்டும் கொண்டவையாக இருக்க வேண்டும் என்பது அடிப்படை விதிமுறையாகும்.

இதற்கு அமையவே அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை தனிப் பாடசாலையாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை புதிய தனிப் பாடசாலையாகும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா நிகழ்வில் கலந்துகொண்டு புதிய பாடசாலைக்கான அனுமதி மற்றும் ஆவணங்களைப் பாடசாலை அதிபரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார். (ம-11)

## சத்துணவு அளவீடு குறிக்காமல் கையொப்பம் பெறுவதாக விசனம்

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சிப் பிரதேச ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சத்துணவுமா வழங்கப்படும் போது அளவீடு குறிப்பிடாமல் கையொப்பம் பெறுவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் போசாக்கு குறைந்த கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கு திரிபோஷா, கோண்சோயா, சீனி, எண்ணெய் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் இந்தப் பொருள்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வைத்து இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்தப் பொருள்கள் விநியோகத்துக்கான படிவத்தில் விநியோகிக்கப்படும் பொருள்களின் அளவுகள் குறிப்பிடப்பட்டு கையொப்பம் பெறப்படல் வேண்டும்.

ஆனால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் படிவத்தில் பொருள்களின் விவரங்கள் குறிப்பிடப்படாமல் கையொப்பம் பெறப்பட்டுத் தாம் விரும்பிய பொருள்களை வழங்குவதாகவும் தெரிவித்தனர். இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் அக்கறை எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

# தனியாரின் அட்டை வளர்ப்புக்கு தேவன்பிட்டியில் இடைக்காலத் தடை

மன்னார், ஜூன் 4

மன்னார் தேவன்பிட்டி கிராமத்தில் தனியாரால் மேற்கொள்ளப்படவிருந்த அட்டை வளர்ப்பு வேலைத் திட்டத்துக்கு இடைக்காலத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேவன்பிட்டிக் கிராமத்தில் அரசியல் வாதிகளின் செல்வாக்கின் மூலம் மேற்கொள்ளப்படவிருந்த தனியார் அட்டை வளர்ப்பு வேலைத்திட்டத்திற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தேவன்பிட்டி புனித சூசையப்பர் கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

தேவன் பிட்டி கிராம மக்களும், ஆலய பரிபாலன சபையும் இணைந்து குறித்த பிரதேசத்தில் உள்ள கடற்பகுதியில் பெரிய அட்டை வளர்ப்பு வேலைத்திட்டத்தை மேற்கொள்ள இருந்தனர்.



இந்த நிலையில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி வெளியூரைச் சேர்ந்த வேறு மதத்தைச் சேர்ந்த ஒரு தனி நபர் திணைக்களங்கள், அதிகார சபைகள், அமைச்சுக்கள் மூலம் அனுமதியைப் பெற்று அட்டை வளர்ப்பை மேற் கொள்வதற்கான சகல வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டு வந்தார்.

ஆனால் தேவன்பிட்டிக் கிராம மக்கள் குறித்த தனி நபரின் இந்தச் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து உடனடியாக அங்கு வந்த மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் குறித்த வேலைத்திட்டம் கடற்றொழில் அமைச்சரினால் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறிச் சென்றார். இந்த வேலைத் திட்டம் இடை நிறுத்தப் பட்டது.

மேலும் மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜேம்ஸ் சுதாகரன் மற்றும் மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந்தோனி சகாயம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து கிராம மக்களை வழிப் படுத்தினர்.

இவர்களின் பிரசன்னம் கிராம மக்களுக்கு நம்பிக்கையை வழங்கியுள்ளது என்றும் தற்போது இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ள போதும் குறித்த வேலைத் திட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் எனவும் குறித்த கிராம மக்களும், தேவன்பிட்டி புனித சூசையப்பர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரும் உரிய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-12)

# இன்னும் மூன்று மாதங்களில் பெண்கள் விடுதி நிறைவு பெறும்

### அடிக்கல் நடும் நிகழ்வில் வணிகர் கழகத் தலைவர்



கிளிநொச்சி, ஜூன் 04

யாழ்.மாவட்ட வணிகர்களின் ஏகோபித்த ஒத்துழைப்புடன் இன்னும் மூன்று மாதங்களில் பெண்களுக்கான விடுதி அமைத்து வழங்கப்படும்.

இவ்வாறு உறுதிமொழிவழங்கினார் யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

கிளிநொச்சி புதுமுறிப்பில் அமையவுள்ள மகாதேவா சைவச்சிறார் இல்லத்தின் பெண்களுக்கான விடுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


இராசநாயகம் ஐயாவின் சீரிய தலைமைத்துவத்தின் கீழ் மகாதேவா சைவச்சிறார் இல்லம் சிறப்பாக இயங்கி வருகின்றது. இங்குள்ள சிறார்கள் எதிர்காலத்தில் பல்வேறு உயர்ந்த பதவிகளை வகிப்பர் என்பதில் சந்தேகமே இல்லை.

இன்று அடிக்கல் நடப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி இன்னும் மூன்று மாதங்களில் நிறைவு பெற்று விடும். இதற்கேற்ற வகையில் யாழ்.வணிகர் அனைவரும் கட்டடம் அமைப்பதற்கு நிதியாகவும், பொருளாகவும் மனமுவந்து வழங்கி வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்த இல்லத் தலைவர் தி.இராசநாயகம் உரையாற்றுகையில்; போரினால் அழிவடைந்த கட்டடங்கள் யாவற்றையும் புனர் நிர்மாணம் செய்வதாயின் 60 மில்லியன் ரூபா தேவைப் படும்.

தற்போது பெண்கள் விடுதியை 12 மில்லியன் ரூபா செலவில் அமைத்து வழங்க முன்வந்துள்ள யாழ். வணிகர் கழகத்துக்குச் சைவச் சிறார் இல்லத்தின் சார்பாக நன்றி கூறுகின்றேன்.- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம், மகாதேவா கணேசானந்த சுவாமிகள், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வலிமேற்குப் பிரதேசசபை உறுப்பினர் த.நடனேந்திரன், வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் உட்படப் பலர் இணைந்து அடிக்கல்லை நட்டு வைத்தனர். (க-50-6)



அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் மொழித்திறன் விருத்திப் பாசறை நிகழ்வில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர். (18)

# சாப்பிட முடியவில்லை

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் நடத்தி வந்த இறைச்சிக்கடைகளைத் தமிழ் மக்கள் நடத்துவதால் முஸ்லிம் மக்களால் இறைச்சி சாப்பிட முடியவில்லையென முல்லை மாவட்டப் பள்ளிவாசல் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

போருக்கு முன்னர் இந்தப்பிரதேசத்தில் இருந்த ஆறு இறைச்சிக்கடைகளை முஸ்லிம் மக்கள் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# துணுக்காய் பிரதேச சபைக் கூட்டத்திலும் நிறைவேறியது கண்டனத் தீர்மானம்

### பல்கலைக் கழக மாணவன் தாக்கப்பட்டதைக் கண்டித்து

துணுக்காய், ஜூன் 4

துணுக்காய்ப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டதைக் கண்டித்துக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

துணுக்காய்ப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் கடந்த 29 ஆம் திகதி காலை 10 மணியளில் பிரதேச சபையின் தவிசாளர் வீரகத்தி இராசரத்தினம் தலைமையில் பிரதேசசபையின் கூட்டம் இடம்பெற்றது. இதன் போது யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 4ஆம் வருட மாணவனும் மாணவர் ஒன்றியத்தின் செயலாளருமான பரமலிங்கம் தர்ஷானந்த் இனம் தெரியாதோர்களால் கடந்த 18.05.2012 தாக்கப்பட்டமையைக் கண்டிக்கும் கண்டன அறிக்கை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கண்டன அறிக்கை மீது உரையாற்றிய போது பிரதேச சபை உறுப்பினர்கள், மாணவன் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தனர். இதே வேளை இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழக்கூடாதெனவும் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டனர். (க-415)

# மன்னாரில் அதிகரித்த விலையில் கடல் உணவுகளின் விற்பனை

### தட்டுப்பாடும் நிலவுகின்றது

மன்னாரில் கடந்த சில வாரங்களாகவே மீன்பிடி மிகவும் மந்தகதியில் இருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

**இதன் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் சென்று திரும்புவதிலும் கடலுணவுகளை சந்தைப்படுத்துவதிலும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.**

தற்போதைய காலநிலை மாற்றத்திற்கு அமைவாகக் கடும் காற்று வீசி வருகின்றது. இதனால் இன்னும் சில வாரங்களுக்கு மீன்பிடிபடும் வீதம் மிகவும் குறைவாகக் காணப்படுமென மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீன் வளத்திற்குப் பெயர் போன மன்னார்க் குடாவில் மன்னார் வடகடலிலும், இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் தென்பகுதிக் கடலிலும் யுத்த காலங்களின் போது மட்டுப்படுத்தப்பட்ட நேர எல்லையிலேயே மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டிருந்தது.

அதற்கு முந்தைய காலங்களில் மன்னாரில் பிடிக்கப்படும் கடலுணவுவகைகள் நூற்றுக்கணக்கான லொறிகளில் ஏற்றப்பட்டு நாட்டின் தென்பகுதி உள்ளிட்ட ஏனைய பாகங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு வந்தன. இதனால் மன்னார் மீனவர்களின் வருமானம் நன்றாக இருந்தது. ஆயினும் தற்போது மீனவர்களுக்கான பாஸ் நடைமுறை மீன்பிடி உபகரணங்களின் கட்டுப்பாடுகள் என்பன அமுலில் உள்ளன.

இந்நிலை தொடருமாக இருந்தால் மன்னாரில் 60 வீதம் மீன் வளத்தை நம்பி வாழ்ந்த மீனவக் குடும்பங்கள் வேறு தொழிலை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் எனவும் எதிர்வு கூறப் படுகின்றது.

இது இவ்வாறிருக்க. மன்னாரில் தற்போது பரவைக்கடல் வற்றியிருப்பதோடு பெருங் கடலிலும் காற்றின் வேகத்தினால் பெரும் அலைகள் எழத் தொடங்கியிருக்கின்றன.

இதன் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் சென்று திரும்புவதிலும் கடலுணவுகளைச் சந்தைப்படுத்துவதிலும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதனால் மன்னாரில் தற்போது மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு விலையும் அதிகரித்து காணப் படுகின்றது. (க-12)

# பி 269 பிரதான வீதியின் வேலைகள் ஆமை வேகத்தில்

துணுக்காய், ஜூன் 4

மாங்குளம் துணுக்காய் வெள்ளாங்குளம் பி 269 பிரதான வீதியின் வேலைகள் தற்போது ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதால் இதனூடாகப் பிரயாணங்களை மேற்கொள்வோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மேற்படி பிரதான வீதியானது மாங்குளம் பிரதேசத்தில் இருந்து மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது. துணுக்காய் ,வெள்ளாங்குளம் ஆகிய பிரதேசங்களுக்குச் செல்லக் கூடிய சுமார் 47 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி இதுவாகும்.

இந்த வீதியின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மாதங்கள் சில கடந்த நிலையிலும் வேலைகள் ஆமைவேகத்தில் இடம்பெற்று வருகின்றன. தற்போது வீசுகின்ற பருவ காலக் காற்றின் வேகத்தினால் புழுதிப் புயல் வீசுகின்றது. இதனால் பஸ்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்லும் பிரயாணிகள் புழுதிப் படலத்தில் மூழ்கி வருகின்றனர். இதனால் பலர் ஒருவகைச் சுவாச நோய்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

மேலும் இந்த வீதியின் சில இடங்கள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாதவாறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் கடந்த மாதம் மல்லாவி மருத்துவமனையின் அம்புலன்ஸ் தடம் புரண்டதால் அதில் பயணித்த மருத்துவர் சிறு காயங்களுடன் உயிர்தப்பினார்.

இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளைத் துரித கதியில் மேற்கொண்டு மக்களின் அவலங்களைப் போக்க வேண்டுமென இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-415)

# குறிகாட்டுவான் - நயினாதீவு இறங்குதுறையை விஸ்தரிக்குக

## யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

குறிகாட்டுவான் - நயினாதீவு இறங்கு துறைகளின் படகுகள், சிறிய கப்பல்கள் அணைக்கத்தக்கதாக துறைமுக உட்கட்டுமானங்கள் போதுமானதல்ல.

விரைவில் குறிகாட்டுவான்- நயினாதீவு பிரதேசத்துக்கான துறைமுகமாக விஸ்தரிப்புச் செய்யப்படும். அப்போதுதான் பயணிகள், யாத்திரிகர்கள், வர்த்தகர்கள், அரச அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் பெரும் நன்மை அடைவர்.

இவ்வாறு நயினாதீவு படகுகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நயினாதீவு ஆலயத் திருவிழா தொடர்பான கூட்டம் யாழ் செயலகத்தில் இடம்பெற்றபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அரச அதிபர் சு.அருமைநாயகம் பதிலளித்ததாவது:-

நயினாதீவு இறங்கு துறை வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரியது. குறிகாட்டுவான் இறங்கு துறைமுகம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியது.

கடந்த 30 ஆண்டுகளின் பின்னர் கூடுதலான மக்களும், உல்லாசப் பயணிகளும், யாத்திரிகர்களும் வெளிநாட்டில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் குறிகாட்டுவான் ஊடாக நயினாதீவுக்கும்-நெடுந்தீவுக்கும் செல்கின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் என்பன துறைமுகங்களை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து அதற்கான வரைபடம், மதிப்பீடுகளை தயாரித்து உரிய காலத்தில் அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்.

கடந்த காலத்தில் செய்யப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்தி எதுவும் போதுமானதல்ல என்று கடற்படை அதிகாரிகளும் வேலணை பிரதேச சபையினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே திருவிழா காலத்துக்கு தற்காலிக பாலங்களை அமைத்து பின்னர் நிரந்தர உட்கட்டுமானத்திற்கான திட்டத்தை முன்வைக்க உரியவர்கள் முன்வர வேண்டும்.- என்றார்.

மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சென்ஜோன்ஸ்படை பிரிவு, பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், வேலணை பிரதேச சபை செயலாளர், வேலணை பிரதேச செயலர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை, நீர்வழங்கல் சபை பொறுப்பதிகாரி, இலங்கை மின்சாரசபை மின் அத்தியட்சகர், ஆலய பரிபாலன சபைத் தலைவர், செயலாளர் உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-41)

# குற்றச்செய்திகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

2008 ஆம் ஆண்டு கை கலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டு சம்பந்தமாக தாக்கல் செய்த வழக்கில் மனுதாரர் சரியான சாட்சியங்களைப் பதிவு செய்யத் தவறியதனால் சந்தேகநபர்கள் மூவரும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கு நீண்ட காலமாக நடைபெற்று வந்தது. விசாரணையின் போது வழக்குத் தொடுநரால் சரியான சாட்சியங்களைப் பதிவு செய்யத் தவறியதாலும் எதிரிகள் தரப்பில் சரியான முறையில் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டமையாலும் சந்தேக நபர்கள் மூவரும் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள் அதே இடத்தைச் சேர்ந்த மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். (ம-4)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 4

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த இருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

சங்கானை மதுவரிப் பரிசோதகர்களால் காரைநகர் சிவகாமி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த ஒருவர் ஊர்காவற்றுறை நீதி மன்றில் நீதிவான் ஆர். எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். சந்தேக நபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வாறு அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஒருவரையும் யாழ். மதுவரிப் பரிசோதகர்கள் நீதிமன்றில் முற்படுத்தினர். அவரும் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். (ம-4)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 4

நாரந்தனையில் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து லான்மாஸ்ரரில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் மீது ஏற்கனவே 2 குற்றச்சாட்டுக்கள் உள்ளதனால் அவர் விளக்கத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

நாரந்தனை, சரவணையைச் சேர்ந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்து மன்றில் முற்படுத்தியிருந்தனர்.

நாரந்தனையில் கட்டாக் காலிகள் நடமாடுகின்றன. அவை இறைச்சிக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் சட்ட விரோதமாகப் பிடிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே நால்வரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 4

சட்டவிரோதமாக சாராய விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கும் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

காரைநகர் சிவன் கோயிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் வரதராஜா மற்றும் தர்மலிங்கம் தர்மகுலராஜா ஆகிய இருவருக்கும் எதிராக சங்கானை மதுவரிப் பரிசோதகர்களால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் இருவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். தவிர குற்றமும் இருந்ததனால் இருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

## மண்ணெண்ணெய் முத்திரைக்கு விநியோகம்

தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள வறிய குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரண முத்திரைக்குரிய மண்ணெண்ணெய் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெற்று வருவதால் உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த 4ஆயிரத்து 470 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## ஆடுகள் அபகரிப்பு


கைதடி, ஜூன் 4

மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டு நின்ற ஆடுகளைச் சிறிய கன்ரர் ரக வாகனத்தில் வந்தவர்கள் அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று அண்மையில் கைதடி கரையோரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் மேய்ச்சலுக்காகத் தமது ஆடுகளை புற்கள் நிறைந்த கரையோரப் பகுதியில் தினமும் கட்டுவது வழமை.

இந்த நிலையில் அண்மையில் இந்தப் பகுதிக்கு வந்த சுற்றி தகரத்தால் மூடப்பட்ட 'படி' எனப்படும் சிறிய கன்ரர் வாகனம் அங்கு நின்ற ஆடுகளைத் தமது சொந்த ஆடுகள் போல் ஏற்றிச் சென்றுள்ளார்கள். இந்த நிலையில் இதனைக் கண்டோர் அச்சம் காரணமாக எதுவும் பேசாது நின்றுள்ளனர்.

நீண்ட நேரத்தின் பின் சம்பவத்தை அறிந்த ஆடுகளின் உரிமையாளர்கள் ஆடுகள் கட்டப்பட்ட இடம் சென்று பார்த்தபோதே தமது ஆடுகள் இல்லாதது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். (ம-288)



சாவகச்சேரி தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந.நவரத்தினம் நினைவாக அன்னாரது குடும்பத்தினரால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. காணிக்குரிய உறுதியை சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சட்டத்தரணி கணபதிப்பிள்ளை ஆகியோர் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கின்றனர். (ம-9)

## பறவைக் காவடி உழவு இயந்திரம் கடும் காற்றால் குடைசாய்ந்தது

தென்மராட்சி, ஜூன் 4

ஆலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பறவைக் காவடி, கடும் காற்றால் உழவு இயந்திரப் பெட்டியுடன் குடைசாய்ந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் இடம் பெற்றது. நேற்று நுணாவில் மேற்கு விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழாவுக்கு சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் இருந்து சென்றபோதே இந்த விபத்து இடம் பெற்றது. இதன்போது தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. உழவு இயந்திரப் பெட்டி உடைவடைந்ததால் வேறு உழவு இயந்திரம் வரவழைக்கப்பட்டு தூக்குக் காவடி ஆலயத்தைச் சென்றடைந்தது. (ம-9)

## மாநகர சபை காணிகளுக்கு எல்லைகள் போடத் தீர்மானம்

### விரைவில் கடைகளுக்கான பதிவுகளும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். மாநகர சபை தனக்குச் சொந்தமான காணிகளுக்கு எல்லைகளைப் போடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மே மாதக் கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் மாநகர சபைக்குச் சொந்தமான கடைகளை வைத்திருப்போரிடம் கடைகளுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைக்குச் சொந்தமான கடைத் தொகுதிகளைப் பெற்றவர்கள் அவற்றைப் பிறருக்கு விற்பனை செய்துவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர். கைமாறிய கடைகள் சில 20 லட்சம் ரூபா வரை கூட விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும் அறிப்படுகின்றது.

எனவே இதற்குத் தீர்வு காணும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வீதிக்கு குறுக்கே நின்று மண் பறிக்கும் வாகனங்கள்

### கே. கே. எஸ். வீதியில் போக்குவரத்து நெருக்கடி

வலி. வடக்கு, ஜூன் 4

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி அகலிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



வீதி அகலிப்புப் பணிகளின் போது மண் கொண்டு வந்து பறிக்கும் கனரக வாகனங்கள் வீதிக்குக் குறுக்காக நின்று மண் பறிப்பதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் வீதிக் கரையில் நின்று மண்ணைப் பறித்துவிட்டுச் செல்லும் வாகனங்கள் இப்போது நடு வீதியில் நின்று மண் பறிக்கின்றன. இதனால் பொது மக்களின் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்படுகின்றது என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக இந்த நடைமுறை மாற்றத்தால் குறித்த வீதியால் பயணிக்கும் மக்கள் பத்து நிமிடங்களுக்கு மேல் தாமதிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

இந்த நிலைமையால் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# ஹஸாரே, ராம்தேவ் இணைந்து டில்லியில் உண்ணாவிரதம்

## ஆதரவாக ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

டில்லி, ஜூன் 4

ஊழலை ஒழிக்கவும் வெளிநாடுகளில் இருந்து கறுப்புப் பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வர வலியுறுத்தியும் சமூக சேவகர் அன்னா ஹசாரேயும் யோகா குரு பாபா ராம்தேவும் டில்லியில் நேற்று முதன் முதலாக கூட்டாக இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ளனர். இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ஊழல் மற்றும் கறுப்புப் பணத்துக்கு எதிராக அன்னா ஹசாரேயும் ராம்தேவும் தனித்தனியே போராட்டம் நடத்தி வந்தனர். இந்தநிலையில் ராம்தேவின் பாரத் ஸ்வபிமான் அந்தோலன் அமைப்பு சார்பில், டில்லி ராம்லீலா மைதானத்தில் இருவரும் இணைந்து உண்ணாவிரதம் நடத்துவதாக அறிவித்திருந்தனர்.



டில்லியில் காந்தி சமாதியில் இருவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பின்னர் நாடாளுமன்றம் செல்லும் பாதையில் அமைக்கப்பட்டிருந்த உண்ணாவிரதப் பந்தலுக்கு காலை 9 மணிக்கு இருவரும் வந்தனர்.

ஊழலுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும், இந்த இருவரும் முதல் முறையாக ஒன்றாக இணைந்து உண்ணாவிரதம் இருப்பது, பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் போராட்டத்தின் போது, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எதிரான, நிலக்கரி ஊழல் குற்றச்சாட்டு குறித்த, மேலும் பல விவரங்களைப் பற்றி, இருவரும் பேசவுள்ளதாக, ராம்தேவ் ஆதரவாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பாபா ராம்தேவ், ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டபோது, அவரின் ஆதரவாளர்கள் கூடியிருந்த ராம்லீலா மைதானத்தில், நள்ளிரவில் டில்லி பொலிஸார் நுழைந்து தடியடி நடத்தி, கூட்டத்தைக் கலைத்தனர். ராம்தேவை பொலிஸார் கைது செய்தனர். பின்னர், ஹரித்துவாரில் உள்ள அவரது ஆசிரமத்திற்கு ஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டார். டில்லி பொலிஸாரின் இந்த அத்துமீறிய நடவடிக்கைக்கு, உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

சுமார் ஓராண்டு கழித்து நேற்று ராம்தேவ், மீண்டும் டில்லியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறார். அன்னா ஹசாரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்பதால், இவர்களின் ஊழல் எதிர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்து, ஆளும் காங்கிரஸ் கட்சி ஆடிப்போய் இருக்கிறது என்று ராம்தேவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உண்ணாவிரதத்தை ஆரம்பித்த நிலையில் பேசிய பாபா ராம்தேவ், வலுவான லோக்பால் பிரேரணை தேவை என்பதை வலியுறுத்தினார். மேலும் ''பிரதமர் மட்டும் நேர்மையாக இருந்தால் போதாது. அவரது அமைச்சரவையும் கூட நேர்மையானவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று'' தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஹசாரே ஆதரவாளர்கள் அரவிந்த் கெஜ்ரிவால், கிரண்பேடி உள்ளிட்டோரும் கலந்து கொண்டுள்ளனர். (வ)

# விரைவில் புதிய அறிவியல் கொள்கை

## மன்மோகன் சிங் அறிவிப்பு



கொல்கத்தா, ஜூன்4.

புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை விரைவில் அறிவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

இந்திய அறிவியல் கழகத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பிரதமர் கலந்து கொண்டு பேசினார் இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த ஆண்டை, தேசிய அறிவியல் ஆண்டாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தற்போதைய மத்திய அரசு, அறிவியல் துறையில் இதற்கு முன் எப்போதும் செய்யாத அளவுக்கு, அதிகமாக முதலீடு செய்துள்ளது. ஆனாலும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை, நாட்டின் வளர்ச்சிக்காக அதிகமாகப் பயன்படுத்தவில்லை. எனவே, தற்போதுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையில், பல மாற்றங்கள் செய்து, தற்போதைய மாற்றங்களுக்கு ஏற்ப, புதிய கொள்கையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் தரப்பிலும், அர்த்தமுள்ள வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், இந்தப் புதிய கொள்கை உருவாக்கப்படும் - என்றார். இந்த விழாவில், மேற்கு வங்க முதல்வரும், திரிணமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜியும் கலந்து கொண்டார். (வ)

# தீவிரவாதத்தை ஒழிக்கும் முயற்சியில் மாணவர்களும் பங்கேற்க வேண்டும்

## ராகுல் அழைப்பு



நாட்டின் பாதுகாப்பை அச்சுறுத்தும் தீவிரவாதத்தை வேரறுக்கும் முயற்சியில் மத்திய அரசுடன் மாணவர்கள் கைகோர்க்க வேண்டும் என்று ராகுல்காந்தி அழைப்பு விடுத்தார்.

அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ராகுல்காந்தி இரண்டு நாள் பயணமாக நேற்றுமுன்தினம் கர்நாடக மாநிலம் ஹுப்ளிக்குச் சென்றார்.

அங்கு நடைபெற்ற கட்சிக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் தெரிவித்ததாவது:-

நாட்டைக் கட்டமைக்கும் பணியில் இளைஞர்களின் பங்களிப்பு மகத்தானது. அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த இளைஞர்கள் துடிப்புடன் முன்வர வேண்டும்.

அடுத்த சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றியைத் தேடித் தருவதில் முக்கிய பங்காற்ற வேண்டும். காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டும்-என்றார் அவர். (வ)

# சி.பி.ஐ. காவலில் ஜெகன்மோகன்



ஹைதராபாத், ஜூன் 4

வருமானத்துக்கும் அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள வை.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டியை 5 நாள் சி.பி.ஐ. காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளது ஹைதராபாத் உயர் நீதிமன்றம்.

இதேவேளை தான் கைது செய்யப்பட்டது சட்ட விரோதமானது என்று அறிவிக்குமாறு ஜெகன்மோகன் தாக்கல் செய்த மனுவையும் நிராகரித்து விட்டது நீதிமன்றம்.

நேற்று தொடக்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை ஜெகன் மோகனை தங்களுடைய காவலில் வைத்து சி.பி.ஐ. விசாரிக்கலாம் என்று நீதிபதி பி.சந்திரகுமார் உத்தரவிட்டுள்ளார்.

தினமும் முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை ஜெகனிடம் விசாரணை நடத்தலாம். இந்த வழக்கில் தொடர்புடைய 2ஆவது எதிரியான விஜய சாய் ரெட்டியிடம் சி.பி.ஐ. விசாரித்தபோது என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டதோ, அதே நடை முறையை ஜெகன் விசாரணையின் போதும் பின்பற்றலாம் என்று நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டிருந்தார். (வ)



தி.மு.க. தலைவர் கலைஞரின் 89 ஆவது பிறந்ததினமான நேற்று கலைஞர், அண்ணா நினைவு இல்லத்துக்குச் சென்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

# பிரணாப் முகர்ஜியிடம் இருந்து பறிபோகிறது நிதி அமைச்சர் பதவி

## புதிய நிதியமைச்சராக ரங்கராஜன்?

பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுத் தலைவரும், ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநருமான சி.ரங்கராஜனை அடுத்த நிதியமைச்சராக நியமிக்க மன்மோகன் சிங் விரும்புவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

1991ஆம் ஆண்டு பிரதமராக இருந்த பி.வி.நரசிம்மராவ், அரசியல் கட்சி சாராத, பொருளாதார நிபுணரான மன்மோகன்சிங்கை நிதியமைச்சராக நியமித்தார். இப்போது சி.ரங்கராஜனை நியமிப்பதன் மூலம் அதேபோன்ற நடைமுறையை பிரதமர் மேற்கொள்ளவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியின் பெயர் காங்கிரஸ் தரப்பில் முன்வைக் கப்படுகிறது. இந்த விடயத்தில் அந்தக் கட்சியின் தலைவர் சோனியா காந்தி இறுதியாக முடிவு எடுத்த பின், நிதியமைச்சர் மாற்றத்தை பிரதமர் மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சி.ரங்கராஜனுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட வறுமைக்கோடு வரையறையை நிர்ணயிக்கும் குழு, எண்ணெய் விலை நிர்ணயக் குழு உள்ளிட்டவற்றுக்கு அவரை தலைவராக நியமித்துள்ளார் பிரதமர். தற்போது நாடு உள்ள நிலையில், சி.ரங்கராஜனை நிதியமைச்சராக நியமிப்பதே சரியாக இருக்கும் என்று காங்கிரஸ் தலைவர்களும் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### மாவோயிஸ்ட்டின் கண்ணியில்

# பொலிஸார் உட்பட 19 பேர் காயம்

ராய்புர், ஜூன் 4

ஜெகதால்பூரில் இருந்து ஜெயப்பூர் செல்லும் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பொலிஸ் வாகனம் மீது மாவோயிஸ்ட் அமைப்பினர் தாக்குதல் நடத்தியதில் வாகனத்தில் இருந்த 25 கைதிகளில் 19 பேர் காயமடைந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலம், ஜெக்தால்பூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 19 கைதிகளை ஒரு வழக்குத் தொடர்பாக கொண்டகான் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக 6 பொலிஸார் நேற்றுமுன்தினம் ஒரு வானில் அழைத்துச் சென்றனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய பின்பு, மீண்டும் அதே வானில் பொலிஸார் ஜெகதால்பூர் சிறை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது, ராய்ப்பூர்-ஜெகதால்பூர் தேசிய நெடுஞ்சாலையில், ஜோபா கிராமம் அருகே மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வைத்திருந்த கண்ணிவெடியின் மீது அந்த வான் ஏறிய கணத்தில் அந்த வான் வெடித்துச் சிதறியது.


இந்தத் திடீர் தாக்குதலில், 6 பொலிஸ்காரர்களும் 19 கைதிகளும் காயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் மேலதிக சிகிச்சைக்காக ராய்ப்பூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (வ)

# தனது போர்க் கப்பல்களை பசுபிக்குக்கு நகர்த்தும் அமெ.

தமது போர்க் கப்பல்களில் 60 வீதமானவற்றை ஆசிய பசுபிக் கடற்பிராந்தியத்திற்கு நகர்த்தவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் இருந்து இதனை மேற்கொள்ளவுள்ளது என அமெரிக்கப் பாதுகாப்பு செயலாளர் லியோன் பினேட்டா குறிப்பிட்டுள்ளார்.

ஆசியாவில் தமது பிரசன்னத்தை அதிகரிக்கும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என சிங்கப்பூரில் நடைபெற்ற பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



சீன ஆதிக்கத்தை கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் லியோன் பினேட்டா கூறியுள்ளார் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஆசியாவில் அமெரிக்காவின் ஆதிக்கம் கவனம் குறித்து சீனா அதிருப்தியை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் பாதுகாப்பு கொள்கைகளில் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த நவம்பர் மாதம் தெரிவித்திருந்தார்.

பிராந்தியத்தில் அதிகாரமிக்க நாடாக திகழும் சீனாவுக்கு சவால் விடுக்கும் வகையில் ஒபாமாவின் இந்தக் கருத்து அமைந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மாவோயிஸ்ட்டுகளிடையே பிளவு



காத்மாண்டு, ஜூன் 4

நேபாள மாவோயிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களில் இருந்து விலகிச் செல்வதாக கட்சித் தலைவர் பிரசண்டா, பிரதமர் பாபுராம் பட்டராய் ஆகியோர் மீது அதிருப்திக் குழுவின் தலைவரான மோகன் வைத்யா கிரண் குற்றம்சாட்டியுள்ளார். கட்சி உடையாமல் இருக்க வேண்டுமானால் பிரசண்டா பதவி விலக வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

பிரசண்டா, பட்டராய் ஆகியோர் தலைமையிலான குழுவுக்கும், வைத்யா, ராம் பகதூர் தாபா ஆகியோர் தலைமையிலான குழுவுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், அவை அனைத்தும் தோல்வியடைந்து விட்டன எனத் தெரிகிறது.

இதனிடையே வைத்யாவுக்கு ஆதரவான கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்கள் சிலர் குபோன்டோல் நகரில் உள்ள தங்களது அலுவலகத்தில் கூடி தங்களது எதிர்காலத் திட்டம் குறித்து விவாதித்தனர்.

கம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைக் காப்பதற்காக, புதிய கட்சியை நிறுவ வேண்டும் என்று அப்போது பலரும் கருத்துத் தெரிவித்தனர் எனக் கூறப்படுகிறது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைத்யா, புதிய கட்சியை அமைப்பதற்கான நடைமுறைகளை தொடங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

எதிர்வரும் 15ஆம் திகதி தேசிய அளவிலான மாநாட்டுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த மே 27ஆம் திகதிக்குள் அரசியல் சாசனத்தை உருவாக்கி முடிக்காதது பிரதமர் பாபுராம் பட்டராய் செய்த தவறு என்று கூறிய வைத்யா, அவர் பதவி விலகி தேசிய அரசு அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

## ஹூலா படுகொலைகளுக்கு விசாரணை வேண்டும்

ஜெனிவா, ஜூன் 4

சிரியாவின் ஹூலா நகரில் 106 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான சபை அழைப்பு விடுத்துள்ளது.

குறித்த நகரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதையும் மனித உரிமைகள் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அவசர கூட்டத்தொடரில் 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட மனித உரிமைகள் சபையின் 41 நாடுகள் இது தொடர்பான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

எனினும் சீனா, ரஷ்யா, மற்றும் கியூபா ஆகிய நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததுடன், மூன்று நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஹூலா நகரப் படுகொலைகளுக்கு சர்வதேச ரீதியாக கண்டனம் வெளியாகிய நிலையில், கட்டார், துருக்கி மற்றும் அமெரிக்கா ஆகியன இந்தத் தீர்மானத்தை மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்திருந்தன.

இந்தத் தீர்மானத்திற்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைத்ததை மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் வரவேற்றுள்ளார் என ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இந்தப் படுகொலைகளைக் கிளர்ச்சியாளர்களே மேற்கொண்டனர் என கூறியுள்ள சிரியத் தூதுவர், இதற்குக் காரணமானவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

படுகொலைகள் குறித்து சிரியாவிலுள்ள ஐ.நா கண்காணிப்பாளர்கள் விசாரணை மேற்கொண்டு வரும் நிலையில், இந்தத் தீர்மானம் சமநிலையற்றது என ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் கூறியுள்ளன

## சீனா அதிகாரி அமெரிக்காவில் கைது

அமெரிக்காவுக்கென உளவு பார்த்த சந்தேகத்தின் பேரில் சீன பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியொருவர் வொஷிங்டனில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் இரகசியங்களை அமெரிக்காவுக்கு கடத்தினார் என குறித்த அதிகாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு உதவி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் அமெரிக்க இராஜங்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் இது குறித்துக் கருத்துக் கூற மறுத்துள்ளார் என பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

இது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அண்மைக் காலத்தில் அமெரிக்க - சீன உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்திய மூன்றாவது சம்பவமாக இது பதிவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனாவுடன் தொடர்புபட்ட உயர்மட்ட உளவு சம்பவமாகவும் இது அமைந்துள்ளது என பி.பி.சி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பிரி. வைர விழா கொண்டாட்டங்கள்

பிரிட்டன் ராணி 2ஆம் எலிசபெத்தின் வைர விழா கொண்டாட்டங்கள், லண்டனில் கோலாகலமாக நேற்று முன்தினம் தொடங்கின. கடந்த 1952ஆம் ஆண்டு பெப்ரவரி 5இல் எலிசபெத், பிரிட்டன் ராணி ஆனார்.

1977இல் அவரது வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. 2002ஆம் ஆண்டு பொன் விழா நடந்தது. இப்போது 60 ஆண்டுகளான நிலையில் பிரிட்டன் முழுவதும் 4 நாள்கள் வைர விழா கொண்டாட்டங்கள் நடக்கின்றன.



எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முபாரக்குக்கு அந்த நாட்டு நீதிமன்றம் அளித்துள்ள ஆயுள் தண்டனையை வரவேற்றுக் கொண்டாடும் மக்கள்.

## பலஸ்தீனியர்கள் கடத்தப்படுகின்றனர்



கடந்த சனிக்கிழமை இரவு பலஸ்தீனிலுள்ள யபாத் கிராமத்தைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்திய இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படை, தேடுதல் வேட்டை என்ற பெயரில் பலஸ்தீனரின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி ஊர் மக்களைப் பயமுறுத்தி அச்சுறுத்துமுகமாக தாலிப் இப்றாஹீம் அபூபக்கர் எனும் 10 வயதுச் சிறுவனை பெற்றோரின் கதறலையோ மன்றாட்டத்தையோ பொருட்படுத்தாமல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படை கடத்திச் சென்றுள்ளது. இந்தச் சிறுவன் தவிர, இதே ஊரைச் சேர்ந்த மேலும் பல பலஸ்தீன் பொதுமக்களும் ஆக்கிரமிப்புப் படையின் விசாரணைக்காகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என உள்ளூர் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பலஸ்தீன் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள சம்பவம் பிரதேசவாசிகளிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

துல்கரீம் பிரதேசத்தில் உள்ள பொறியியல் பீட மாணவரான அலி தகத்கா (வயது 19) தன்னுடைய கல்வி நடவடிக்கைகளின் போது இயந்திரம் பொருத்தப்பட்ட பட்டம் ஒன்றைச் சுயமாக வடிவமைத்து, அதனை வானில் வெற்றிகரமாகப் பறக்கவிட்டிருந்தார். இந்தக் கல்விசார் பரிசோதனை முயற்சி தன்னுடைய உயிருக்கே அச்சுறுத்தலாய் அமையும் என அந்த மாணவர் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

மகனின் பொறியியல் திறமையைக் கண்டு பெருமிதமுற்றிருந்த மாணவனின் பெற்றோர்களின் வீடு இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினரால் உடைத்து நொறுக்கப்பட்டது. ஆக்கிரமிப்புப் படையினரால் அலி தகத்கா கடத்திச் செல்லப்பட்டார். கூடவே அவருடைய நண்பனும் பல்கலைக்கழக மாணவனுமான ஜிஹாத் அஸாமும் கைது செய்யப்பட்டான் என உள்ளூர் மக்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

## பிலிப்பைன்ஸில் பெரும் இயற்கை பேரிடர்

கடந்த சில நாள்களாக பிலிப்பைன்ஸில் பெய்து வரும் தொடர் மழை மற்றும் புயலில் சிக்கி 30 பேர் காணாமற் போயுள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கானோர் வெள்ளத்தில் சிக்கி தவித்து வருகின்றனர். இவர்களை மீட்கும் பணியில் அந்த நாட்டு இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

புயலின் தாக்கம் கடுமையாக இருப்பதால் பிலிப்பைன்ஸில் இருந்து செல்லும் விமானங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பிலிப்பைன்ஸில் சுமார் 20 முறை புயல் தாக்கம் ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு அங்கு துரித மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

## தலைப்பாகைக்கு அனுமதி

நியூ யோர்க், ஜூன் 4

நியூயோர்க்கில் உள்ள அனைத்து போக்குவரத்து அமைப்புகளிலும் பணியாற்றும் முஸ்லிம் மற்றும் சீக்கியர்களுக்கு தொப்பி, தலைப்பாகை அணிவதில் விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது என அமெரிக்க நீதித்துறை அலுவலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் நடத்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதலை தொடர்ந்து நியூயோர்க் மாகாணத்தில் பஸ், ரயில் உள்ளிட்ட அனைத்து போக்குவரத்து நிறுவனங்களில் பணியாற்றும் அனைவரும் தலையில் தொப்பி, தலைப்பாகை, தர்பன், ஸ்கார்ப், ஹிஜாப் உள்ளிட்டவை அணியும் போது அதில் போக்குவரத்து அலுவலகத்தின் சின்னம் பொறிக்கப்பட்டதை தான் அணிய வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

மார்ச் 2002இல் நடைமுறைப்படுத்தப்பட்ட உத்தரவுக்கு சீக்கியர்களும் முஸ்லிம்களும் தங்களை தனிமைப்படுத்துகின்றது எனக் கூறி எதிர்ப்பு தெரிவித்த போதிலும் சட்டத்தை வாபஸ் பெற மெட்ரோ போக்குவரத்து அமைப்பு மறுத்தது. 2004இல் இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கின் எதிரொலியாக 8 ஆண்டுகள் கழித்து முஸ்லிம்களும் சீக்கியர்களும் எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றி தலைப்பாகை, தொப்பி, ஸ்கார்ப் உள்ளிட்டவற்றை அணியலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த சீக்கிய கூட்டமைப்பின் தலைவர் அமர்தீப் சிங் இது வரை தங்கள் நம்பிக்கை அல்லது வேலை இரண்டில் ஒன்றை மட்டுமே மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருந்து சிறுபான்மையினரைக் காப்பாற்றிய தீர்ப்பை வரவேற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

## நைஜீரியா கலவரத்தில் 20 பேர் சாவு

லாகோஸ்,ஜூன் 4

நைஜீரியா தலைநகர் எல்லைப்பகுதியில் நடந்த கலவரத்தில் 20 பேர் உயிரிழந்தனர் எனவும் மற்றும் 50 பேர் காயமடைந்தனர் எனவும் செஞ்சிலுவைச் சங்கம் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. தலைநகர் அபுஜா எல்லைப்பகுதியில் நசரவா மாகாணத்தில் நேற்று முன்தினம் நடந்த கலவரத்தில் 6 ஆயிரம் பேர் வீட்டை விட்டு வெளியேறினர் எனவும் தெரிய வந்துள்ளது. கலவரம் நடந்த பகுதியில் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என செஞ்சிலுவைச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

## ஆளில்லா விமானத் தாக்குதல்

### பாகிஸ்தான் எல்லையில் 5 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், ஜூன் 4

பாகிஸ்தான் , ஆப்கன் எல்லையில் பதுங்கியுள்ள தலிபான் தீவிரவாதிகளைக் குறி வைத்து, அமெரிக்க விமானப் படை, ஆளில்லா உளவு விமானம் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. தனது எல்லைக்குள் தாக்குதல் நடத்தக் கூடாது என்று பாகிஸ்தான் தொடர்ந்து எச்சரித்து வருகிறது. எனினும், ஆளில்லா விமானத் தாக்குதலை அமெரிக்கா தொடர்கிறது. பாகிஸ்தானின் தெற்கு வாரிஸ்தான் மாநிலம் வானா பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய குண்டு வீச்சில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



கடந்த வாரம் இந்த எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள நேட்டோவின் படைத்தளங்கள் மீது தலிபான்கள் தற்கொலைத் தாக்குதலைமேற்கொண்டனர். இதற்குப் பதில் தாக்குதலை மேற்கொண்ட நேட்டோ இராணுவத்தினர் 30 தீவிரவாதிகளை சுட்டுக்கொன்றமை குறிப்பிடத்தக்கது.

## நடக்க முடியாதவர் உடற்கட்டுப் போட்டியில் சாதிக்கிறார்

விபத்தில் காயமடைந்த பின் மீண்டும் எழுந்து நடக்க மாட்டார் என மருத்துவர்களால் கூறப்பட்ட ஆஸ்திரேலியர் ஒருவர் உடற்கட்டுப் போட்டியில் மீண்டும் கலந்து கொள்ள ஆரம்பித்துள்ளார்.

குயின்ஸ்லாந்து மாநிலத்தைச் சேர்ந்த 40 வயதான லீஷரெட், 10 வருடங்களுக்கு முன்னர் பயங்கர கார் விபத்தொன்றில் படுகாயமடைந்தார்.

இடுப்பு எலும்பு, முதுகெலும்பு உடைந்தால் 3 மாதங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அவர், 5 மாதங்கள் சக்கர நாற்காலி மூலமே நடமாடினார். ஒரு வருடத்தின் பின் ஊன்றுகோலின் உதவியுடன் நடக்க ஆரம்பித்தார். அந்தக்காலத்தில் அவரின் எடை 120 கிலோவாக அதிகரித்திருந்தது.

அடுத்த சில வருடங்களில் மெதுவாக உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்த அவர், கடந்த வருடம் ஜனவரி மாதம் தீவிர உடற்கட்டுப் பயிற்சிகளை பெற ஆரம்பித்தார். 'கட்டுமஸ்தான உடலை பெறுவதற்காக எனது இலக்குகளை சிறிது சிறிதாக பிரித்துக்கொண்டேன்' என அவர் கூறுகிறார்.

போட்டியில் வெல்வதற்காக மாத்திரமல்லாமல், உடற்பயிற்சி செய்வதில் தான் குதூகலத்தை அனுபவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கிலானிக்கு பதவி முடிந்தாலும் பாதுகாப்பு இருக்கும்

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் மத்திய வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் அப்துல் ஹபீஸ் ஷேக் சமர்ப்பித்தார். அதில் இராணுவ செலவினங்களுக்கு கடந்த ஆண்டு வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டைவிட 10 சதவீதம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார். அத்துடன், ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகிய இருவரும் பதவிக் காலம் முடிந்த பிறகும் ஆயுள் முழுக்க பாதுகாப்பு அளிப்பதற்கான புதிய நிதி ஒதுக்கீடு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப் பட்டது. வரவு-செலவுத் திட்ட உரையை அமைச்சர் அப்துல் வாசித்துக் கொண்டிருந்தபோது எதிர்க்கட்சிகளான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் திடீரென கலவரத்தில் இறங்கினர். காலவரையற்ற மின்வெட்டு, லஞ்ச ஊழலுக்கு எதிராக அவர்கள் கோஷமிட்டனர். இதனால், நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது. உடனடியாக அவை ஒத்தி வைக்கப்பட்டது.

## ஒபாமா தான் அடுத்த ஜனாதிபதி - கிளின்ரன்

வொஷிங்டன், ஜூன் 4

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா மீண்டும் வெற்றி பெறுவார் என்று முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஒபாமாவும், கிளின்ரனும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.



அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமா மீண்டும் களம் இறங்குகின்றார். குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னி போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தொலைக் காட்சியில் பேட்டியளித்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் கூறியதாவது:-

தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்பதை 5 முதல் 6 விஷயங்கள்தான் தீர்மானிக்கும் என்று கருதுகிறேன். அவை நாட்டின் பொருளாதார நிலை உள்ளிட்ட தேசிய பிரச்சினைகளாகவே இருக்கும். இப்போதைய நிலையில் போட்டி கடுமையாக இருக்கும் என்று கருதப்பட்டாலும், தேர்தல் நடைபெறும்போது நிச்சயமாக ஒபாமாவுக்குதான் அதிக ஆதரவு இருக்கும். எனவே அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்படுவார் என்று நம்புகிறேன் என்றார் கிளின்ரன்.

புளோரிடா மாகாணத்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒபாமாவைவிட ரோம்னிக்கு ஆதரவு சற்று கூடுதலாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் இருவருக்கும் கடும் போட்டி இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் ஜனாதிபதியாக ஒபாமா மேற்கொண்டுள்ள சாதனைகள் அவருக்கு மீண்டும் வெற்றியைத் தரும் என்று அவரது ஆதரவாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.


# பிறந்த நாளில் நான்காம் ஆண்டு நினைவலைகள்

# யோகரட்ணம் கீதன்



**தோற்றம்**
**04.06.1980**

**மறைவு**
**31.05.2008**

கருணையே உருவமாகி பொறுமையையே பொக்கிஷமாக்கிய
பாசத்தின் உறைவிடமே! புன்சிரிப்பின் பெட்டகமே
அன்னையவள் அகவை இருபத்தெட்டுதனில்
அவள் வயிற்றை பிளந்து வெளிவந்த திருக்குமரா - கீதனே
பெற்றவர் உளம் மகிழ தலைமகனாய் மழலைப் பருவத்தில்
பரியோவான் மைந்தன் ஆனாய் - அங்கிருந்து
படிப்படியாய் ஆளும் வளர அறிவும் வளர
சுயநலமற்ற அன்போடு நட்புக்கு இடம் கொடுத்தாய்
உறவுக்குக் கை கொடுத்தாய் - கலியுகத்தில்
உன்னைப் போன்ற அன்புள்ளங்கள் வாழமுடியாது
என்பதாலோ என்னவோ - பெற்றவர் இங்கிருக்க
கொழும்பு மண்ணில் வைத்து - உன் அகவை
இருபத்தெட்டு தனில் மனித உருவில் வந்த
இயமனால் அழிக்கப்பட்டு -பெற்றவள்
நெஞ்சை பிளந்து வெளியேறினாய்
ஊர் போற்ற வாழ்ந்த மைந்தா -
உன் புகழை தடம் பதித்து சென்றதால்
உன் நினைவால் உயிர் உருகி
உன் பிறந்த நாளினை நினைவு நாளாக்கிய
மானிடர் மத்தியில் உன்னுடன் வாழ்ந்த நாள்களை
நெஞ்சில் சுமந்தபடி உன் நினைவுகளுடன் பரிதவிக்கும்
அபலைப் பெற்றோருடன்
அவதார மைத்தனாய் மீண்டும் உன் சந்ததியில்
வருவாய் என எதிர்பார்க்கும் - தங்கைமார்

**இல. 18/1, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(25)

### தியான பலன்கள்

★ மன இறுக்கம், அழுத்தம் உள்ளவர்கள் தியானத்தின் மூலம் அதனைக் குறைத்துக் கொள்ள முடியும்.

★சுவாச இயக்கம், சீரடையும்.

★ புத்தி நிதானப்படும்.

★ இரத்த அழுத்தம் இருதய உபாதை இவற்றில் குணம் தெரியும்.

★ மூளையும் உடம்பும் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது. தியானத்தின் மூலம் இழந்த சக்தியை ஈடு கட்டலாம்.

★ தியானம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திறனை மேம்படுத்துகிறது.

★ தியானம் கவலைகளை நீக்கி, நிம்மதியை உணரச் செய்யும்.

★ தியானத்தில் தீய எண்ணங்கள் விலகும்.

★ மனம் ஒரு நிலைக்கு வரும்.

★ தியானம் மனமாசுகளை எரித்து விடும்.

★ எல்லையற்ற அமைதியை, பேரானந்தத்தைப் பெற முடியும்.

### எப்படித் தியானிப்பது?

★ ஏதாவது ஒரு வடிவத்தை தியானப் பொருளாய் கொள்ள வேண்டும்.

★ தியானத்தில் அமரும்போது கை,கால்,முகம் கழுவி சுத்தமாக இருக்க வேண்டும்.

★ குறைந்தது பதினைந்து இருபது நிமிடம் தியானிக்கலாம். காலை மாலை வேளைகள் தியானிக்க உகந்தது. படுக்கப் போகுமுன் செய்கிற தியானத்தில் நல்ல உறக்கம் கிடைக்கும்.

### ஆழ்நிலை தியானம்

ஆழ்நிலைத் தியானம் செய்கிறவர் புலன்களால் ஏற்படும் புறத் தொல்லைகளையும் உணர்வுகளால் ஏற்படும் அகத் தொல்லைகளையும் அகற்றிக் கொள்கிறார்.

ஆழ்நிலைத் தியானம் நமக்குள் இருக்கும் தூய உணர்வு நிலையோடு நமக்குத் தொடர்பை ஏற்படுத்தித் தரும். முதுமையிலும் இளமையின் சுறுசுறுப்புடன் இயங்கச் செய்யும். உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். பதற்றம், நரம்புத் தளர்ச்சி, தாழ்வு மனப்பான்மையை நீக்கும். உறக்கமின்மை போன்ற பிரச்சினைகள் இருக்காது. உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்து இயல்பு நிலைக்குக் கொண்டு வரும்.

தியானத்தின் போது வெளிப்படும் ஆல்பா (Alpha) அலைகள், சிந்தனைகளைச் செம்மைப்படுத்தி மனதைக் கட்டுக்குள் வைக்கும் ஆற்றல் கொண்டது.

### பிரார்த்தனை செய்யுங்கள்

பிரார்த்தனையின் போது 'நீயே எனது புகலிடம்' என்று கடவுளிடம் சரணடைகிறோம்', என்னைக் கரையேற்று கரையேற்று' என்று நம்மை ஒப்படைப்பு செய்து கொள்கிறோம்.

நம்முடைய வேண்டுதல்களைக் கடவுள் கேட்பார். நம் வேதனைகளைத் தீர்த்து வைப்பார் என்று நம்புகிறோம். நம்பிக்கையே பிரார்த்தனைக்கு ஆதாரம். பிரார்த்தனை கடவுளுக்கும் நமக்கும் இடையே ஒரு இணைப்பு வேலையைச் செய்கிறது.

தோல்வியில் உண்டான பயம் துன்பத்தில் உண்டான கவலை போன்ற சுமைகளை பிரார்த்தனையின் மூலம் நாம் இறக்கி வைக்கின்றோம்.

பிரார்த்தனை மன இறுக்கத்தை அகற்றுகின்றது. உள்ளுணர்வைத் தூய்மைப்படுத்துகிறது. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதற்கான கூடுதல் சக்தியை நம்பிக்கையை பிரார்த்தனையின் மூலம் நாம் பெறுகிறோம்.

பிரார்த்தனையில் எண்ணங்களுக்குத் தெளிவு கிடைக்கும். மனம் வலிமையடையும்.

பிரார்த்தனை பொறாமை, பகைமை போன்ற விரும்பத்தகாத உணர்வுகளை விரட்டியடிக்கிறது. கவலைகளில் இருந்து நம்மை மீட்டெடுக்கிறது.

மனமுருகிப் பிரார்த்தியுங்கள். இறைவனை உங்கள் பக்கம் ஈர்த்துக் கொள்ளலாம். அவனருளால் புதிய நம்பிக்கையுடன் வாழ்வில் நடைபோடலாம்.

### வாழ்க்கையைக் கொண்டாடுவோம்

நாம் வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறபோது நம்முடைய தேவைகளும் பூர்த்தியாகி விடும்.

வாழ்வின் விருப்பங்களை நிறைவேற்றுவதன் மூலம் நம்முடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டுவிடலாம்.

வாழ்வின் நோக்கத்தை அறிந்தவர் தன்னை அறிந்தவர் ஆவார். வாழ்க்கை அவருக்குக் கொண்டாடத் தக்கதாயிருக்கும்.

### மாற்றங்களைக் கொண்டு வாருங்கள்

மாற்றம் அவசியமா என்று கேட்டால், 'நிச்சயமாக' என்பதே பதிலாக இருக்க முடியும்.

ஒரு புறா தொடர்ந்து தன்னுடைய கூட்டை மாற்றிக் கொண்டேயிருந்தது. கூட்டில் இருந்த கெட்ட நாற்றத்தை அது பொறுத்துக் கொள்ள முடியாமல் திண்டாடியது. அந்த மோசமான நாற்றம் நாளுக்கு நாள் அதிகரிப்பதாய் உணர்ந்தது. வயதான புறா ஒன்றிடம் சென்று தனது மனக் குறையைச் சொன்னது. குறை கேட்ட புறா அறிவும் அனுபவமும் உடையது. அது உறுதியான குரலில் சொன்னது. 'உன்னைக் கவலைக்குள்ளாக்குகிற நாற்றம் கூட்டில் இருந்து வருவதல்ல. உன்னிடம் இருந்தே வருவது. நீ கூட்டை மாற்றிக் கொண்டிருப்பதால் எதுவும் மாறிவிடாது. உன்னை மாற்றிக் கொள்' என்றது.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# மாணவர்களுக்கு கட்டாயப்படுத்தல் மூலம் கற்றல் செயற்பாடுகளை வழங்கக் கூடாது

**மாணவர்கள் தமது தகுதிக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். எந்தத் துறை தனக்கு தகுதி எனத் தோன்றுகிறதோ அந்தத் துறையைத் தெரிவு செய்து மேலதிக கற்றலைத் தொடர வேண்டும்.**

''மாணவர்களுக்கு கட்டாயப்படுத்தல் மூலம் கற்றல் செயற்பாடுகளை வழங்குவதால் உள ரீதியான பாதிப்பை அவர்கள் சந்திப்பதுடன் எதிர்காலத்தில் திடமான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடும் நிலைக்கும் தள்ளப் படுவார்கள்''.

எனவே மாணவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ற வகையில் பாடங்களைத் தெரிவு செய்து, தன்னிச்சையாகக் கற்பதற்கான வழிகாட்டல்களை ஆசிரியர்கள், பெற்றோர்கள் வழங்க வேண்டும் என நொலேஜ் யுனிவேர்சல் கல்வி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.மணிமாறன் தெரிவித்தார்.

கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக விழிப்பூட்டல் நிகழ்வு அண்மையில் கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ''உயர்தரக் கற்கைக்கான கல்வித் தெரிவு'' வழிகாட்டல் என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரக் கற்றலுக்குப் பின் உயர்தரத்தில் எந்தப் பாடத்தைத் தெரிவு செய்வது என்ற நிர்ப்பந்தத்தில் இருப்பார்கள். பெற்றோரின் விருப்பம். சமுதாயத்தில் உயர்ந்த மரியாதையைப் பெறல், ஏனைய மாணவர்களின் வழித்தூண்டுதல் போன்ற காரணங்களால் உயர்தரத்தில் உயர்வான பாடங்கள் என மதிக்கத்தக்க பாடங்களைத் தெரிவு செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இதன்போது மாணவர்கள் தமது விருப்பம், தகுதி இவற்றை மீறி கட்டாயத்தின் பெயரில் வெறும் பகட்டுக் கல்வியைக் கற்கத் தொடங்குகிறார்கள். இதனால் உள ரீதியாகப் பெரிதும் பாதிப்படைவதுடன் எதிர்காலத்தில் வேலை வாய்ப்பற்று பொழுதை வீணே கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

எனவே மாணவர்கள் தமது தகுதிக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். எந்தத் துறை தனக்குத் தகுதி எனத் தோன்றுகிறதோ, அந்தத் துறையைத் தெரிவு செய்து மேலதிக கற்றலைத் தொடர வேண்டும். பல்கலைக்கழக தகுதிக்கு மட்டும் கற்றலைத் தொடர்வதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. விரும்பிய துறைகளைத் தேர்ந்தெடுத்து தமது மேலதிக செயற்பாடுகளை நிறைவேற்ற மாணவர்கள் முன் வர வேண்டும்.- என்றார்.

(எ-14)

# புகைத்தல் எதிர்ப்பு வாரத்தையொட்டி மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி



தென்மராட்சி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினர், சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு வாரத்தையொட்டிய நிகழ்வை கடந்த முதலாம் திகதி நடத்தினர்.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 150 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது.

இந்த நிதியை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.மோகன்ராஜ், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் சூ. அலெக்சாண்டர், யாழ். மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஆ.இரகுநாதன், பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோர் வழங்கினர். படத்தில் பிரதேச செயலக கணக்காளர் மாணவி ஒருவருக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியை வழங்குகிறார்.

(எ-9)

## பதவி உயர்வு

சுன்னாகம்,ஜூன் 4

வலிகாமம் கல்வி வலயத்தின் தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக செல்வி இ.இராதா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை தமிழ் பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக இருந்து பதவி உயர்வுடன் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளராக சு.சண்முககுலகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இணுவில் இந்துக் கல்லூரி அதிபராக இருந்து பதவி உயர்வுடன் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (38)

***

தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் க.பிரேமகாந்தன் இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 ஆம் வகுப்புக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த 2010 ஜூன் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சின் செயலாளரினால் பதவி உயர்வு வழங்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-9)

## வலய மட்டத்தில் இந்துக் கல்லூரி இரண்டாமிடம்

2012 ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழித்தின மாவட்ட,வலய மட்ட திறந்த போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. மாலைக்காக வாதாடிய னமந் தன் என்னும் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்துடன் அரிச்சந்திர மயான காண்டம் என்னும் இசை நாடகம் வலய மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. (எ-14)

## வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

மாகாணநிலைத் தமிழ் மொழித்தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**கட்டுரை வரைதல் பிரிவு-2**

முதலாமிடம் ப.பவதாரகன் யாழ்.இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் இ.ஜதுசா யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தி, மூன்றாமிடம் க.கோமஸ்ராஜ் யா/ நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் த.க.பா.

**கட்டுரை வரைதல் பிரிவு-2**

முதலாமிடம் த.கேசிதா யா/உடுவில் மகளிர் கல்லூரி,இரண்டாமிடம் யோ.கேசினி யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யோ.சுஜிந்தன் யா/வேலணை மேற்கு நடராசா வித்தி.

(தொடரும்)

## மாகாண மட்டத்தில் முதலாமிடம்




வடமாகாணமட்ட பேச்சுப்போட்டியில் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி ரகுமாறன் கோபிகா மூன்றாம் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வற்றாப்பளை

# கண்ணகை அம்பாள் ஆலயம்

## வைகாசி விசாகப் பொங்கல் சிறப்புமலர் - 2012.06.04



### நல்வரமருளும் வற்றாப்பளை நாயகியே!

வன்னியல்ல வடகிழக்கையே ஆழவேண்டுமம்மா
இன்றைக்கல்ல அன்றுதொட்டு ஆட்சிபுரிபவளே
இடைநடுவில் எட்டாக்கனி என்றிருந்தோம்
படைபடையாய் வரவைத்துள்ளாய் இன்று பொங்கலிட
நடைநடையாய் நாமலைந்தோம் உனைத்தேடி
விடைதந்தாய் இன்று உனக்கு பொங்கலிட
கடைகடையாய் ஏறி பொங்கலிட வந்துள்ளோம்
விடைதந்து வரவேற்று நல்லருள் புரிவாயாக!
சாலு நல்லரிசி கொண்டு சர்க்கரை நெய்யுடனே
ஏலமதுதூவி பொங்கலிட்டு பழவகையுடன்
ஞாலமதில் உன்னடியில் படைத்திடவே
சாலவே வந்து சரியென ஏற்றிடுவாய் நீயும் தாயே!
உன் மக்கள் உனைநாடி வந்து பொங்கலிட
உன்னருகில் அரவணைத்து உட்காரவையம்மா
தேவியர் பலரிருந்தும் வற்றாப்பளையாளைத்
தாவியே பிடித்துள்ளோம் தமிழ்நாதம் ஒலித்திட

தெல்லியூர்த்தேவி

### நந்திக் கடலருகே அமர்ந்தவளே நம்மை மறந்ததேன்

நந்திக் கடலருகே அமர்ந்தவளே கண்ணகியே
நாடு மன்பர் குறைதீர்த்தருள்பவள் நீயல்லவா
பண்டு பாலர்க்கு காட்சி கொடுத்த கண்ணகியே
பாங்குடன் வேப்பம் படவாள் தரித்தவள் நீயல்லவா
மொண்டு நீரினில் விளக்கெரித்திடும் கண்ணகியே
மோதிடும் நோய் பிணி தீர்ப்பவள் நீயல்லவா
கண்டு வியந்திடும் ஆயிரம் கண்ணுடை கண்ணகியே
கண்ணீர் வாழ்விலும் எம்மை காவல் செய்பவள் நீயல்லவா!

சிலம்பேந்தி வழக்குரைத்து வாதாடிய தெய்வமே
செந்தமிழர் வாழ்விங்கு சிதைந்தபோது பேசாததேன்
வலம் வந்து முல்லை மண்ணில் உன்னைக் கும்பிட்டோம்
வாஞ்சையுடன் எமைக் காவல் செய்ய மறந்ததேன்
சூலம் வாள் சிலப்பு உடுக்கேந்தி ஆள்பவளே
சுற்றி வந்துன்னை அழுது குழறியபோது எம்மை மறந்ததேன்
நீளும் துயர் இனிமேலும் வேண்டாம் வற்றாப்பளையாளே
நிரந்தர தீர்வு தந்து எமை நீ ஆள வேண்டுமம்மா

எம்.பி.அருளானந்தன்,
பணிப்பாளர், சைவத் தமிழ்
பண்பாட்டுக் கழகம்.

### வற்றாப்பளை அம்மன் அருள் பொங்கிப் பரவட்டும்!

*உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளின் பெருஞ்சக்தியான அம்பிகை உமயவள் வற்றாப்பளையிலே ஸ்ரீ கண்ணகை அம்பாளாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அருட்தெய்வமான அம்மனுக்கு இன்று பொங்கல் திருநாள். அருள்மாரி பொழியும் கண்ணகை அம்பாள் வழிபடும் அடியார்களின் துயர்போக்கும் தெய்வமாவாள். தங்கள் துன்பமெல்லாம் களைந்து நல்வாழ்வு அருளவேண்டும் என்று இன்று அடியார்கள் பலரும் பொங்கிப்படைத்து வணங்கும் பெருநாள். ஆதிபராசக்தியான அம்பிகையைச் சரண் புகுந்தால் எல்லோருக்கும் வரந்தருவாள். அழகே வடிவான ஸ்ரீ கண்ணகை அம்பாளின் திருவருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டவேண்டும் என்று அவளின் பத்மமலர்ப்பாதம் பணிந்து ஆசிநல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். அம்மன் அருள் பொங்கிப் பரவட்டும். இன்றைய பொங்கல் நன்னாளில் எல்லோரும் சுகமே வாழ நல்லருள் பாலிக்க வேண்டுமென்று அம்மனின் திருவடிகளைப் பணிந்து சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.*

*"அம்பிகையை வணங்கினால் அருள் பெறலாம்"*

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

### வற்றா நீரில் விளக்கெரியும் வற்றாப்பளை அம்மன்

வற்றாப்பளையூர் கண்ணகை அம்மன் திருத்தலம், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வற்றாப்பளை என்னும் ஊரில் அமைந்துள்ளது. இது முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியிலிருந்து கிளை பிரிந்தமைந்துள்ள இரு பிரதான வீதிகளால் தொடுக்கப்பட்டுள்ளது. ஒரு வழி மூன்றாம் கட்டையடி பாதையாகவும் மற்றையது முள்ளியவளை அம்மன் சக்தி என அழைக்கப்படும் பாதையாகவும் உள்ளது. சுமார் மூன்று மைல் தூரம் சென்றால் பிரதான வீதியிலிருந்து கோயிலை அடையலாம். தென்னை மரங்களும், கமுகு, வாழை,மா,பலா,தோடை முதலிய மரச்சோலைகளும் நிறைந்த மணல் பரப்பில் ஒரு சோலைவனமும், நெல் வயல்கள் நீர் நிலைகள் வற்றாத நீர் ஊற்றுக்கள் சூழ்ந்துள்ளமை இந்தக் கோயிலுக்கும் கிராமத்துக்கும் அழகு செய்கின்றன. 'பத்தாம் பளை' என்பது அம்மனின் பத்தாவது தங்குமிடமாகவே மருவி வற்றாப்பளை ஆகிய வரலாறு இந்தக் கோயிலின் வரலாறு நோக்கியறிய முடிகிறது. 1956 ஆம் ஆண்டு பங்குனி மாதம் தமிழ் திகதி 6 அன்று இந்தக் கோயில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆநிரை மேய்த்து நின்ற இடைச்சிறுவர்களுக்கு அம்பாள் நேரில் காட்சி கொடுத்து தனக்கு பொங்கல் படையல் செய்யுமாறு வேண்டி நிற்க, இடைச்சிறுவர்களும் பால் அமுது பொங்கலிட்டுப் படைக்கின்றனர். விளக்கு எரிப்பதற்கு எண்ணெய் இல்லையே என ஏங்கி நின்ற அந்தச் சிறுவர்களுக்குக் கோயில் முகப்பில் காணப்படும் நந்திக் கடல் நீரினைச் சுட்டிக் காட்டிய அம்பாள் கடல் நீரெடுத்து எனக்கு விளக்கு ஏற்றி வைப்பாயாக என்று கூறுகின்றார். கடலிலிருந்து எடுக்கப்பட்ட அந்த நீரானது நெய்யாக பாவிக்கப்படுகிறது. கடல் நீரில் விளக்கு எரிகிறது. படையல் நடக்கிறது. இடைச் சிறுவர்கள் ஆரவாரித்தார்கள். அதிசயித்தார்கள். ஊரவர்களை அழைத்து வந்து காட்டி, சிறு கோயிலமைத்து வழிபட்டனர். வெள்ளை உடை தரித்த அம்மூதாட்டி தனது தலையை மயிர் வகிர்ந்து பேன் எடுத்து விடுமாறு கூறலும் இடைச் சிறுவர்கள் கிழவிக்குப் பேன் பார்த்தார்கள். சற்று நேரத்தில் கிழவி மறைந்து விடுகிறாள் யாவரும் அதிசயிக்கின்றனர். கோயிலின் முன்பக்கத்தில் பரந்து படக் காணப்படும் சிறுகடல் தான் "நந்திக் கடல்" என்னும் நாமம் கொண்டது. இந்த சிறுகடல் முல்லைத்தீவுப் பெருங்கடலுடன் தொடுவையாகவுள்ளது. மாடுகள், ஆங்காங்கே மேய்ந்து நிற்கும் வயல் வளம், கடல் வளம் பொருந்திய சூழல் அங்கு காணப்படும். குறைந்த மட்ட ஆழத்தில் கிணறு தோண்டி நீர் பெறும் வாய்ப்பினை இந்தக் கிராம மக்கள் பெற்றுள்ளார்கள்.

"சிலம்பு கூறல்" என்னும் சிலப்பதிகாரக் காப்பியம், தெய்வீகம் நிறைந்த கதையாக இங்கு கூறப்படுகிறது. மானிடக்கண்ணகி, தெய்விகக் கண்ணகைத் தேவியாகவும் சக்தி வழிபாட்டின் மகத்துவம் மிக்க தேவியாகவும் காணப்படுகிறாள். புனிதம் நிறைந்த இந்த 'சிலம்பு கூறல்' காப்பியத்தை இயற்றியவர் வெற்றிவேலன் என்றழைக்கப்படும் வெற்றிவேல் புலவர் ஆவார். மேற்படி அம்பாள் திருத்தலப் பொங்கல் விழாவன்றும் அதற்கு முன்னுள்ள ஒரு வார காலத்திலும் இந்த சிலம்பு கூறல் கோயிலில் படிக்கப் பெறும், இதை ஆர்வத்துடனும், பக்தியுடனும், கேட்போர் இவ் வாழ்வில் செல்வம் சிறக்க வாழ்கிறார்கள், அம்பாளின் அருள் கடாட்சம் இவர்களுக்கும், இவர் போல இந்நூற்கதையை தொகுத்தளித்த அறிஞர்களுக்கும், ஆர்வலருக்கும், கண்ணகையாரின் அருட்கடாட்சம் என்றும் கிடைக்கும் வெற்றி வேற்புலவர் வடஇலங்கையைச் சேர்ந்தவர் என்று அறியக்கிடக்கிறது. இந்தக் காவியத்தில் கண்ணகையாரின் கதையில் சொற்சுவை பொருட்சுவை, வர்ணனைகள், காதல், வீரம், சோகம், சிருங்காரம், பக்திப் பரவசம் உள்ளிட்ட நவரசங்களையும் இணைத்த ஒரு பெருஞ் சிறப்புக் காணப்படுகிறது.

"உறைந்திடல் காண் சோழ நகர்
உற்று வந்தேன் கதிர்காமம்"

என்பது சிலம்பு கூறலில் கண்ணகையார் கூறிய தன்னைப்பற்றிய ஒரு விளக்கமாக கூறப்பட்டுள்ளது. சோழ நாட்டை சேர்ந்தவள் நான்; கதிர்காமம் சென்று பின் இங்கு வந்துள்ளேன் என்பதைக் கண்ணகையார் விளக்குகிறார்.

"வைகாசித் திங்கள் விசாகம் கூடிய பூரணையில்
வருவேன் ஒரு நாள்"

எனவும் கண்ணகையார் கூறியமை இங்கு நோக்கற்பாலது, இதன்படியே வைகாசி மாதம் விசாகம் கூடிய பூரணை நிலவில் வருடாந்த பொங்கல் உற்சவம் கொண்டாடப்பட்டு வருகின்றது. கதிர்காமக் கரை யாத்திரை செல்லும் அடியார் கூட்டம் இந்த தலத்திலிருந்தே தமது யாத்திரையை ஆரம்பிப்பர், அதுவே முறையாக அமைந்த தல யாத்திரையாகும். எனவே கதிர்காமக் கரையாத்திரையுடன் நீண்டகாலமாக இந்த திருத்தலம் தொடர்புபட்டுள்ளமை சிறப்பாகும்.

பொங்கலுக்கு முன்னுள்ள சோமவார தினமன்று அம்பாள் தீர்த்தம் எடுக்கப்படும். கோயிலிலிருந்து பல மைல் தூரத்திலமைதுள்ள சிலாவத்தைக் கடலில் தீர்த்தம், கிரியா கரும முறைப்படி எடுக்கப்படும், தீர்த்தமானது 'தீர்த்தக் குடம்' என சிறப்புப் பெறுகிறது. தீர்த்தக் குடம் இந்தக் கோயிலுடன் தொடர்புபடும் முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு இந்தத் தீர்த்தக் குடத்தில் உள்ள கடல் நீரினை நெய்யாகப் பாவித்து விளக்குத் திரியிட்டு விளக்கு எரியும் அதிசயம் இன்றும் நடைபெறுகிறது. தொடர்ந்து ஏழு நாள்களாக இந்த விளக்கு காட்டா விநாயகர் ஆலயத்தில் எரிந்து கொண்டிருக்கும், கண்ணகை அம்பாள் பொங்கலன்று அதிகாலையில் தீர்த்தக் குடம், மடைப் பண்டங்களுடன் வற்றாப்பளை கண்ணகையாள் திருத்தலத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இறுதி இடமாக முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் தீர்த்தக்குடம் வைக்கப்படும்.

முதலாவதாக சிலாவத்தையில் உள்ள தற்காலிக கடல்கரை ஆலயத்தில் இறக்கி வைத்து இளைப்பாறி பூசை வழிபாடாற்றப்படும். அடுத்து சிலாவத்தையிலுள்ள அம்மன் ஆலயத்தில் இறக்கி வைத்து பூசை வழிபாடாற்றப்பெறும். மூன்றாவதாக, புதறிகுடா எனுமிடத்திலுள்ள ஓர் பந்தலில் இறக்கப்படும், இந்தப் பந்தல் அதற்கென அமைக்கப்பட்டது. அங்கு அடியவர் இளைப்பாறிய பின், திருக்குடமானது பவனியாக முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தை சென்றடையும், இங்கு மடை பரவி, அம்மனை கும்பத்தில் ஆவாகனம் செய்து நீர் விளக்கு எரிப்பர். வெண்கலக் குடத்தில் தீர்த்தம் எடுக்கப்படும்.



# வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயம்



## வைகாசி விசாகப் பொங்கல் சிறப்புமலர் - 2012.06.04

வன்னிப் பிரதேசத்தில் கண்ணகி அம்மனுக்குப் பலவழிபாட்டுத் தலங்கள் உள்ளன. முள்ளியவளை, வற்றாப்பளை, சிலாத்தை, கற்கிடங்கு, பனையாண்டான், அரியாமடு, கொக்கிளாய், குமுழமுனை முதலிய வன்னிக் கிராமங்களில் கண்ணகி அம்மனுக்குரிய வழிபாட்டுத் தலங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் இங்கெல்லாம் கண்ணகி அம்மனுக்குச் சிறப்பாகப் பொங்கல் விழா நடைபெறுகின்றன.

முள்ளியவளையிலும், வற்றாப்பளையிலும் நடைபெறுகின்ற பொங்கல் வழிபாடு ஏனைய இடங்களில் இல்லாத பலசிறப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. முள்ளியவளையிலே கண்ணகி அம்மனுக்கு கடல் நீரில் விளக்கேற்றி ஒருவார காலமாக நடைபெறுகின்ற சிறப்பான வழிபாட்டு மரபுகளை இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலுமே காணமுடிவதில்லை. முள்ளியவளையில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற விழாவின் இறுதி நாள் நிகழ்வு, வற்றாப்பளையில் நடைபெறுகின்றது. வன்னிப் பிரதேசத்தவர்கள் அனைவரும் ஒன்று கூடும் பிரதேசப் பெருவிழாவாக இது நடைபெறும். இந்த விழாவுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஆண்டு தோறும் வந்து கூடுவர். இதனால் வன்னிப் பிரதேசம் புதுப் பொலிவு பெறும்.

வற்றாப்பளையில் நடைபெறுகின்ற பொங்கல் விழாவுக்கு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. முள்ளியவளையிலிருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள சிலாவத்தைக் கடலில் இருந்து உப்பு நீர் எடுத்து வந்து முள்ளியவளை, காட்டா விநாயகர் ஆலயத்தில் கண்ணகை அம்மனுக்கு ஏழு நாள் முழுவதும் கடல் நீரிலே விளக்கேற்றுகின்ற அதிசயம் நடைபெறுகின்றது.

வைகாசித் திங்களில் இரண்டு வாரங்களாக நடைபெறுகின்ற பொங்கல் நிகழ்ச்சிகள் முதல் இரண்டு வாரங்களும் முள்ளியவளை காட்டாவிநாயகர் கோயிலில் வெகுசிறப்பாக நடைபெறுகின்றன. வைகாசித் திங்களில் விசாக நட்சத்திரம் கூடிய பூரணையில் வருகின்ற வாரத்தில் திங்கட்கிழமை வற்றாப்பளையில் இறுதியாக ஒருநாள் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பொங்கல் விழாவில் இது மூன்றாவது திங்கட்கிழமையாக அமைகின்றது.

பொங்கல் விழாவின் ஆரம்ப நிகழ்ச்சி முதலாவது திங்கட்கிழமை முள்ளியவளையில் இடம்பெறுகின்ற பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமாகின்றது. பொங்கல் கடமைகளைச் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் அதிகாலையில் புறப்பட்டு முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, கணுக்கேணி, குமுழமுனை, சிலாவத்தை ஆகியஏழு கிராமங்களிலிருந்தும் பூசைக்குரிய மங்கலப் பொருட்களைச் சேகரித்துவருவார். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்களை மஞ்சள் துணியிலே கட்டி கோயிலில் உள்ள வேப்ப மரம் ஒன்றிலே தொங்கவிடப்படும். இந்த நிகழ்ச்சியே பாக்குத் தெண்டல் எனப்படும்.

இரண்டாவது திங்கட்கிழமை மாலை வேளையில் முள்ளியவளையிலிருந்து சுமார் ஏழு மைல் தொலைவில் உள்ள கடற்கரைக் கிராமமான சிலாவத்தை தீர்த்தக் கரைக்குச் சென்று கடல்நீரை அள்ளிவருவதே தீர்த்தம் எடுத்தல் எனப்படும். இரவு வேளை தீப்பந்தங்களின் வெளிச்சத்துடன் பறைமேளங்கள் முழங்க கண்ணகியின் புனித தீர்த்தம் ஊர்வலமாக எடுத்துவரப்படும் போது வழியெங்கும் மக்கள் நிறைகுடங்கள் வைத்து அதனை வரவேற்று வழிபடுவார்கள். புனித தீர்த்தம் எடுத்து வரும் அன்றைய தினமே வற்றாப்பளையில் இருந்து கண்ணகி அம்மனின் உருவம் வரப்பட்டு அம்மனின் மண்டபத்தில் வைக்கப்படும்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட புனித தீர்த்தம் காட்டா விநாயகர் கோயிலிலுள்ள அம்மனுக்குரிய மண்டபத்தில் வைக்கப்படும். இதனைத் தொடர்ந்து புனித தீர்த்ததில் கண்ணகிக்கு விளக்கேற்றி விசேட வழிபாடுகள் நடைபெறும். சடங்காசாரங்களுடன் நடைபெறுகின்ற தூலி பிடித்தல் கச்சுநேர்தல், வளர்ந்து நேர்தல் முதலிய வழிபாட்டு முறைகளைப் பெருந்தொகையான மக்கள் கூடிநின்று பக்தி பூர்வமாகக் கண்டுகளிப்பர்.

தீர்த்தம் எடுத்த நாளிலிருந்து பொங்கல் முடிந்து பத்தனுனி பொங்கல் முடியும் வரை இந்தப்பகுதி மக்கள் இந்த பாட்டிற்குப் போவதில்லை. மரணச் சடங்குகளுக்கு மேளம் அடிப்பதில்லை. உரலில் உலக்கை போட்டு குத்துவதில்லை வெளியூர்களுக்கு போவதில்லை இது இந்தப் பகுதி மக்களுக்கு ஒரு கட்டுப் பாடாக இருந்தது. இத்தகைய சடங்கு ரீதியான வழிபாட்டு முறைகளைத் தொடர்ந்து ஞாயிற்றுக் கிழமை இரவு பொங்கல் நிகழ்ச்சி நடைபெறும். காலை முதல் இரவிரவாக அடியார்கள் காவடி, கரகம், பாற்செம்பு முதலியன சுமந்து ஆடியும் பாடியும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொள்வர்.

முள்ளியவளையில் இருந்து மீண்டும் கண்ணகை அம்மனின், உருவத்தையும், பூசைக்குப் பயன்படுத்திய எஞ்சிய புனித தீர்த்தத்தையும் ஏனைய பூசைப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு வற்றாப்பளைக்குச் செல்லும் பூசைக்குழுவினர் அங்கு இறுதிப் பொங்கல் நிகழ்ச்சியை நடத்துவார்கள். இவ்வாறாக அம்மன் இங்கு பத்தாவது இடமாக வந்து குடியேறியதாக ஐதீகம். ஆதலாம் இந்தவிடத்தைப் பத்தாப்பளை என அழைக்கலாயினர். காலப்போக்கில் இது மருவி வற்றாப்பளையாக மாறியது என்பது வரலாறு.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் வரலாறு சிலம்பு கூறல் காவியத்தில் நந்திக் கடல் கரையில் சிறுவர்கள் மாடுகள் மேய்த்துக் கொண்டு நின்றபோதுவிளை யாட்டுக்காக கோயில் கட்டி பொங்கல் செய்து படைத்தனர். அந்த வேளை அந்த இடத்தில் மூதாட்டி ஒருத்தி தோன்றினால் "அம்மா, நீங்கள் யார்" என பிள்ளைகள் கேட்டனர். அதற்கு அந்த மூதாட்டி "நான் சோழநாட்டை சேர்ந்தவள் கதிர்காமம் போவதற்காக இந்த வீதியால் வந்தேன் உங்கள் பொங்கலையும் பார்த்தேன். பொங்கலுக்கு விளக்கேற்றினால் சிறப்பாக இருக்கும்" எனக் கூற "விளக்கேற்றுவதற்கு எண்ணெய் இல்லையே" என்று சிறுவர்கள் சொல்ல "நந்திக்கடல் உப்பு நீரை அள்ளி விளக்கேற்றுங்கள்" என்று மூதாட்டி சொன்னார். சிறுவர்களும் அவ்வாறே செய்த போது விளக்கு பிரகாசமாக எரிவதைக் கண்டு அதிசயித்தனர். எனது பெயர் கண்ணகி. வைகாசி மாதத்தில் பூரணைத் தினங்களில் பூசை செய்தால் நான் வருவேன். உங்கள் குறைகள் தீரும். கேட்டவரங்கள் கொடுப்பேன் என்று கூறி கண்ணகித் தெய்வமான மூதாட்டி மறைந்தாள் என வரலாறு கூறுகின்றது.

திங்கட்கிழமை இரவு பொங்கல் முடிந்ததும் மறுநாள் செவ்வாய்கிழமை வற்றாப்பளையிலிருந்து கதிர்காம யாத்திரிகர்கள் கூட்டம் கரையோரமாகத் தமது பயணத்தைத் தொடர்வார்கள். செல்வச் சந்நிதி முருகன் கோயிலிலிருந்து கதிர்காமம் நோக்கி புறப்பட்ட யாத்திரிகர்கள் கொம்படி வழியாக வற்றாப்பளைக்கு வந்து கூடுவார்கள். வன்னிப்பிரதேச யாத்திரிகர்கள் பொங்கல் தினத்தில் இவர்களோடு இணைந்து தமது பயணத்தை ஆரம்பிப்பார்கள். ஊர்மூத்த நயினார் என்று பரராசசேகர மன்னனால் பராமரிக்கப்பட்டும் காட்டா விநாயகர் என்று பண்டைச் சிறப்புடன் விளங்கியும், போர்த்துக்கேயப் படையினருக்கு கந்தனைக் காட்டாமல் மறைத்து காட்டா விநாயகர் ஆகியும் சிறப்புற்ற முள்ளியவளை காட்டா விநாயகர் கோயிலில் கண்ணகிக்கு கடல் நீரில் விளக்கேற்றி வன்னிப் பிரதேசம் எங்கும் ஒன்று கூடி நிற்க ஊர்ப்பெருவிழா நடைபெறுகின்றது.



### அடியவர் வாழ்வில் சுபீட்சம் பொங்கட்டும்

ஆதிபராசக்தியான அம்பிகை அடியார்க்கு அருள் புரியும் நோக்கில் வற்றாப்பளையிலே ஸ்ரீ கண்ணகை அம்மனாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள். இந்தக் கண்ணகை அம்மனின் அருமையும் பெருமையும் எழுத்தில் அடங்காது. வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கி, துன்பம் துடைக்கும் அருட்தெய்வமாக இங்கே அருட்காட்சி தருகின்றாள். அருள் வடிவான அழகுத் திருமேனி காட்டும் அம்மனுக்கு இன்று பொங்கல் திருநாள். அன்பு வயப்பட்ட அடியார்கள் எல்லோரும் இன்று அணிதிரண்டு அம்பிகைக்கு இனிய பொங்கல் பொங்கிப்படைத்து அருள் பெறும் திருநாள். கஷ்டம் நீக்கி அருள்பாலிக்கும் அடியார்களின் இஷ்டதெய்வமான அம்பிகையின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று அவள் கமல மலர்த்திருப்பாதம் பணிந்து அருளாசி நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். வற்றாப்பளை அம்மனின் அருள் வற்றாது பொங்கிப்பெருகி அடியார் வாழ்வில் சுபிட்சம் பொங்க, மங்களம் பொங்க, மகிழ்ச்சி பொங்க வளம் சேர்க்க வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி வாழ்த்துகின்றோம். "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

### துன்பங்கள் துடைத்த மகாசக்தி



வற்றாத அருள் சுரக்கும் வற்றாப்பளை அம்பாளின் திருவருளை அறியாதவர்களில்லை. நீர் விளக்கேற்றிப் பொங்கிப் படைத்து அடியவர்கள் ஆனந்த வாழ்வு பெறும் புண்ணியதலம். பட்டிப் பசுக்களின் பாலாபிஷேகமும், காவடி ஆட்டமும், பல்லாயிரம் பக்தர்களின் வழிபாடும் இத்திருக்கோயிலின் மேன்மையை வெளிப்படுத்தும் பாரம்பரிய கிராமிய வழிபாட்டின் தொன்மைச் சிறப்பை வற்றாப்பளையில் இன்றும் காணலாம். பறங்கியரை பம்பரமாய் ஆடி விரட்டிய தேவதை. நடமாடும் தெய்வமாக மூதாட்டி வடிவில் பலர் துன்பம் துடைத்த மகாசக்தி. பிற சமயத்தவரும் அஞ்சி வழிபாடு செய்யும் உன் ஆற்றல் அதிசயம் நிறைந்தது. வாழ்வு கேட்டு, வரம் கேட்டு வற்றாப்பளைத் தாயிடம் வருபவர்கள் தோற்றுப் போவதில்லை. நீதியை நிலைநாட்டி மதுரையைப் புனிதப்படுத்திய கண்ணகைத் தாயே எம் மண்ணிலும் நீதி நிலைத்திட நிம்மதி கிடைத்திட நீ வரம் தரவேண்டும் என்று இந்நாளில் பிரார்த்தித்து வணங்கி வாழ்த்துகிறேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்,
தலைவர் , ஸ்ரீ துர்க்காதேவி, தேவஸ்தானம், தெல்லிப்பழை.

**நல்லூர் சரவணா ரெக்ஸ்**
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணத்தில்: இல.770,772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
வடமராட்சியில்: இல.171, பிரதான வீதி, நெல்லியடி. 021 226 2992
T.P 021 222 0421

**ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வேல்முருகன் வணிக நிலையம்**
இல.56A (378), இல.295 (21),
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9437

**பட்டாபி படமாடம்**
இல.64, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம். தொ.பே 021 222 7821
இல. 225, 227, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 4351

**சாரங்கா நாணயமாற்று சேவை**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6972
**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 6972, Fax no- 2228869

**L Kiruba Learners**
(Govt.approved Driving Training School)
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353 021 492 3200
ஏ9 வீதி, சாவகச்சேரி 021 492 3202 021 320 1818
விசுவமடு 021 320 1515
நெல்லியடி 021 300 6550 021 492 3201
கிளிநொச்சி 021 228 5505

**விவாஹாஸ்**
உயர் தரத்துடன் டிஜிற்றல் பனர் பிறிண்டிங்
திருமண அழைப்பிதழ்கள்
273,275, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலையின் பின்புறம்)
தொ.பே. 021 221 9999

சிக்கனமான சலவைக்கும் தூய வெண்மைக்கும்
**மில்க் வைற்**
நீல சோப் பாவியுங்கள்
மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
527, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 1497

# இயமன் கேட்ட கேள்வி

இயற்கையின் நடைமுறை உயிர்களின் விருப்பத்துக் கெல்லாம் வளைந்து கொடுக்காது என்பதை விளக்கும் ஒரு கதை இது,

ஒரு சமயம் இயமன் இந்தப் பூலோகத்துக்கு வந்தார். வந்த அவர் ஒரு கல்யாணம் நடந்து கொண்டி ருந்த வீட்டுக்குள் நுழைந்தார். யாரைத் தேடிக்கொண்டு அவர் அங்கு வந்தாரோ தெரியவில்லை. ஆனால் அந்தக் கல்யாண வீட்டுக்குள் நுழைந்த இயமன் வாசலில் உள்ள கதவு ஓரமாக நின்று கொண்டிருந்த ஓர் எலியைக் கண்டுவிட்டார் உடனே அந்த எலியைப் பார்த்து இயமன், ''நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று மிகுந்த ஆச்சரி யத்துடன் கேட்டார்.

அப்படிக் கேட்டுவிட்டு அவர் தன்போக்கில் கல்யாண வீட்டுக்குள் சென்று விட்டார்.

இவ்வாறு யமன் கேட்டதையடுத்து எலி கடுமையாக யோசித்துப் பார்த்து, ''இயமன் என்னைப் பார்த்து நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று ஆச்சரியத்து டன் கேட்டுவிட்டுப் போகிறாரே. அப்படியானால் நான் இந்தநேரம் எமலோகத்தில் இருக்கவேண்டிய ஆளா? என்று நினைத்தது.

அந்த எண்ணம் காரணமாக எலிக்கு மரண பயம் வந்துவிட்டது. உடனே அது அழ ஆரம்பித்தது.

வெளியே வந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் ஒரு பருந்து அங்கே பறந்து வந்தது. எலியைப் பார்த்த பருந்து அதன் அருகில் சென்று ''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டது.

பருந்திடம் எலி, இயமன் நீ '' இங்கேயா இருக்கிறாய்?' என்று என்னைக் கேட்டு விட்டுப்போனார் என்று விஷ யத்தைச் சொல்லி அழுதது. அதைக்கேட்ட பருந்து சிரித்துக்கொண்டே ''கவலைப் படாதே உனக்கு ஏதாவது கெடுதல் வரவேண்டுமானால் அது என்னால்தான் வரவேண்டும். ஆனால் நான் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யமாட்டேன் என்று நான் உனக்கு இப்போதே வாக்குறுதி தருகிறேன், தைரியமாக இரு'' என்று கூறியது.

''இருந்தாலும் இயமன் திரும்பி வரும்போது என்னைத் தூக்கிக் கொண்டு போய்விட்டால் நான் என்ன செய்வது என்று எலி கேட்டது. அதற்கும் ஒரு வழி இருக் கின்றது. நீ என்னுடன் உடனே புறப்படு. நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் பத்திரமாக ஓரிடத்தில் ஒளித்து வைத்துவிடுகிறேன்'' என்று பருந்து கூறியது.

சரி என்று கூறி எலி பருந்துடன் புறப்பட்டது.

பருந்து எலியைத் தூக்கிச் சென்று ஒரு மலையுச்சியில் உள்ள பாறை ஒன்றின் பின்புறம் இருந்த ஒரு பொந்தில் பத்திரமாக மறைத்துவிட்டது.

பின் பருந்து திரும்பவும் அந்தக் கல்யாண வீட்டுக்கே வந்து சேர்ந்தது. அந்தச் சமயத்தில் வெளியே வந்து கொண்டிருந்த இயமன் கதவு ஓரமாக அந்த எலியைத் தேடினார். எலி அங்கில்லை. அப்போது அந்தப் பருந்து சிரித்துக்கொண்டே யமனிடம் சென்று, ''நான்தான் எலியைப் பத்திரமாகத் தூக்கிச் சென்று மலையுச்சியின் பாறைமேல் பாதுகாப்பாக விட்டுவிட்டு வந்திருக் கிறேன்'' என்று விசயத்தைக் கூறியது.

அதைக் கேட்டதும் இயமன் 'அப்பாடா' என்று பெரு மூச்சு விட்டார். பின்னர் கூறினார். ''அதுதானே பார்த்தேன், இன்றைக்கு இந்த நேரத்தில் அந்த எலிக்கு மலையுச்சியில் பாறை மறைவில் இருக்கும் ஒரு பூனையால் மரணம் ஏற்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படியிருக்கும்போது அந்த எலி இங்கே நின்றுகொண்டிருக்கிறதே என்று. அதனால்தான் ''நீ இங்கேயா இருக்கிறாய்?'' என்று எலியிடம் கேட்டேன். இந்த நேரம் அங்கே எலியின் கதை முடிந்திருக்கும்'' என்றார் இயமன்.




இந்தக் கதையில் இருந்து இயற்கையின் கணக்கு எப்போதும் சரியாகவே முடியும் என்பது புலனாகிறது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மீள்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*






பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தால் யுவதிகளுக்கான மூன்றாம் கட்டதையல் பயிற்சி நெறியும் கணினிப் பயிற்சி நெறியும் வழங்கப் பட்டு வருகிறது.

பின்வரும் செயற்றிட்டங்களை எதிர்காலத்தில் மேற் கொள்ளவுள்ளனர்.

✱ பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இயங்கும் பாடசாலைகளில் கற்கும் வறிய மற்றும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்.

✱ குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் வறிய குடும்பங்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்.

✱ குடும்பத் தலைவர்களை இழந்த மற்றும் நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வினை மேம்படுத்த வாழ்வாதார உதவிகளை வழங்கல்.

✱ பிரதேசத்தில் இயங்கும் 20 முன்பள்ளிகளைச் சேர்ந்த 453 சிறார்களுக்கு போசாக்கு உணவு தினமும் வழங்கல்.

✱ பிரதேசத்தில் முதியோர் இல்லம், பொது நூலகம், பேரவை அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால் பளை நகரை அண்டிய பகுதியில் அல்லது ஏ-9 வீதியுடன் அண்டிய பகுதியில் காணி உள்ளவர்கள் அன்பளிப்பாகவோ அல்லது நியாயமான விலையில் வழங்கினால் சங்கம் தனது சேவையாக விஸ்தரிக்க ஏதுவாக இருக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கு உதவவென லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தினர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு தினமான 2012.06.23 ஆம் திகதி தென்னங்கீற்று என்னும் நிகழ்வை லண்டன் லான்பிரான்ஸ் பாடசாலையில் நடத்தவுள்ளனர்.


இந்த நிகழ்ச்சி மூலம் கிடைக்கும் நிதி அனைத்தும் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை ஊடாக பிரதேச மக்களுக்கு வழங்கப் படுமென லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராசையா இராசலிங்கம், இணைப்பாளர் தம்பாப்பிள்ளை லோகநாதன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

(முற்றும்)

**தென்னவன்**

# போரின் கொடுமையால் பொலிவிழந்த எழில்மிகு இத்தாவில் கிராமம்

பளை நகருக்கு அடுத்தபடியாக ஏ-9 வீதியுடன் இணைந்த குட்டி நகரமாகத் திகழ்ந்த இத்தாவில் சந்தி போரின் கொடுமையினால் பொலி விழந்து பற்றைக்குள் கற்குவியல் களுடன் காணப்படுகிறது.



இத்தாவில் சந்திக்கும் முருகன் கோயிலுக்கும்

பளையிலிருந்து முகமாலைக்கு வரும் வழியில் 3 மைல் கல் தொலை வில் இத்தாவில் சந்தி உள்ளது. இதில் இத்தாவில் வேம் பொடு கேணி, முகமாலை ஆகிய கிராமங் களினதும் அதன் அயல் கிராமங்க ளான கச்சார் வெளி, அரசர் கேணி, அம்பளாவளை போன்ற இடங்களி லும் குட்டி நகமாகவும் திகழ்ந்தது. இத்தாவில் சந்தியில் 7 வட்டாரங்களைக் கொண்ட முகமாலை கிராம சபை அலுவலகம், நூல் நிலையம், ஆயுள்வேத மருந்தகம் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டடம், வேம்பொடுகேணி சீ.சீ. த.க.பாடசாலை, பச்சிலைப் பள்ளி ப.நோ.கூ.சங்க கிளைக் கடை, சரஸ்வதி சனசமூக நிலையம் வர்த்தக நிறுவனங்கள், பஸ் தரிப் பிடம் போன்றவை இருந்தன.

> பளையிலிருந்து முகமாலைக்கு வரும் வழியில் 3 மைல் கல் தொலைவில் இத்தாவில் சந்தி உள்ளது.

இந்தக் குட்டி நகரம் முக மாலை, இத்தாவில், வேம்பொடு கேணி, கச்சார் வெளி, செல்வபுரம், நவுணவெளி, இந்திராபுரம், அம்ப ளாவளை, அரசர் கேணி, இத்தா வில் ஆகிய பகுதிகளில் வதியும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இட மாகத் திகழ்ந்தன.

இத்தாவில் சந்தியில் இருந்த வேம்பொடு கேணி சீ.சீ.த.க. பாடசாலை இந்தக் கிராமங்க ளின் மாணவர்களுக்கு கல்வி அறிவினைப் புகட்ட, ப.நோ.கூ. சங்கக் கிளை மேற்படி கிராம மக்களின் நிவாரணத் தேவைகளுக்கு பயன்படுத்தப் பட்டன.

இத்தாவில் சந்தியிலிருந்து அரசர் கேணிக்கு செல்வதற்கான பிரதான வீதி அப்போதைய கிராம சபை காலத்தில் அமைக்கப்பட்டு மக்களின் போக்குவரத்துத் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த வீதியில் செல்லும் போது எந்த நேர மும் நிழல் தரக் கூடிய மரங்கள் வீதிகளில் காணப் பட்டன. இந்த வீதியில் ஏ-9 வீதியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் பளை நகர்ப்பகுதியில் உணவு நிலை யம் நடத்திய நாகலிங்கம் என்பவரால் பராம ரிக்கப்பட்டு அழகிய கட்டடங்களுடன் முருகன் கோயில் இருந்தது.

இத்தாவில் சந்திக்கும் முருகன் கோயிலுக்கும் இடையில் ஒரு புறம் விளையாட்டு மைதா னம், பாவற்காய் தோட் டம், குடியிருப்பு மனை கள், சதாபுரம் குடியேற்றத் திட்டம், புனித பார்பரம்மா தேவாலயம், கத்தோலிக்க இடுகாடு, முருகன் கோயில் ஆகியவையும், மறுபக் கத்தில் வேம்பொடு கேணி சீ.சீ.த.க. பாடசாலை, தென்னந் தோட்டங்கள், குடியிருப்புகள் போன் றவை காணப்பட்டன.

இந்த இடங்கள் அனைத் தும் இன்று பற்றைக் காடாகக் காணப்படு கின்றன. குடியிருப்பு மனைகள், பாடசாலை, ப.நோ .கூ.சங்கக் கிளைக் கடை, சன சமூக நிலை யம், பஸ்தரிப்புக் கட்டடம், தேவாலயம், முருகன் ஆலயம் ஆகியன இருந்த இடம் தெரியாத அளவுக்கு அழிவடைந்து பற்றைக் காடுகளாகக் காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கில் காணப் பட்ட தென்னை மரங்களில் இன்று ஒரு மரத் தைக்கூடக் காணவில்லை. ஒரு மைல் தூரத்தில் தலையில்லாத பனை மரங்களை இடையி டையே காணக்கூடியதாக உள்ளன.

முருகன் ஆலய நிர்வாகத்தினர் ஒரு வருடத் திற்கு முன்னர் படைத்தரப்பினருடன் தொடர்பு கொண்டு பல ஆயிரக் கணக்கான ரூபா செல வழித்து அழிவடைந்து பற்றைகளால் மூடப்பட்டி ருந்த ஆலய வளாகத்தினை துப்பரவு செய்து பிரதி வெள்ளிக்கிழமைகளில் பூஜை நடத்தி வருவ தாகத் தெரிவிக்கப்பட்டது.

(முற்றும்)

# குடிதண்ணீர் விநியோகத் தடையால் துறை நீலாவணை மக்கள் கொதிப்பு

## அவர்கள் வீதியில் இறங்கிப் போராட்டம்

எருவில்,ஜூன்4

மட்டக்களப்பு மாவட்டத்தின் துறைநீலாவணைக்கு கடந்த நான்கு வருடங்களாக வழங்கிவந்த குடிதண்ணீர் விநியோகம் ஒழுங்காக மேற்கொள்ளப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அம்பாறை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகம் சீரில்லாத நிலை குறித்து அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரிடம் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் வகையில் அம்பாறை மாவட்ட நீர்வழங்கல் அதிகாரசபையின் பொறியியலாளர் பெரிய நீலாவணையிலுள்ள தூர்ந்து



போன கிணற்றில் இருந்து குடி தண்ணீரை விநியோகம் செய்ய முற்பட்டபோது அதனைப் பொது மக்கள் நேற்று முன்தினம் காலை தடுத்து நிறுத்தினர்.

இந்தநிலையில் பொது மக்களுக்கும் பொறியியலாளருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலையடுத்து குடிதண்ணீர் விநியோகத்தை நிறுத்தப்போவதாகத் தெரிவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின்வேண்டுகோளுக்கு அமையவே தான் இந்த விநியோகத்தை செய்ய முற்பட்டதாக பொறியியலாளர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவிடம் கேட்ட போது; ''துறைநீலாவணை கிராமம் நீண்டகாலமாக குடிதண்ணீர் பிரச்சினை உள்ள கிராமமாகும். கடந்த காலங்களில் இந்தப் பிரச்சினையை எந்த அரசியல்வாதியும் கவனிக்காத நிலையில், பவுசர் மூலம் குடிதண்ணீர் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டேன்.

ஆனால் தொடர்ந்து பவுசர் மூலம் நீர் வழங்குவது சாத்தியமற்றது என குறித்த பொறியியலாளர் தெரிவித்தார். அதன் காரணமாக பெரிய நீலாவணையிலுள்ள கிணறு மூலம் நீர் வழங்க முடியும் என்று அவர் கூறினார்.

இந்தநிலையில் துறை நீலாவணையில் உள்ள ஆலயம் ஒன்று குறித்த கிணற்றில் இருந்து குடிதண்ணீர் விநியோகத்தை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு பெரிய நிலாவணையில் உள்ள கிணற்றில் இருந்து நீர் வழங்குவதாக இருந்தால் பொது மக்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்தாலோசித்து அனுமதி பெற்று அதை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தேன்''-என்றார்.

இதுதொடர்பில் குறித்த பொறியியலாளருடன் தொடர்பு கொண்ட போது அவர் தொலைபேசியைத் துண்டித்ததனால் அவரிடமிருந்து தகவலைப்பெற முடியவில்லை.

(ச-31)

## பெண்களின் மரணத்தில் மர்மம்

### பொலிஸார் தகவல்

இரத்தினபுரி,ஜூன்4

கஹவத்தையில் வீடொன்று தீப்பற்றி, இரண்டு பெண்கள் உயிரிழந்த சம்பவத்துக்கான காரணம் இன்னும் மர்மமாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 58 வயது, 51 வயதுடைய இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் வெவ்வேறு அறைகளில் வசித்தமை விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. ஆனால் தீயில் கருகிய அவர்களின் உடல்கள் ஒரே அறையில் காணப்பட்டன. எனினும் இந்தத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் இந்தப் பெண்கள் பல வருடங்களாக வசித்தவர்கள். இவர்களில் ஒருவர் திருமணம் செய்யவில்லை. மற்றையவரின் கணவர் சில வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார் என்று பொலிஸார் கூறினர்.

கஹவத்தையில் கடந்த நான்கு வருடங்களில் கொலைகள் மற்றும் மர்ம மரணங்களால் 12 பெண்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வாகன விபத்தில் இருவர் சாவு

மட்டக்களப்பு,ஜூன்4

மட்டக்களப்பு, காத்தான்குடியிலிருந்து சென்ற வான் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விபத்திற்குள்ளானதில் வானில் பயணித்த இருவரும் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளனர்.

தம்புள்ள பிரதான வீதியில் குறித்த வான் லொறியொன்றுடன் மோதியே இந்த விபத்து ஏற்பட்டது. காத்தான்குடியைச் சேர்ந்தவர்களான வானின் சாரதி எம்.ஏ.லத்தீப், எம்.நிப்றாஸ் ஆகியோரேஇறந்தவர்கள்என்று காத்தான்குடி வான் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.சம்சுதீன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருட்டுடன் தொடர்புடைய நபர் கைது

உடவலவ,ஜூன்4

திருட்டுச் சம்பவத் துடன் தொடர்புடைய நபர் ஒருவர் உடவலவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

உடவலவ பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அவர்கள் மேற்கொண்ட தேடுதலின்போதே இந்தச் சந்தேக சந்தேக நபரிடமிருந்த தங்கச் சங்கிலி ஒன்று பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

## முதலையைக் கண்டு மக்கள் பதற்றம்



மட்டக்களப்பு,ஜூன்4

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்துக்குட்பட்ட மகிழூர்முனை கிராமத்துக்குள் முதலை ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு புகுந்ததால் கிராம மக்கள் பதற்றமடைந்தனர்.

கிராம இளைஞர்கள் முதலையைப் பிடித்துக் கட்டி வைத்துள்ளதுடன் அதனை பொலிஸாரிடம் ஒப்படைக்க முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வெள்ள இடர் ஏற்பட்ட காலத்தில் பல முதலைகள் ஊருக்குள் புகுந்து விவசாயிகளின் நீர் நிலைகளில் வாழ்கின்றன. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு குறித்த பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற நபரொருவரை முதலை தாக்கியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

(ச)

## மதுபோதையில் குழப்பம் பிரதேச செயலர் கைது

மொனராகலை,ஜூன்4

மொனராகலை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட குழப்ப நிலையைத் தொடர்ந்து பிபில பிரதேச செயலர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பிபில பிரதேச செயலர் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிக்கு மதுபோதையில் மொனராகலை வைத்தியசாலைக்குள் அனுமதியின்றி பிரவேசித்துள்ளார். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பின்னர் குறித்த பிரதேச செயலாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகஅவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று முன்தினம் வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## காட்டுப் பகுதியில் எலும்புக்கூடுகள்

மஹியங்கனை,ஜூன்4

மஹியங்கனை பிரதேச காட்டுப் பகுதியில் இரண்டு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த எலும்புக் கூடுகள் துணிகளால் சுற்றப்பட்டு பொலித்தீன் பைகளில் போடப்பட்ட நிலையில் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த எலும்புக் கூடுகள் 22 வயது ஆண் மற்றும் 18 வயது பெண்ணினுடையவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த ஆண் குருவிட்டென்ன பிரதேசத்தையும் பெண் மஹியங்கனை பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எலும்புக் கூடுகள் தற்போது பதுளை பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி காணாமற் போனதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குளத்தில் மூழ்கி மாணவன் சாவு

திருகோணமலை,ஜூன்4

திருகோணமலை, கிண்ணியா பகுதியிலுள்ள குளத்தில் மூழ்கி 17 வயது மாணவன் உயிரிழந்துள்ளார். மாணவனின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவன் சிறிபிட்டி குளத்தில் நீராடச் சென்ற சந்தர்ப்பத்திலேயே இந்த இடர் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் ஒத்துழைப்புடன் சடலம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

## விபத்தில் மாணவன் சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இடம்பெற்ற விபத்தில் மாணவரொருவர் சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் தெய்வநாயகம் சியாம்பவன் (வயது 16) என்ற மாணவரே இறந்தவராவார்.

மஞ்சள் கடவையைக் கடக்க முற்பட்ட இந்த மாணவன் மீது வாகனமொன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. ஒரு வாகனத்தை மற்றுமொரு வாகனம் முந்திச்செல்ல முற்பட்டபோதே குறித்த விபத்து இடம்பெற்றதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

சடலம் செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விபத்துத் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். (ச-31)



நாவிதன்வெளி, சவளக்கடை கிராமத்தில் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு சமூக சேவையாளர் பேராசிரியர் எம். ராஜேஸ்வரன் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். (ச)

## தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** துணிச்சலான மன நிறைவோடு காரியங்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். முக்கிய நபரின் சந்திப்பு, சில காரியங்களை எளிதாக முடிக்க ஏதுவாகும். அலுவலகப் பணிகளில், தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வீட்டுச் செலவுக்கு வைத்த பணம் வேறு வழியில் செலவாகும்.

**இடபம்:** எப்படி ஆகுமோ என்று பயந்த விடயம் ஒன்று நல்லவிதமாக முடிவுக்கு வரும். கடிதங் கள் மூலம் எதிர்பார்த்த முக்கிய செய்திகள் வந்து சேரலாம். நீண்ட நாள்களாகக் கொடுக்க வேண்டிய கடன் மிகுதி ஒன்றைக் கொடுத்துத் தீர்ப்பீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள், அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர். கூட்டு முயற்சிகளில் வெற்றி உண்டு.

**மிதுனம்:** உங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் மகிழ்ச்சி தரும். பணியில், பளு கூடிய போதும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். ஒரு காரியத்துக்காக திட்டமிட்ட பணம் ஒன்று, மற்றொரு காரியத் திற்காகப் பயன் படுத்த வேண்டியிருக்கும். தொழிலில், சிற்சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். நண்பர் ஒருவரின் பணிக்காக, உங்களுக்கு அலைச்சல் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** உங்களின் மனதில் குழப்பம் சற்றுக் கூடுதலாகவே காணப்படும். குழப்பத்தைத் தவிர்த்து, பணியை வரிசைப்படுத்தி செயற்படுத்துங்கள், எதிர்பார்த்த வரவுகள் சற்று தாமதப்படும். வியாபாரத்தில் மாற்றங்களுக்கு முயற்சிப்பீர்கள். தொழிலில் புதிய தொடர்புகள் ஏற்படும்.

**சிங்கம்:** மன உற்சாகம் தரும் நிகழ்ச்சிகள் அதிகம் இருக்கும். பற்றாக்குறை வரவுகள் என்றபோதும், தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் சிரமம் இருக்காது. உறவினர் ஒருவரின் வருகை சில சங்கடங்களை ஏற்படுத்தலாம். வியாபாரத்தில் எதிர்பார்த்தது ஒன்று, நடந்தது ஒன்றாக இருக்கும்.

**கன்னி:** திடீர் பணவரவுகளைப் பெறலாம். பிரச்சினைகளை தைரியமாக எதிர்கொண்டு சாதனை படைப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் மகிழ்ச்சி, சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். மதிப்பு, கௌரவத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**நாளை**

வைகாசி 23 செவ்வாய்க்கிழமை 05.06.2012
திதி: பிரதமை பி.ப 03.08 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.ப. 10.03 வரை
சுபநேரம்: 10.22- 11.52 வரை
ராகு காலம்: 02.52- 04.22 வரை

**துலாம்:** விரோதங்கள் விலகி, பாசம் அதிகரிக்கும் நாள். எப்படி ஆகுமோ என்று பயந்த விடயம் ஒன்று, விரைவில் முடிவுக்கு வரலாம். பெற்றோர், உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர். வெளியூர்களில் இருந்து வரும் சிலர், நல்ல செய்திகளைச் சொல்லலாம். உத்தியோகத்தர்கள் நிதியுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்:** தாமதமாகச் செயற்பட்ட காரியங்கள் நன்மைக்கே என்று எண்ணும் படியாக இருக்கும். செலவுகளுக்குத் தகுந்த வரவு வரும். மனைவியின் ஆலோசனைகளால் பயன் இருக்கும். அலுவலகப் பணிகளில் சலுகைகளுக்கான அறிகுறியும், தொழிலில் வளர்ச்சியும் காணப்படும்.

**தனுசு:** சரியான திட்டத்தோடு, ஒவ்வொரு காரியங்களில் செயற்பட்டாலும் தடை, தாமதங்கள் தவிர்க்க முடியாது. குடும்பத்தில், எந்த விடயத்தையும் அமைதியாகக் கையாளுங்கள். தொழில் வகையில், சற்று அலைச்சலும் எதிர்பார்த்த லாபமும் வரும். உறவினர், ஒருவருக்கு உதவி செய்வதாக வாக்குக் கொடுப்பீர்கள். உடல் நிலையில் சற்று கவனம் தேவை.

**மகரம்:** பணிகளில் சற்று போராட்டமான சூழ்நிலை இருந்தாலும், தொடர்ந்த முயற்சியால் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் அவசரத்துக்காக வாக்குக் கொடுப்பதைத் தவிருங்கள். உரிய நேரத்தில் உணவு எடுங்கள். அலுவலகப் பணியாளர்களிடம் வேடிக்கையான பேச்சுக்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** மாற்று யோசனைகளால் காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். வீட்டிலும், வெளியிடங்களிலும் உடனே மறுத்துப் பேசுவதைத் தவிருங்கள். உடல் நிலையில் சோர்வுகள் ஏற்பட்டு விலகும். கணிசமான உழைப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலவும்.

**மீனம்:** விரும்பாத ஒருவரை நீங்கள் செல் லும் இடத்தில் சந்திக்கலாம். உதவி கேட்ட சிலருக்கு, மற்றவர்களிடம் வாங்கிக் கொடுத்தாவது உதவுவீர்கள். நண்பர்களுக்காக உங்களுக்குப்பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். உறவினர் ஒருவர், உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை பற்றி உங்களிடம் சொல்லலாம். சில விடயங்களில் குழப்பங்கள் உண்டாகும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9 | 6 | 8 | 4 | |
| 9 | 8 | | | | | | | 5 |
| 4 | | 5 | | | | | | 9 |
| | | | 9 | 3 | 1 | 2 | 6 | |
| 1 | | | 4 | | 2 | | | 3 |
| | 3 | 4 | 7 | 6 | 5 | | | |
| 8 | | | | 4 | | 5 | | 6 |
| 3 | | | | | | | 9 | 7 |
| | 5 | 7 | 3 | 1 | | | | |


### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 5 | 7 | 3 | 4 | 6 | 2 | 1 |
| 4 | 3 | 6 | 9 | 1 | 2 | 8 | 7 | 5 |
| 7 | 2 | 1 | 6 | 8 | 5 | 3 | 9 | 4 |
| 6 | 8 | 9 | 3 | 4 | 7 | 1 | 5 | 2 |
| 3 | 1 | 7 | 2 | 5 | 6 | 9 | 4 | 8 |
| 5 | 4 | 2 | 1 | 9 | 8 | 7 | 6 | 3 |
| 9 | 5 | 8 | 4 | 6 | 3 | 2 | 1 | 7 |
| 2 | 6 | 3 | 5 | 7 | 1 | 4 | 8 | 9 |
| 1 | 7 | 4 | 8 | 2 | 9 | 5 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஆண்டுத் திவசமும் ஓராண்டு நினைவஞ்சலியும்

மண்ணில் 29★12★1984 விண்ணில் 17★05★2011



## செல்வி கனகசபை துஷாந்தி

திதி : 04.06.2012

மண்ணிலொரு மின்னல் பாய்ந்தது போல
வண்ணக் கோலமது வடிவழகு காட்டிடவே
கண்ணின் மணியாய்க் குலத்தின் விளக்காய்
கண்ணால் கண்டனவும் கனவாய் போய்விட
விண்ணில் மறைந்துமோர் ஆண்டும் ஆனதே
எண்ணில் அடங்காத நினைவுகள்தான் எஞ்சுமோ...

ஊருக்குள் துஷாவை அறியாதவரில்லை
யாருமே துஷாவுடன் பழகினால் பிரியார்
சீரும் சிறப்புமாய் வாழ்ந்தவுன் வாழ்வுமே
யாரும் அறியாது போனதுவும் ஏனோ
பாருக்குள் நல்லவளை அழைத்தவன் ஈசன்
சீரும் திருவும் பொலிய சிவலோகம் சென்றிடவோ....

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்தனை செய்திடுவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
T.P : 021 2222896

நிகல் வீடியோ அன் சவுண்ட்ஸ்
42/7, ஈச்சமோட்டை ,கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்

(18941)(7-9-8)

# மாணவர் ஒன்றியத்தை தடை செய்யத் தீர்மானம்

## உயர் கல்வி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 4

இலங்கையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் தடை செய்வது குறித்து ஆலோசனை செய்து வருவதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாணவர் அமைப்பு இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்து வரும் அமைப்பாக இருந்து வருகிறது.

எனினும் இந்த அமைப்பு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் வன்முறைகளையும் பகிடிவதைகளையும் ஜனநாயகப் பண்பற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் நவரட்ண குற்றம் சுமத்தியுள்ளார்.

**பகிடிவதைகள் என்பது பல்கலைக்கழகங்களில் பொதுவான விடயமாகும்.**

பொதுவாக ஜே.வி.பியின் ஆதரவு கொண்ட அமைப்பாகவே இது கருதப்படுகிறது.

இதேவேளை, இந்த நடவடிக்கை அரசியல் ரீதியாகவே நோக்குவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேச்சாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

பகிடிவதைகள் என்பது பல்கலைக்கழகங்களில் பொதுவான விடயமாகும். எனினும் இதில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தையும் தொடர்புபடுத்துவது மோசமான பழிவாங்கல் நடவடிக்கையாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதனிடையில் -

இலங்கையின் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை காரணமாக இதுவரை 15 மாணவர்கள் இறந்தும் 25 பேர் செயலிழந்தும் போயுள்ளனர். அத்துடன், 6ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து இடையில் வெளியேறியுள்ளனர். இரண்டு பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர் என்று பகிடிவதைகளுக்கு எதிரான அமைப்பின் அழைப்பாளர் யுக்தி எகதீர தெரிவித்தார். (ச)

# ஆளும் கட்சிக்குள் உக்கிர உட்பூசல்

கொழும்பு, ஜூன் 4

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் முரண்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை முன்மொழிவுகள் தொடர்பில் கட்சிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் நோக்கில், அரசு தனிப்பட்ட ரீதியில் கட்சிகளின் நிலைப்பாட்டை அறிவிக்குமாறு கோரியிருந்தது. இதற்கு அமைய சில கட்சிகள் ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பான தமது நிலைப்பாட்டை அரசிடம் சமர்ப்பித்துள்ளன. சில கட்சிகள் விரைவில் தமது நிலைப்பாடுகளை வெளியிட உள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட கட்சிகள் நல்லிணக்க ஆணைக்குழு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பொதுவாகக் கருத்து வெளியிட்டுள்ளன.

எனினும், தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் மஹஜன எக்சத் பெரமுன போன்ற கட்சிகள் ஆணைக்குழுவின் சகல முன்மொழிவுகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளன.

காணி, பொலிஸ் அதிகாரப் பகிர்வு, வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தல், இராணுவ முகாம்களை அகற்றுதல், தேசிய கீதம் இசைத்தல் உள்ளிட்ட பல்வேறு முன்மொழிவுகள் தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் முரண்பாடான நிலைமைகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மேர்வினின் விசாரணை குறித்து அதிருப்தி

கொழும்பு, ஜூன் 4

பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் ஊடகங்களுக்கு வெளியிட்ட சில கருத்துக்கள் தொடர்பில் அமைச்சருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணைகளில் அமைச்சர் குற்றமற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டு அவருக்கு எதிரான விசாரணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியை பல தடவைகள் அமைச்சர் மேர்வின் நெருக்கடியான நிலைக்கு இட்டுச் சென்றிருந்தார் என்று அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கட்சியில் ஒழுக்கம் பேணப்படாவிட்டால் அது அரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமையக் கூடும் என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## கணினி வைரஸ்; நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு ,ஜூன் 4

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு உட்பட்ட 200 அரச நிறுவனங்களுக்கு கணினி வைரஸ் குறித்து கணினி அவசர வாசிப்பு ஒத்துழைப்பு நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வைரஸின் மூலம் கணினித் தரவுகளை சட்ட முறையற்ற ரீதியில் அகற்ற முடியும் என்று உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வைரஸின் மூலம் நிறுவனங்களின் இரகசியத் தரவுகளையும் அகற்றிவிட முடியும். எனவே முடியுமானவரை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு தாம் அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக கணினி அவசர வாசிப்பு ஒத்துழைப்பு நிலையத்தின் பாதுகாப்பு பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்தா தெரிவித்தார். (ச)

# இனி இல்லை சிறை!

## பராமரிப்புத் தொகையைச் செலுத்தாதோருக்கு

கொழும்பு, ஜூன் 4

பாராமரிப்புத் தொகையைச்(தாபரிப்புப் பணம்) செலுத்தாமையால் சிறைத் தண்டனை அனுபவிக்கும் நபர்களை இனிமேல் சிறைக்கு அனுப்பாது சமூக நலனோம்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

பராமரிப்புத் தொகையைச் செலுத்தாத காரணத்தால் சிறையில் அடைக்கப்படுவோரைப் பராமரிப்பதற்காக அரசு பெருந் தொகைப் பணத்தைச் செலவிடவேண்டியுள்ளது. ஒரு சிறைக்கைதியைப் பராமரிக்க நாள் ஒன்றுக்கு அரசு 330 ரூபாவைச் செலவிட்டு வருகிறது. அந்த வகையில் ஆண்டொன்றில் அரசு செலவிடும் தொகை 120, 450 ரூபாவாகும். இதனாலேயே அவர்களை சமூக நலனோம்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நீதியமைச்சு , சமூக நலத் திணைக்களத்துடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ங-22)



கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் உலக தமிழ் இலக்கிய மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது பூவல் நூலின் முதல் பிரதியை வைத்தியகலாநிதி தாசிம் அஹமது சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதனிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் அருகில் இலக்கிய குழுச் செயலாளர் தி. ஞானசேகரன், பொதுச் செயலர் ஆ.ரகுபதி பால ஸ்ரீதரன் ஆகியோர் நிற்கின்றனர்.

# காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் நாடு பிளவுபடாது

## அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 4

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் தவறில்லை. இதனால் நாடு பிளவுபடப்போவதில்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கும்படி நான் வலியுறுத்துவேன். எனவே கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்று மீன்பிடி நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



**காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கியதால் உலகில் எந்தவொரு நாடும் பிளவு பட்டதாக சரித்திரத்தில் இல்லை. எனவே போர் முடிவுற்ற இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது அவசியம்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கியதால் உலகில் எந்தவொரு நாடும் பிளவு பட்டதாக சரித்திரத்தில் இல்லை. தனிநாடுதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டிலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சற்று இறங்கி வந்து ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலை ஏற்றுக் கொண்டுள்ளது. இதை நாம் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளின் பிரதிநிதிகளும் வந்து இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தங்கள் கருத்துக்களை முன் வைக்கச் சந்தர்ப்பமுள்ளது.

நாட்டின் அதி உயர்ந்த இடமான நாடாளுமன்றத்தில் காணப்படும் தீர்வுக்கு யாரும் சவால் விடுக்கமுடியாது.

இனப்பிரச்சினை இந்த நாட்டில் 60 வருடங்களாக புரையோடிப் போயுள்ள பிரச்சினையாகும். முப்பது வருடங்களாக நாம் இந்தப் பிரச்சினைக்காக ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டோம். போர் செய்தோம். பல உயிர்களை இழந்தோம்.

போர் முடிவுற்ற இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது அவசியம். ஏனைய நாடுகள் துரித கதியில் முன்னேறிக் கொண்டிருக்கும் போது நாம் இந்தப் பிரச்சினையால் பின்நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

எனவே இந்த நிலை குறித்து அனைத்து கட்சிகளும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்- என்றார். (ச)

# சிவராம், நடேசன் நினைவுப் பேருரை

## வியாழனன்று கொழும்பில்

கொழும்பு, ஜூன் 4

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தர்மரெட்ணம் சிவராம், ஐயாத்துரை நடேன் ஆகியோர் தொடர்பான நினைவுரை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தற்போதைய அரசியல் சூழலில் ஊடகத்துறையின் நிலை என்ற தொனிப்பொருளில் சுயாதீன ஊடகவியலாளர் ரணத் குமாரசிங்க உரையாற்றவுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறை வருகை விரிவுரையாளர் கே.சர்வேஸ்வரன் சிறப்புரையாற்றுவார்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு ஒன்றியத்தின் தலைவர் அனந் பாலகிட்ணர் தலைமை தாங்குவார்.

வரவேற்புரையை சுயாதீன ஊடகவியலாளர் ஆ.யதீந்திரா நிகழ்த்துவார். இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வர். (ச)

# சுற்றுலா சபைக்கு மூன்று தலைவர்கள்


கொழும்பு, ஜூன் 4

இலங்கைசுற்றுலாசபைக்கு மூன்று தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மூன்று தலைவர் பதவிகள் உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பொருளாதாரத்துறை பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை சுற்றுலா சபையில் ஒழுங்கீனங்கள் இடம்பெற்று வருகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராமநாதன் லோகநாதன்

(செயலாளர், காரைநகர் பிரதேசசபை)

அன்னை மடியில்
1960 - 05 - 24

இறைவன் அடியில்
2011 - 05 - 18

**திதி: பிரதமை (05.06.2012)**


ஆண்டு ஒன்றானது
ஆனாலும் நம்ப முடியவில்லை
கனவுகள் பல கண்டு
கழிப்போடு நானிருந்தேன்
துயரங்கள் மறந்திருந்து நான்
சிரித்து மகிழ்ந்திருந்தேன்
காலத்தின் கட்டாயத்தில் கடுகதியாய்
உமை தொலைத்து நிற்பேன் என
கடுகளவும் நினைத்ததில்லை
எள்ளளவும் உமக்கென்று
ஏதொன்றும் செய்யவில்லை
உறவே உங்களை நாம்
மறவோம் எந்நாளும்
ஏழேழு பிறவிக்கும் நான் வாழ் வதென்றால்
அது உங்களோடுதான் என்றால்
அப் பிறப்புக்களையும் நான் அயராது எடுப்பேன்

உற்றார், உறவினர், நண்பர்கள் அனை
வரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக
ஏற்று 05.06.2012 செவ்வாய்க்கிழமை
அன்னாரின் ஓராண்டு ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய
போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி**
**குடும்பத்தினர்.**

**5 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

(18829) (2-6-7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## திருஞானசம்பந்தர் குருபூசை விழா

நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலையினரால் நடத்தப்படும் திருஞானசம்பந்தர் குருபூசை விழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இந்த விழாவுக்கு ஈ.வினை அ.த.க. பாடசாலை அதிபர் சைவப் புலவர் செ. பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், புன்னாலைக் கட்டுவன் கிராம உத்தியோகத்தர் பி.மயூரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ந)

கூடங்குளத்தில் மின் உற்பத்தி:

# அணுக்கதிர்வீச்சு எச்சரிக்கைக் கருவிகளை அமைக்க இலங்கை அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 4

கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுவரும் அணு மின் உலையிலிருந்து அணுக்கதிர்வீச்சு பரவினால் அதை எச்சரிக்கும் வகையில் கருவிகளை அமைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள கூடங்குளம் மின் உற்பத்தி நிலையம் இன்னும் சில மாதங்களில் செயற்பட உள்ளது. இந்த அணுமின் நிலையத்திலிருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் இலங்கை உள்ளதால் இத்தகைய எச்சரிக்கைக் கருவிகளை நிறுவ உள்ளதாக அணுசக்தி ஆணையத் தலைவர் ஆர். எல். விஜேவர்தன தெரி வித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**இந்தக் கருவிகள் கொழும்பு, மேற்கு மாகாணமான கலப்பிட்டியா மற்றும் தலை மன்னார், திருகோண மலை, கண்டி ஆகிய பகுதிகளில் நிறுவப்படும்.**

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கதிர்வீச்சு அவசரகாலத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இதன்படி சர்வதேச அணுசக்தித் தொடர்பகத்தின் உதவியுடன் 8 அணுக் கதிர்வீச்சு உணர் கருவிகள் கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட உள்ளன. இந்தக் கருவிகள் கொழும்பு, மேற்கு மாகாணமான கலப்பிட்டியா மற்றும் தலைமன்னார், திருகோண மலை, கண்டி ஆகிய பகுதிகளில் நிறுவப்படும். இவை அனைத்தும் அணுசக்தி ஆணைய மைய அலுவலகங்களிலிருந்து இயக்கப்படும். அடுத்த இரண்டு மாதங்களில் இந்த எச்சரிக்கைக் கருவிகள் செயற்பாட்டுக்கு வரும். அத்துடன் அணுக் கதிர் வீச்சு அபாயம் ஏற்படும் போது அது குறித்து மக்களுக்கு எச்சரிக்கை விடுத்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க இவை உதவியாக இருக்கும்- என்று அவர் தெரிவித்தார். (ந)

## பாடசாலை மாணவர் சீருடை விநியோகம்

அடுத்த வருடத்திற்கான பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான துணிகள் உரிய நேரத்தில் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்களின் சீருடைத் தேவைகளில் 50 சத வீதமானவை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தேசிய ரீதியாகப் பெறப்படும் துணிகளில் 30 சதவீதமானவை களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் தேவையான சீருடைகளைக் களஞ்சியப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அடுத்த வருடத்திற்கான சீருடைகள் டிசெம்பர் விடுமுறைக்கு முன்னர் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 40 லட்சம் மாணவர்களுக்கான சீருடை விநியோக நடவடிக்கைகளுக்காக 220 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ந)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தின் புதிதாக நிர்மாணிக்கப் பெற்றுள்ள திரிதள பஞ்ச கலச குண்ட நூதன இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை 7.45 மணிமுதல் 8.45 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெறுகின்றது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிமுதல் 5மணிவரை எண்ணெய் சாத்துதல் இடம்பெற்றது. (ந)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்

அராலி வடக்கு, மயிலியற்புலம் கந்தசுவாமி கோயிலின் வடக்கே அமைந்துள்ள மகமாரி அம்பாள் ஆலயத்தில், அங்கு புதிதாக அமைக்கப்பட்ட வசந்த மண்டபத்துக்கான மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 8.55 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் இளவாலை இராம பாலசுந்திரக்குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

* * *

நாகதம்பிரான் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட க்ஷமகா கும்பாபிஷேகம் இன்று காலை 6.39 மணிமுதல் 7.12 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளன. இக் கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றன.

நாகதம்பிரான் ஆலய பரம்பரைப் பிரதமகுரு சிவஸ்ரீ சிவசண்முகக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்துவார். இதனைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ க.சந்திரசேகரக் குருக்களின் ஆசியுரையும், நல்லை ஞானசம்பந்தர் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்யசுவாமிகளின் அருளுரையும் இடம்பெறும். (ந-8)

* * *

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ் வாய்க்கிழமை பகல் 10.30 மணிமுதல் திருஞானசம்பந்த சுவாமிநாயனார் குருபூசை நடைபெறவுள்ளது. புராணபடனம், ஞானசம்பந்தர் அருளிய திருமுறைப் பதிகம் ஓதுதல், பூசை வழிபாடு ஆகியவை இடம்பெறும்.

கோளறு பதிகம், திருநீற்றுப் பதிகம், இடரினும் தளரினும் பதிகம், கல்லூர் பெருமணம் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சர பதிகம் ஆகியவற்றை யாவரும் சேர்ந்து பாடுதல் இடம்பெறும். அன்று சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயத்திலும் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலிலும் குருபூசை நிகழ்வுகள் நடைபெறும். (ந-28)


## 45 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



## திருமதி கனகசபாபதி புஸ்பராணி

மலர்வு 12.09.1955

உதிர்வு 22.04.2012

கடந்த (22.04.2012) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி கனகசபாபதி புஸ்பராணி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (05.06.2012) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் தெணியம்மன் ஆலய முன்றிலில் அமைந்துள்ள அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு கூர்ந்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

(18933) (45.6.9)

குடும்பத்தினர்



## விலைக்கேள்வி அழைப்பு
## வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

1.) வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், தலைவர் பிராந்திய பெறுகை குழுவினால் தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்காக மூடியகேள்வி கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | பெறுகை இல. | வேலை விவரமும் இடமும் | பதிவு தரம் | விலை மனுப் பிணை ரூபா | மதீப்பீட்டு தொகை மில் |
|---|---|---|---|---|---|
| 01 | J/ZEO/SWB/ PSDG/2012/01 | விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாணம் (50 x 25) கீழ்த்தளம் யா/ அச்சுவேலி சென் திரேசா வித்தியாலயம், அச்சுவேலி | C8 | 30,000.00 | 3.04 |

2.) மேற்குறிப்பிடப்பட்ட வேலையானது ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து 120 நாள்களினுள் முடிக்கப்பட வேண்டும்

3.) ஒப்பந்தத்தை வழங்கத் தகுதி பெறுவதற்காக சித்திகரமான கேள்விதாரர் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில்(ICTAD) கட்டட நிர்மாணத்தில் மேற்குறிப்பிட்ட தரத்திலோ அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்து கொண்டிருப்பதுடன் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருத்தல் ஆகாது (Black listed)

4.) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் பாடசாலை வேலைகள் பிரிவில் தேவையான மேலதிக தகவல்களை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

5.) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஆயிரத்துஐந்நூறு (1, 500/=) யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் பணமாகச் செலுத்தி 2012.06.06. ஆம் திகதி முதல் 2012.06.18 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் - பி.ப. 3.00 மணிவரை வலயக்கல்வி பணிமனையில் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை பாடசாலை வேலைகள் பிரிவில் சமர்ப்பித்து முழுமையான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் பெற்றுக்கொள்ளலாம்.


6.) கேள்விகள் பாடசாலை வேலைகள் பிரிவு வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணத்தில் 21.06.2012 அன்று பி.ப. 14.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் உடனடியாக கேள்விப் பத்திரதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

7.) மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிக்கப்பட்ட தொகை கேள்விப்பிணை ஒவ்வொரு கேள்வியிலும் இணைக்கப்படவேண்டும். கேள்விப்பிணை திறக்கப்படும் தினத்திலிருந்து 120 நாள்கள் (21.06.2012 - 18.10.2012) செல்லுபடியாகக் கூடியதாகவும் அனுமதிக்கப்பட்ட வங்கிகள் அல்லது நிருமாண உத்தரவாத நிதியத்திடமிருந்து பெறப்பட்டு இருத்தல் வேண்டும். கேள்விப்பிணை On - demand & Un - conditional ஆகவும் தரப்படும் படிவத்திலும் இருத்தல் வேண்டும்.

V. செல்வராசா
தலைவர்/வலயக்கல்விப் பணிப்பாளர்
பிராந்திய பெறுகைக் குழு, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

(C/437)(6-8-9)

# ஊடகத்துறையும் பெண்களும்



பெண்களுடைய ஆரம்பகாலம் என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாதநிலையில் இருந்தது.முன்னைய காலத்தில் வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் சமையலில் மட்டும் தமது ஈடுபாட்டைச் செலுத்திய பெண்கள் இன்று வர்த்தகம், அரசியல், வைத்தியம்,சட்டம், நிர்வாகம் எனப் பல துறைகளிலும் கால் பதித்து சாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

பெண்கள் கல்வியோ, பெண்கள் உரிமையோ, பெண்கள் வாழ்க்கையோ பெரிதாகக் கவனிக்கப்படாத காலம் கூட இருந்துள்ளது.பெண்கள் குறித்த காலத்துக்கு அப்பால் கல்வி கற்பதுகூடப் பெரும் சமூக விரோதக் குற்றமாக இருந்த அன்றைய இருண்ட காலத்தில் வாழ்ந்த மகாகவி பாரதி பெண்களுக்கான வரைவிலக்கணங்களை மாற்றி பெண்ணியம் பேசி இன்றைய புதுமைப் பெண்களை உருவாக்கிய பழைய சிற்பி என்றால் மிகையாகாது.

இன்றைய உலகில் எப்பக்கம் திரும்பினாலும் பெண்கள் ஏதோ ஒரு துறையில் உயர் பதவியில் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

பல துறைகளில் கால்பதித்த பெண்களுக்கு ஊடகத்துறையும் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. ஊடகத்துறை சவால்கள் நிறைந்த துறை என்பது பலரும் அறிந்ததே.

ஆரம்ப காலகட்டங்களில் ஆண்கள் மட்டுமே பெரும்பாலும் ஊடகத்துறைக்கு ஆர்வத்துடன் வந்தனர். ஆனால் இன்று ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஊடகத்துறையைத் தெரிவு செய்கின்றன. இது பணிக்காக மட்டுமன்றி கற்றலுக்கான தெரிவாகவுமாகக் கூட உள்ளது. இந்தத் துறை வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது.

சில பெண்கள் ஆர்வத்துடன் இத்துறையைத் தெரிவுசெய்து கற்கவோ அல்லது தொழிலுக்காகவோ வந்தால் அவர்கள் குடும்பத்தில் அது ஏற்கப்படுவது குறைவாகவே உள்ளது. குடும்பத்தில் விதிக்கப்படும் பல தடைகளையும் மீறி வந்தாலும் அவர்களின் தெரிவின் மீது கல்லெறிந்து பார்க்கிறது சமூகம்.

ஒரு பெண் ஊடகவியலாளர், தான் களத்துக்குச் செல்லும்போது பல்வேறு நெருக்னூகடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளைக் கூர்ந்து கவனித்து அதில் பிழை பிடிக்கும் சமுதாயம், பெண் ஊடகவியலாளர்களின் திறமைகள் மற்றும் அவர்களால் வெளிகொணரப்பட்ட விடயங்களைப் பார்த்துப் பெருமைப்பட வேண்டும்.

இலத்திரனியல் ஊடகத்தில் தொகுப்பாளராக வரும் பெண்களை ஏற்றுக்கொண்டு ரசிக்கும் சமூகம் செய்திப் பிரிவிலும் பத்திரிகைத் துறையிலும் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் பெண்களை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது?

ஒரு பெண் தான் ஏற்றுக்கொண்ட துறையில் சாதித்துக் கொண்டிருப்பதும் பலரால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.உடனே அப்பெண்ணைப்பற்றி தேவையற்ற வதந்திகளை உலாவிடுவார்கள். ஆனாலும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக ஊடகத்துறை சார்ந்த பெண்கள் உஷாராக இருக்கவேண்டியது என்றும் நினைவில் கொள்ளத்தக்கது.

ஜோ.தட்சா



# புகுந்தவீடா....

இல்லத்தரசி என்பது
இவர்களுக்கு
இடப்பட்ட பட்டமெனினும்
வீற்றிருக்கிறார்கள்
வெறும் வேலைக்காரர்களாய்


பிள்ளை எனும்
பெயரோடு
பிறந்த வீட்டில்
சிறை கிடந்தவர்கள்
மனைவி எனும்
மகுடம் மாட்டப்பட்டு
சிறை மாறுகிறார்கள்
புகுந்த வீட்டுக்கு
பேசி முடிக்கப்பட்ட
சீதனத்தொகை
செலுத்த முடியாமல்
மாமியார் வார்த்தை கேட்டு
மரண வேதனையை

நித்தமும் சுமக்கும்
நெருப்பு வாழ்வு

தந்தையாகும் தகுதி
கணவனுக்கு இல்லாவிடினும்
பரிசீலிக்காமலே
பலர் சொல்லிவிடுகிறார்
அவளை மலடி என்று

வீட்டுவளாகம் தவிர
வெளியிடம் ஏதுமறியா
வேதனை நிலை
பேசாமல் அவளிருந்தால்
வசைபாடும் புகுந்தவிட்டார்
வாய் திறந்து பேசிவிட்டால்
வாய்க்காரி என
வைக்கிறார் பட்டம்

குடும்பம் என்பது
கோயிலா...?
இல்லை... இல்லை
இவர்களுக்கு இது
சாத்தான் வீடு





# பெண்ணென்று பிறந்து விட்டால்

ஆண்டவன் படைப்பில் ஆண், பெண் என்னும் இருபாலாரும் அடங்குவர். இதில் ஆண்களை உயர்ந்தவர் என்று உரைப்பதும், பெண்களைத் தாழ்ந்தவர் எனப் பிதற்றுவதும் பேதமையிலும் பேதமை. முற்காலத்தில் தமிழகத்தில் பெண்களுக்கு சம உரிமை இருந்தது. ஔவையார், காக்கைபாடினியார் போன்ற பெண்பாற் புலவர்களைக் கூறலாம். இடைக் காலத்தில் வேத விதிகளும், மதக்கொடுமைகளும் புகுந்தன. பெண்கள் அடிமையிலும் கேவலமாக நடத்தப்பட்டனர். வீட்டைவிட்டுப் பெண்கள் வெளியே வரக்கூடாது. ''பெண் புத்தி பின் புத்தி'' என்று இழிவுபடுத்தப்பட்டது. பெண்கள் பழைய தளைகளை உடைத்தெறிந்துவிட்டு வெளியேற வேண்டும் என்றார் பாரதி. ''எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளபில்லை காண்'' என்று கும்மியடித்துக் கோலப்பண் பாடினார் பாரதி.

''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீருவது முயற்கொம்பே'' என்று முழங்கினார் புரட்சிக் கவி பாரதிதாசன். ''மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்று எழுச்சிப்பண் பாடினார் கவிமணி. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு, ஏட்டையும் பெண்கள் தொடலாமா? என்று கொடுமையான கொள்கைகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலவின. விதவைக் கொடுமை, உடன்கட்டை ஏறுதல், பாலியவிவாகம், வரதட்சணைக் கொடுமை முதலியவற்றால் பெண்ணுரிமை பற்றிய சீர்திருத்தக் கொள்கைகள் தோன்றின.

தற்போது கல்வி மேம்பாட்டால் பெண்ணுரிமை உரிமைக் குரல் தீவிர முனைப்பூட்டப்பட்டது. பெண்கள் சமூகம், அரசியல், பொருளாதாரம் போன்ற சகல துறைகளிலும் முன்னேறினர். பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் இல்லை என்ற தோரணையில் பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்யவும் செய்கின்றார்கள். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் பல்துறை மாணவிகளாகவும் பெண்கள் பரிணமிக்கிறார்கள். பலநாடுகளில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், மந்திரி,நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயர் நீதிமன்ற நீதிபதி ஆகிய முக்கிய அரசியல் பதவிகளைப் பெண்கள் வகிக்கிறார்கள்.

ஆண்களும் உத்தியோகம் பார்க்கும் பெண்களையே விரும்புகின்றனர். இன்றைய பொருளாதார யுகத்தில் இதன் அவசியம் உணரப்படுகின்றது. எனினும் வரதட்சனை என்னும் சீதனம் வெறுக்கப்படும் ஒன்றாகவும் விளங்குகின்றது. மணமகளுக்குக் கொடுக்கப்படும் காணிக்கையே சீதனம். அராபிய நாடுகளில் பெண்ணடிமை வியாபாரம் இன்றும் நிலவுகின்றது. பெண்ணை வியாபாரப் பொருளாகவும், விளம்பரப் பொருளாகவும் திரைப்படங்களிலும், தொலைக் காட்சிகளிலும் சித்திரிக்கின்றனர்.எனினும் தொட்டிலை மட்டும் ஆட்டிக் கொண்டிருந்த கை இன்று தொல்லுலகை ஆட்சி செய்யும் அதிகாரம் படைத்த கையாக மாறிவிட்டது. அவர்கள் கற்ற கல்வி குடும்பத்தைச் சீராக்கவும் சிக்கனமாக வாழ்வதற்கும் எதிர்காலத் தலைமுறையை நன்முறையில் உருவாக்கவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.



# நீங்கா நினைவில் 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 11★04★1936

மறைவு : 19★05★2011

அமரர்

## சரஸ்வதி நாகராசா

(மணியக்கா)

திதி : 06.06.2012



கோப்பாய் மத்தி வெள்ளொரு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி நாகராசா அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கண்ணின் கருமணியாய் எம்மை காத்து
இன்று கண்ணீர் மல்க விட்டு சென்றதேனோ ?
விண்ணில் விடிவெள்ளியாய் போன பின்பும்
எங்கள் விழியில் ஈரம் தனை தந்ததேனோ ?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் உன் நினைப்பில் நாமிருப்போம்!!!

07.06.2012 வியாழக்கிழமை அன்று மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன விருந்தும் நடைபெறவுள்ளது. அனைவரையும் அன்புடன் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(18900)(8)

T.P :021 3007189 பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

## திருமதி அன்னம்மா ஐயாத்துரை

மட்டுவில் தெற்கு, வாகையடிச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கைதடி, நுணாவிலைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா ஐயாத்துரை நேற்று (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா ஐயாத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கம்மா, காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னையா, பொன்னுத்துரை மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாதேவி, கமலநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் விஜயசுந்தரம், சிவ அரி ஓம் பூபதி (ஓய்வுபெற்ற உபஅதிபர், மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை), வரதராசா ஆகியோரின் பாசமிகு மாமியும் விக்கினராசா - நிர்மலாதேவி (லண்டன்), தவராசா - இன்பரதி (லண்டன்), வசந்தராஜீ - ஜீவாதரன், வசந்தரூபன் (அக்கிரிக்கோ மின் உற்பத்தி நிலையம், சுன்னாகம்), நவரதினி (ஆசிரியர், மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாலயம்), காலஞ்சென்ற வசந்தரதி மற்றும் சசீந்திரன் (Northern PC Park), பவித்திரா (மாணவி, யாழ். மருத்துவபீடம்), சசிகலா (மாணவி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜெனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வினோஜன், நிரோஜன், சகானா, சஜீனா (லண்டன்), வினோஜன், கஜீபன், பானுஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.கமலநாதன்
(மகன் - ஓய்வுபெற்ற அதிபர், யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்).

ஸ்ரீ சந்திரசேகரவிநாயகர் திருக்கோயில்
மஹோற்சவம் - 2012



04.06.2012 திங்கட்கிழமை

**திருக்கல்யாணம் - பூங்காவனம்**
மாலை 4.00 மணிக்கு
கோண்டாவில் மேற்கு
(18376)(45.6.9)

---

## கணினி திருத்தம் Computer repair

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீட்டுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.

அழையுங்கள்- 0779086737
***Guna Best Pc***

---

## வீடு வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு- 0770869315

---

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ரொட்விலர் ஆண் நாயும், பொக்சர் பெண் நாயும், ஜேமன் சப்பேட் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான அல்சேசன், பொமேரியன் நாய்க் குட்டிகளும், மணிதாரா வான்கோழி, பசுமாடு, கன்றும் விற்பனைக்கு.

வி.மயூரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக, பூதராயர் கோயிலடி டயலொக்ரவர் அருகில்.

---

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த
கேதீஸ்வரக்குருக்கள் - தர்சினி தம்பதியரின்
செல்வக்குழந்தைகள்

**மித்ர - ஜித்ர**
HAPPY BIRTH DAY



இன்று (04.06.2012) திங்கட்கிழமை தங்களது மூன்றாவது பிறந்தநாளை பெற்றோர், உறவினர், ஊர்மக்கள் சகிதம் தமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றனர்.
மித்ர - ஜித்ர அன்புச்செல்வங்கள் வீரபத்திரர் துணையுடன் சகல ஐஸ்வர்யங்களுடன் பல்கலையும் கற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றோம்

கனகசபாபதிக்குருக்கள் (தாத்தா),
மற்றும் உடுப்பிட்டி வாழ்மக்கள்
(f/430)(7-8)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி விசாகப்பெருமாள் மலர்வாசம்**
திதி: பூரணை

"ஆண்டு ஒன்றானாலும் ஆறமுடியவில்லை
மீண்டும் வருவாயென மாண்டு மடிகின்றோம்."

முதலாம் ஆண்டு நினைவு நாள் (04.06.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

343, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(18905) (45.6)

வி. சண்முகலிங்கம் (அண்ணன்),
அ. சந்திரகாந்தா (அக்கா),
வி. இராசலிங்கம் (தம்பி).

---

## பிறந்த நாள் வாழ்த்து

SAJEEN

சுஜீவன் - சுதர்சினி தம்பதியரின் செல்வப் புதல்வன் **சஜீன்** தனது முதலாவது இனிய பிறந்தநாளை இன்று (04.06.2012) சேர்.பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை நல்லூர்க்கந்தன் அருளினால் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் நீடூழி வாழவென வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்: அன்புடன் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மா மற்றும் நட்டிமார்.

---

# கேம்ஸ் & நெட் சென்டர் திறப்பு தினம்

(Games & Net Center Opening Day)

**Sajees (A) Games & Net**

**காலம்: 04.06.2012**
**நேரம்: 6.39 - 7.12**
**இடம்: குளப்பிட்டி ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**
**(எடிசன் கல்வி நிலையம் முன்பாக)**

தங்களை அன்புடன் அழைக்கும்
அருளானந்தம் ஜீவதர்சன்



---

## தையல் வகுப்பு

மகளிருக்கான காலை மாலை நேர
தையல் பயிற்சி
வகுப்புகள்

குழந்தைகள் சட்டை, சாறி பிளவுஸ், சுடிதார், பாவாடை சட்டை உட்பட சகலவிதமான ஆடைகளும் வெட்டித் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்

517, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (ஐந்து சந்திக்கும்
ஓட்டு மடத்துக்கும் இடையில்)
தொடர்பு : 077 7150883
(18890)(8-7-8)

---

## வீடு வாடகைக்கு

அளவெட்டியில் கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் இராவத்தையில் பெரிய வீடு வாடகைக்கு உண்டு
தொடர் : 077 9046474
(18948)(9-7-8)

---

## மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும்
கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு
உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம்
நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில்
செயன்முறைப் பயிற்சிகள்

**Knowledge Universe**
No 75, Temple Road, Jaffna
Call : 0213208342/0776458253
www.kugroup.info
(சி/304)

---

## மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

யாழ் **கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்
Yazh **Kalalaya** Academy
Jaffna

கடந்த எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல் ✌ முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (Hair Dressing & Styling)
- Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகள். ஏழு வகையான சாறி உடுத்தும் முறைகள்.

**மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- தையல் தெரிந்தவர்களுக்கான சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, தைக்கும் பயிற்சிகள்

**ஆரம்பம்: 06.06.2012 புதன்கிழமை காலை 9.30 மணி.**

---

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 01 Kg க்கு UK 645 /= Germany 735/= France 775/=
- கடலுணவு வகைகள், மருந்துப்பொருட்கள், குறிப்பிட்ட சில பழவகைகளையும் அனுப்பிக்கொள்ளலாம்.
- கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் எமது சேவையினை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ் T.P : 021 222 6113

**Arrul Global Express**
International Courier & Cargo Service
(C/388)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்பதற்கு மட்டக்களப்பில் செயலணி

**மதுபான பாவனையாலேயே அதிக பெண்கள் வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர். சமூக பொருளாதாரப் பிரச்சினைகளும் வன்முறைக்கு வழிகோலுவதாக கண்டறியப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு, ஜூன் 4

மட்டக்களப்பில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் தடுப்பு வழிகளை நடைமுறைப்படுத்த செயலணி ஒன்று அரச அதிபர் திருமதி பீ.எம்.எஸ்.சாள்ஸ் தலைமையில் நியமிக்கப்பட் டுள்ளது.

போரின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் செய்யப்பட்ட ஆய்வில் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஆணைக் குழுவின் நிதி உதவியின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட இந்த ஆய்வறிக்கை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் பெண்களுக்கான வன்முறைகளைத் தடுப்பதற்கான வழிமுறைகள் இனங்காணப்பட்டன.

மதுபான பாவனையாலேயே அதிக பெண்கள் வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர். சமூக பொருளாதாரப் பிரச்சினைகளும் வன்முறைக்கு வழிகோலுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க அரச மற்றும் அரச சார்பற்ற பல நிறுவனங்கள் மட்டக்களப்பில் செயல்படுகின்றபோதிலும், பாதிக்கப்பட்ட பெண்கள் இத்தகைய நிறுவனங்களை நாடுவது குறைவு என்று இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் மாவட்டத்தில் செயற்படும் அமைப்புக்கள் ஒருமித்து செயல்படுவதன் மூலமே இதன் முழுப் பயனையும் அடைய முடியும் என்று தீர்மானிக்கப்பட்டது. (ச)

# பேனா முனையின் வலிமைக்கு உன் காடைத்தனம் வெறும் தூசு!

## ஜவாத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் முழக்கம்



'ஒழிக... ஒழிக... ஜவாத்தின் அரசியல் காட்டுத்தர்பார் ஒழிக...', 'பேனா முனையின் வலிமைக்கு உன் காடைத்தனம் வெறுந் தூசு',' ஊடகவியலாளர் தாக்குதலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவா?', 'ஊடகவியலாளருக்கு எதிரான அடக்குமுறையை நிறுத்து', 'போராடுவோம் போராடுவோம் ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்தப் போராடுவோம்' - என்று உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' பாலமுனை செய்தியாளர் மீது முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து அட்டாளைச்சேனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஊடக வியலாளர்கள் முழங்கினர்.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் அரசியல்வாதிகள் கலந்துகொண்ட நிகழ்வொன்றுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற 'சுடர் ஒளி'யின் பாலமுனை செய்தியாளர் எஸ்.எம். அறூஸ் மீது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கே.ஏ.ஜவாத் நடத்திய தாக்குதலைக் கண்டித்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அட்டாளைச்சேனையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகிய இந்த ஆர்ப்பாட்டம் பிற்பகல் 1 மணிவரை நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அம்பாறை மாவட்ட மீடியா போரம், தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம் , மூண்பிரைட் ஆகிய நான்கு ஊடக அமைப்புகளிலும் உள்ள ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கடுந்தொனியில் முழக்கமிட்டனர். (ச-சி)

# யோகேஸ்வரன் எம்.பி. பதவியைத் துறந்துவிட்டு மாகாணசபைத் தேர்தலில் வென்றுகாட்டட்டும்

## பிள்ளையானின் சகா சவால்




எருவில், ஜூன் 4

கிழக்கு மாகாணத்தில் தமிழர் தனித்துப் போட்டியிட்டு பெரும்பான்மையாக வந்து ஆட்சி அமைக்க முடியுமா என்று கூடத் தெரியாமல் கருத்து வெளியிடுவது வெட்கப்படக்கூடிய விடயமாகும். முடிந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சராகத் தயாரா? என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினருமான பூ.பிரசாந்தன் சவால் விடுத்துள்ளார்.

கல்லடி கடற்கரையில் இடம்பெற்ற உதயகீற்று இளைஞர் கழகத்தின் வருடாந்த கலாசார விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் 15 ஆயிரத்துக்கும் மேல் மக்கள் கலந்துகொண்ட மிகப் பிரமாண்டமான தேசிய மாநாட்டை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இவ்வருடம் கிழக்கில் நடத்தியிருந்தது. அதில் எவரையும் குறை கூறவோ எவர் பக்கம் பழியைப் போடவோ நாம் முற்படவில்லை

ஆனால், வேறு மாவட்டங்களிலிருந்து வந்தவர்களுடன் தமிழரசுக்கட்சி மாநாடு நடத்திவிட்டு மக்கள் எல்லாம் எங்கள் பக்கம் நிற்கின்றார்கள் என்று தம் பட்டம் அடிக்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். இவர்கள், மாநாட்டில் மட்டக்களப்பு மக்கள் பெருமளவு கலந்துகொள்ளாததால் தமது தோல்வியை மறைப்பதற்காகத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மீது வசைபாடுகின்றனர்.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மைக்குப் புறம்பான கருத்துகளாகும். தமது கட்சிக்குள் இருக்கும் உட்பிணக்குகளைக் கூடத் தீர்த்துக்கொள்ள வழி தெரியாதவர்கள் கூறும் போலியான வார்த்தைகளின் உண்மைகளை வெகுவிரைவில் மக்கள் புரிந்துகொள் வார்கள்.

கிழக்குத் தமிழருக்கு இருக்கின்ற மாகாண சபை முறைமையையும் இல்லாதொழித்து தமிழ் மக்களை நட்டாற்றில் அரசியல் அநாதைகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமக்கு கைபோனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுணம் பிழைக்க வேண்டும் என்ற வகையில் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பற்றி நினைக்காது தமது அரசியலை மாத்திரம் மையமாக வைத்து செயற்படுகின்றனர். இவர்களின் போலி முகத்திரைகளை மக்கள் விரைவில் புரிந்துகொள்வார்கள் - என்றார். (ச-31)

## வேரவில் சந்தைக்கு அடிக்கல்

பூநகரி வேரவில் பொதுச் சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட வேரவில் பொதுச் சந்தைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லினை பூநகரிப் பிரதேச சபையின் தலைவர் சிறிஸ்கந்தராசா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், பூநகரி பிரதேசசபை செயலாளர் உள்ளிட்டோர் நட்டு வைத்தனர். (க-6)

# மண் அணைகளால் அல்லலுறும் கிளிநொச்சி நகர மக்கள்

அக்கராயன், ஜூன் 4

கிளிநொச்சி நகர் மற்றும் அதனையண்டிய பகுதிகளில் மண் அணைகள் அகற்றப்படாமல் இருப்பதால் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போரின் போது பாதுகாப்பு காரணங்களுக்காக இந்தப் பெரிய மண் அணைகள் அமைக்கப்பட்டன. ஆனால் அவை இன்றுவரை அகற்றப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இதனால் மழை காலங்களில் நீர் வழிந்தோட முடியாத நிலையில் மழைவெள்ளம் தேங்கி நிற்கின்றது. இந்த வெள்ள நீர் மக்களின் குடியிருப்புகளிலும் தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்துகின்றது. இதைப் போன்ற மண் அணைகள் ஆனையிறவு, பளைப்பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்கள், கிளிநொச்சி மேற்கிலுள்ள அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம், முழங்காவில், நாச்சிக்குடா ஆகிய பகுதிகளிலும் காணப்படுகின்றன.

இவற்றினால் தற்போது எந்த விதமான பயன்களும் இல்லாத நிலையில் பொதுமக்களே பாதிக்கப்பட்டு வருகின்றனர். (க-18)

# இரணைமடுக்குளம் பகுதியில் பெரும்தொகை ஆயுதங்கள் மீட்பு

வலி.வடக்கு, ஜூன் 4

கிளிநொச்சிப் பொலிஸாரும் மற்றும் அதிரடிப்படையினரும் இணைந்து பெரும் தொகையான ஆயுதங்களை இரணைமடுக்குளம் பகுதியில் இருந்து கடந்த வாரம் மீட்டுள்ளார்கள். பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடடிக்கையை கிளிநொச்சிப் பொலிஸார், அதிரடிப்படையினருடன் இணைந்து மேற்கொண்டனர் என்று யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் இந்த நடவடிக்கையின்போது பின்வரும் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

105 மில்லி மீற்றார் ஆர்சி எல் குண்டுகள் 03, 2.5கிலோ கிராம் குண்டு 01, நிலத்தின் கீழ் வைக்கப்படும் கண்ணி வெடிகள் 05, ரி 56 மகஸின் 04, ஹெலிகொப்டரைத் தாக்கும் குண்டுகள் 52, ரவைகள் 1012, 7.62 எம்.எம் ரவைகள் 112, வெடிமருந்துப் பொதி 01, ஆர்.பி.ஜீ பற்றி சார்ஜர் 04, எல்.ரீ.ரீ.ஈ. எனப் பொறிக்கப்பட்ட பற்றி சார்ஜர்கள் 04, மோட்டார் பியூஸ் 39, எல்.எம்.எல் 04, எஸ்.எம்.ஜீ. குண்டுகள், துப்பாக்கி ரவைகள் 1333, இனம் காணமுடியாத துப்பாக்கிகள் 02, கபிலன் குண்டுகள் 09, தாங்கிகளை அழிக்கும் குண்டுகள் 87, உட்படப் பல ஆயுதங்களும், வெடிபொருள்களுமே கைப்பற்றப்பட்டன என்றார். எரிக்பெரேரா (க-86)

# திருக்கேதீஸ்வரர் ஆலய தேர், தீர்த்த உற்சவங்களில் பல்லாயிரம் மக்கள்



மன்னார், ஜூன் 4

பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் தேர்த் திருவிழாவும், தீர்த்த உற்சவமும் பக்தி பூர்வாமாக நிறைவெய்தின.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்த் திருவிழாவின் போது ஆயிரக் கணக்கான பக்தர்கள் ஆலயச் சூழலில் குழுமியிருந்தனர்.

அங்கு இடம்பெற்ற பஞ்சரத பவனி பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தேர்வடத்தைப் பற்றினால் மோட்சநிலை கிடைக்கும் என்ற நம்பிக்கையின் படி ஏராளமான மக்கள் தேர் வடத்தைப் பிடித்து இழுத்துச் சென்றனர்.

இங்கு வருகை தந்த மக்கள் பாலாவியில் நீராடித் தமது பாவங்களைப் போக்கிக் கொண்டனர்.

வருகை தந்த மக்களின் தாகத்தைத் தணிப்பதற்கெனத் தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அடியவர்களின் பசியைப் போக்குவதற்கென அன்னதான நிகழ்வுகள் தாராளமாக இடம்பெற்றன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினரும் விசேட போக்குவரத்துச் சேவைகளைப் பக்தர்களின் வசதிக்கேற்றவாறு நடத்தினர்.

நேற்றைய தீர்த்த உற்சவத்திலும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். முற்பகல் 10 மணியளவில் பாலாவியில் எம்பெருமான் தீர்த்தமாடிய போது பக்தர்கள் தாமும் தீர்த்தமாடி மகிழ்ந்தனர். (க)

# சர்வதேச மெய்வன்மை விழா வவுனியாவில்





7 ஆவது சர்வதேச மெய்வன்மை தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனத்தினதும் , இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினதும் வழிநடத்தலின் கீழ் வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் மிகச் சிறப்பாக வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

வழமையாகத் தென்பகுதிகளிலேயே நடைபெறுகின்ற இத்தகைய நிகழ்வுகள் இந்த முறை வட பகுதியின் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது

காலை 9.30 மணிக்கு விழாவின் தொடக்க நிகழ்வு வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அதிபர் ரி.அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்பமானது. இந்த தொடக்க நிகழ்வில் இலங்கை வங்கியின் வன்னிப் பிராந்திய பிராந்திய முகாமையாளர் சண்முகராஜா பிரேம்குமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றியதுடன், 17ஆவது சர்வதேச மெய்வன்மை தினக் கொண்டாட்ட நிகழ்வுகளையும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என இரு பிரிவுகளாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு சர்வதேச மெய்வன்மைச் சம்மேளனத்தின் சான்றிதழ்களும், ரீ-சேட் மற்றும் நினைவுக் கைப்பட்டிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ங-86).

## தேசிய வூஷூ தெரிவு அணிக்கு யாழ். மைந்தர்கள் இருவர்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றவுள்ள தேசிய வூஷூ அணிக்கான தெரிவில் யாழ்.வீரர்கள் இருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வூஷூ தற்காப்புக்கலையை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யும் வகையில் கடந்த இரு நாள்களாக யாழ்.இந்துக் கல்லூரியில் இலங்கை வூஷூ சம்மேளனத்தினால் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சிகளில் திறமையாகச் செயற்பட்டவர்களுள் பீ.பிரணவதாஸ், வீ.ஜீவிசன் ஆகியோர் தேசிய அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை வூஷூ அணியின் பயிற்றுநர், உதவிப் பயிற்றுநர், ஆசிய மற்றும் தேசிய போட்டிகளில் பதக்கங்களை வென்ற இலங்கை வூஷூ அணி வீரர்கள் இந்தப் பயிற்சிகளை வழங்கினர்.

தேசிய தெரிவு அணிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களை விட கனிஷ்ட பிரிவில் பி.கபிலேஷ், வீ.ராயமித்திரன், எஸ்.வேணுசன், வீ.யதுசன் ஆகியோரும் சிரேஷ்ட (சண்டா) பிரிவில் எஸ்.கிருஷாந்தன், எஸ்.கோவர்த்தனன், ஆர்.வித்தியாசங்கர், வீ.ஆதவன், எஸ்.சயந்தன் ஆகியோரும் கொழும்பில் நடைபெறவுள்ள மேலதிக பயிற்சிகளுக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ங)

## யாழ்.மாவட்ட வூஷூ சங்கம் நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

சீனத் தற்காப்புக் கலையான வூஷூவை அபிவிருத்தி செய்து திறமை மிக்க வீரர்களை உருவாக்கும் நோக்குடன் இலங்கை வூஷூ சம்மேளனத்தினால் யாழ். மாவட்ட வூஷூ சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

**வூஷூ தற்காப்புக் கலையை யாழ்ப்பாணத்தில் வளர்த்தெடுக்க பல செயற்பாடுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.**

இலங்கை வூஷூ சம்மேளனம், ஆசிய வூஷூ சம்மேளனம் ஆகியவற்றின் செயலாளரும் சர்வதேச '' ஏ'' தர மத்தியஸ்தருமான சீபூ.மானல் தர்மகீர்த்தி தலைமையில் நேற்று யாழ்.மாவட்ட வூஷூ சங்க அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

தே.பிரேமானந்த் தலைவராகவும், ம.இளம்பிறையன் உப தலைவராகவும் ம. அருள்குமரன் செயலாளராகவும், சி.அனுராஜ் பொருளாளராகவும், வீ.ஆதவன் உப செயலாளாராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களோடு ஏழு பேர் கொண்ட ஆட்சிக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்.மாவட்டத்தின் வூஷூ தற்காப்புக் கலை பயிற்சிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் தேசிய, பிராந்திய போட்டிகளில் யாழ். வீரர்களும் பங்குகொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற செயற்பாடுகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளன. (ங)

## வலிகாமத்திலிருந்து 7 அணிகள் மாகாண வலைப்பந்தாட்டத்துக்கு

வலி.வடக்கு,ஜூன்.4

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 7 பாடசாலை அணிகள் வெற்றி பெற்றதுடன், அவை மாகாணப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளன.

15 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி மகாவித்தியாலயமும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றன.

17 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அராலி சரஸ்வதி மகாவித்தியாலயமும் வெற்றி பெற்றன.

19 வயதுப் பிரிவில் முறையே தெல்லிப்பழை சண்டிலிப்பாய், உடுவில் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி என்பன வெற்றி பெற்றன.

இந்த அணிகளுடன் நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரி என்பனவும் வெற்றியீட்டி மாகாணப் போட்டிக்குச் செல்கின்றன. (ங-86)

## மாகாண மேசைப் பந்து மன்னார் சென்.சேவியரில்

வலி.வடக்கு, ஜூன் 4

வடமாகாண மட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15, 16, 17 ஆம் திகதிகளில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி உள்ளக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

மன்னார் சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம் எதிர் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி.

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம் எதிர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வடமராட்சி மெதடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. (ங-86)

## 15 வயது ஆண்களுக்கான உதைபந்து வவுனியாவில்

வலி.வடக்கு,ஜூன்4

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 11 ஆம், 12ஆம், 13 ஆம் திகதிகளில் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு,

* முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி எதிர் வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்
* யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி எதிர் மன்னார் சென்சேவியர் ஆண்கள் கல்லூரி
* வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம் எதிர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயம்
* யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் கிளிநொச்சி நாச்சிக்குடா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
* வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்
* மன்னார் முருங்கன் மகாவித்தியாலயம் எதிர் கிளிநொச்சி பரந்தன் இந்து மகாவித்தியாலயம்
* முல்லைத்தீவு கோட்டைகட்டிய குளம் வித்தியாலயம் எதிர் மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

இரண்டாம் சுற்றில் இருந்து கடந்த ஆண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி மோதவுள்ளது. (ங-86)

## சிறுவர் உதைபந்தாட்ட முகாம் யாழ்ப்பாணத்தில் நிறைவு






வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே உதைபந்தாட்டத்தை வளர்க்கும்முகமாக சிறுவர்களுக்கான உதைபந்தாட்ட பயிற்சி முகாம் மூன்று தினங்களாக யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. இதில் இறுதி நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்று அலுவலர் கிஷாந்தபெரேரா, உதவி நிறைவேற்று அலுவலர் அனுராடிசில்வா, ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபரும் உதைபந்தாட்ட சம்மேளன நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான ரன்தெனிகல மற்றும் பிபா (FIFA) அமைப்பின் போதனாசிரியர் வின்சன் சுப்பிரமணியம், சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருட்திருஞானபொன்ராசா, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் வேதாபரணம், செயலாளர் வரதராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி முகாமில் 300 க்கும் மேற்பட்டசிறுவர், சிறுமியருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் பயிற்றுவிப்பாளர்கள் 50 பேருக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

பிரதம விருந்தினராக அங்கிலிக்கன் திருச்சபையின் குரு முதல்வர் ஜெயன் ஜெயவீரசிங்கன் கலந்து கொண்டார். (ங-86)

# தொடர் சமநிலையில்



சயிட் அப்ரிடி துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் கலக்க இலங்கை அணி 23 ஓட்டங்களால் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்தது. இதன்மூலம் 2 போட்டிகளைக் கொண்ட தொடர் சமநிலையில் முடிந்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான 'ரி-20' ஆட்டமும் அம்பாந்தோட்டை விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தனவுக்கு நேற்றைய ஆட்டத்தில் ஓய்வு வழங்கப்பட்டு முதன்முறையாக அணித்தலைமைப் பொறுப்பை மத்தியூஸ் ஏற்றிருந்தார். அத்துடன் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்கவுக்கும் ஓய்வு வழங்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்திருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மொஹமட் ஹபீஸ், அஹமட் ஷகாட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். கடந்த ஆட்டத்தில் அசத்தியதைப் போன்று ஷகாட் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே பவுண்டரி விளாசி அசத்தினார். இருப்பினும் அந்த அதிரடி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. குலசேகராவின் இரண்டாவது பந்து பரிமாற்றத்தில் ஷகாட் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த லத்தீப்புக்கு அதிஷ்டம் கைகொடுக்கவில்லை. பெரேரா வீசிய பந்தை ஹபீஸ் நேரே தட்டி விட, பெரேராவின் விரல் நுனியில் பட்ட பந்து இலக்கை தகர்க்க லத்தீப் ஓர் ஓட்டத்துடன் 'ரன் அவுட்டானார்'. அதன் பின்னர் உமர் அக்மல், ஹபீஸ் இணைந்து நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர். அணியின் ஓட்ட வேகம் மெதுவாகவே அதிகரித்தது. பவர் பிளேயின் முடிவில் பாகிஸ்தான் 2 இலக்குகளை இழந்து 18 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

இவர்களின் நிதான இணைப்பை தகர்க்க சுழற்பந்து வீச்சாளர் லொக்கு ஆராய்ச்சி அழைக்கப்பட்டார். தனது முதலாவது பந்திலேயே உமர் அக்மலை 5 ஓட்டங்களுடன் பவிலியன் அனுப்ப பாகிஸ்தான் அணி 8.1 பந்து பரிமாற்றங்களில் 29 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது. ஹபீஸ் 19 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொடுத்த பிடியை பெரேரா தவறவிட்டார். இருந்தும் அடுத்த பந்து பரிமாற்றத்தை வீச வந்த லொக்குஆராய்ச்சி சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த அணித்தலைவர் ஹபீஸை 24 (34 பந்துகள்) ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

அதன் பின்னர் சொகைப் மலிக், அப்ரிடி இணைந்து துடுப்பெடுத்தாடினர். 69 பந்துகளில் பாகிஸ்தான் அணி 50 ஓட்டங்களைத் தொட்டது. இதன் பின்னர் இவர்களது இணைப்பில் பாகிஸ்தான் மெல்ல அதிரடிக்கு திரும்பியது. சேனநாயக்கா, லொக்கு ஆராய்ச்சியின் சுழற் பந்து வீச்சை சுழன்று சுழன்று மலிக், அப்ரிடி போட்டுத் தாக்க 15 பந்து பரிமாற்றங்களில் பாகிஸ்தான் அணி 83 ஓட்டங்களைத் தொட்டது.

இவர்களது இணைப்பை பிரிக்க இலங்கை பல வழிகளில் முயன்றும் தோற்றுப் போனது. 36 பந்துகளில் இணைப்பு 50 ஓட்டங்களைத் தொட்டது. இவர்களது வேகமான இணைப்பினால் 101 பந்துகளில் பாகிஸ்தான் 100 ஓட்டங்களை தொட்டது. ஆட்டம் இறுதிக்கட்டத்தை நெருங்க அதிரடி இன்னும் அதிகமானது. ஆட்டத்தின் 19 ஆவது பந்து பரிமாற்றத்தில் 41 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அப்ரிடி கொடுத்த பிடியை டில்ஷான் தவறவிட்டார். அடுத்த பந்தில் மலிக் 27 ஓட்டங்களுடன் டில்ஷானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அப்ரிடி 30 பந்துகளில் தனது 4 ஆவது அரைச்சதத்தை கடந்தார். மலிக்கை தொடர்ந்து நுழைந்த அரபாத் ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். குலசேகரா வீசிய ஆட்டத்தின் இறுதிப் பந்து அப்ரிடியின் கால்காப்பில் பட்டு இலக்கில் பட்டபோதும் 'வேல்ஸ்' வீழாததன் காரணமாக அப்ரிடி ஆட்டமிழப்பிலிருந்து தப்பித்துக் கொண்டார். 20 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் பாகிஸ்தான் அணி 6 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அப்ரிடி ஆட்டமிழக்காமல் 33 பந்துகளில் 5 பவுண்டரிகள் ஓர் சிக்ஸர் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணிக்கு சங்ககாரா, டில்ஷான் ஜோடி ஆரம்பத்தை வழங்கியது. சங்கா அதிரடியாக முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே பவுண்டரி விளாசினார். இருப்பினும் இறுதிப் பந்தில் டில்ஷான் 'ரன் அவுட்டிலிருந்து' தப்பினார். தப்பியதற்கு பரிசாக பாகிஸ்தானுக்கு அடுத்த பந்து பரிமாற்றத்தில் இரண்டு பவுண்டரிகள் விளாசினார் டில்ஷான். தொடர்ந்தும் அதிரடியாக விளையாடுவதற்கு முயன்ற சங்ககார 8 ஓட்டங்களுடன் அரபாத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சங்காவின் ஆட்டமிழப்பை தொடர்ந்து இலங்கை அணி ஆச்சரியமளிக்கும் வகையில் குலசேகராவை களமிறக்கியது. இந்த திடீர் மாற்றத்தால் இலங்கை அணி மேலதிகமாக ஓர் இலக்கினை இழந்தது. குலசேகரா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் கப்புக்கெதர, டில்ஷான் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. இவர்களது சிறப்பான இணைப்பு நீண்ட நேரம் நீடிக்கவில்லை. அப்ரிடியின் முதலாவது பந்து பரிமாற்றத்திலேயே சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டில்ஷான் 18 ஓட்டங்களுடன் போல்டானார்.

கப்புக்கெதர, சந்திமால் ஜோடி 4 ஆவது இலக்குக்காக இணைந்தது. 62 பந்துகளில் இலங்கை அணி 50 ஓட்டங்களை எட்டியது.

11 ஆவது பந்து பரிமாற்றத்தை அப்ரிடி வீச அதிரடியாக கப்புக்கெதர சிக்ஸர் விளாசினார். இருப்பினும் அடுத்த பந்து வீச்சிலேயே போல்டாகி வெளியேறினார். 19 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார்.


சந்திமல் துடுப்பாட்டத்தில் தனது வழமையான பாணியில் தற்காப்பு ஆட்டத்தைத் தொடர்ந்து பந்துகளை வீணடித்து தன்வீரின் பந்தில் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து களம் புகுந்த திரிமன்னே (18) பெரிதாகச் சாதிக்கவில்லை.

கடந்த போட்டியில் அபாரமாக ஆடிய பெரேரா ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் களமிறங்கினார் ஆனால் அந்த எதிர்பார்ப்புகள் அனைத்தையும் புஸ்வானமாக்கி வந்த வேகத்திலேயே சமியின் பந்தில் பவிலியனுக்குத் திருப்பப்பட்டார்.

அவரின் இழப்புக்கு மத்தியில் நிலைத்து நின்ற ஆடிய மத்தியூஸாலும் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லமுடியவில்லை. மத்தியூஸ் (11), லொக்குவாராச்சி (0), சேனநாயக்க (1)

19.2 பந்துப் பரிமாற்றங்களில் 99 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 23 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது இலங்கை. ஆட்ட நாயகனாக அப்ரிடி தெரிவானார். தொடர் நாயகன் தன்வீர் தெரிவானார். (16-5)

# கப்டன் இனிமேல் லெப்.கேணல்



''கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விடைபெற்றபின், இந்திய ராணுவத்துக்கு நிச்சயம் சேவை செய்வேன். இதில் எனக்கு அதிக ஆர்வமாக உள்ளது'' என்கிறார் இந்திய அணித் தலைவர் டோனி.

இந்திய அணியின் வெற்றிகரமான அணித்தலைவர் டோனி. இவருக்கு இந்திய ராணுவத்தில் கௌரவ ''லெப்டினன்ட் கேணல்'' பதவி வழங்கப்பட்டது. இதனிடையே, நேற்றுமுன்தினம் ஜம்மு-காஷ்மிரில் உள்ள இந்திய-பாகிஸ்தான் எல்லைப்பகுதிக்கு சென்ற டோனி, அங்கு வீரர்களை சந்தித்தார்.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கேணல் ஆர்.கே.பால்டா கூறுகையில், ''சர்வதேச அளவில் பிரபலமான டோனியை தூதராகப் பெற்றது பெருமையாக உள்ளது. இந்தியா, பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் ராணுவ வீரர்களின் செயற்பாடுகளை பார்வையிட்ட டோனி, வீரர்களுடன் கலந்துரையாடினார். இது அவர்கள் மனதில் உற்சாகத்தைத் தந்துள்ளது. தவிர, இளைஞர்கள் ராணுவத்தில் சேரத் தூண்டுகோலாகவும் இருக்கும்'' என்றார். இதுகுறித்து டோனி கூறியது:

''கிரிக்கெட் போட்டிகளால் தான் இந்தளவுக்கு பிரபலமாக உள்ளேன். இப்போது உங்கள் முன் நிற்பதற்கு காரணம் கிரிக்கெட்தான். இதற்கு பாதிப்பு வரும் வகையில் எப்போதும் செயற்படமாட்டேன். கிரிக்கெட் வாழ்க்கை முடிந்த பின், ராணுவத்துக்காக நிச்சயம், தீவிர சேவை செய்வேன். இதில் எனக்கு அதிக ஆர்வம் உள்ளது. களத்தில் அதிகாரிகள் எதிர்கொள்ளும் சவால்களை பார்க்க வேண்டும் என்ற விருப்பமும் உள்ளது. தற்போது தான் இவர்களை மிக அருகில் சந்திக்கும் வாய்ப்பு வந்துள்ளது. பாகிஸ்தான் - இந்திய எல்லைப் பகுதிக்கு வருவது இதுதான் முதன் முறை.

இந்த நாட்கள் அதிக எதிர்பார்ப்பு நிறைந்ததாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். பொதுவாக விளையாட்டுக்கு எவ்வித தடைகளையும் தகர்க்கும் சக்தி உண்டு. இதனால், இந்தியா, பாகிஸ்தான் இடையில் போட்டிகளை தொடங்குவது முக்கியம். இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் இணைந்து, எப்போது விளையாடுவது என்பதை முடிவு செய்ய வேண்டும். இதேபோல நாமும் அங்கு சென்று விளையாட வேண்டும். என்ன நடக்கின்றது எனப் பொறுத்திருந்து பார்க்கலாம் இவ்வாறு டோனி கூறினார். (ங)

பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா திணறல் வெற்றி பெற்றார்.

பிரெஞ்ச் பகிரங்க கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் பாரிசில் நடைபெறுகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில், தரவரிசையில் நான்காவது இடத்திலுள்ள செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, ரஷ்யாவின் பிரட்சிகோவாவை சந்தித்தார். முதல் செற்றை 6-2 என எளிதாக வென்றார் கிவிட்டோவா. இரண்டாவது செற்றில் ரஷ்ய வீராங்கனை கடும் சவால் கொடுத்தார். முடிவில் 4-6 என இந்த செற்றை இழந்தார்.


வெற்றியாளரை முடிவு செய்யும் மூன்றாவது மற்றும் கடைசி செற்றில் கிவிட்டோவா எழுச்சி பெற்றார். அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், 6-1 என தனதாக்கினார். முடிவில், 6-2, 4-6, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு மூன்றாவது சுற்று போட்டியில் இத்தாலியின் ஷியாவோனே, அமெரிக்காவின் வர்வராவிடம் 6-3, 3-6, 6-8 என்ற செற் கணக்கில் போராடி வீழ்ந்தார். பிற போட்டிகளில் ''நம்பர்-1'' வீராங்கனை அசரன்கா, ''நடப்பு சம்பியன்'' சீனாவின் நாலி, ஜெர்மனியின் கேர்பர், கஜகஸ்தானின் ஷிவ்டோவா ஆகியோர் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பிரான்சின் நிகோலத்தை சந்தித்தார். இதில் 6-3, 4-6, 6-2, 7-5 என்ற கணக்கில் பெடரர் போராடி வெற்றி பெற்றார். 'நம்பர்-1' வீரர் சேர்பியாவின் ஜோகோவிச், 6-1, 6-2, 6-2 என்ற நேர் செற்களில், பிரான்சின் டேவில்டரை வீழ்த்தி நான்காவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு மூன்றாவது சுற்று போட்டியில், ஸ்பெயின் வீரர் டேவிட் பெரர், ரஷ்யாவின் மிக்கைய்ல் யூஸ்னியை 6-0, 6-2, 6-2 என எளிதாக வென்றார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில், இந்தியாவின் லியாண்டர் பயஸ், ஆஸ்திரியாவின் அலெக்சாண்டர் ஜோடி, ரஷ்யாவின் மிக்கைய்ல், உஸ்பெகிஸ்தானின் டேனிஸ் இஸ்டோமின் ஜோடியிடம், 4-6, 1-6 என்ற நேர் செற்கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. (ங)



# அமர்க்கள வரவேற்பு

உலக சதுரங்கச் சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் நேற்று முன்தினம் சென்னை திரும்பினார். இவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடந்த உலக சதுரங்கச் சம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் பட்டம் வென்றார். இதுவரை ஐந்து முறை சம்பியன் பட்டம் வென்ற இவர், நேற்றுமுன் தினம் சென்னை திரும்பினார்.

விமானநிலையத்தில் இவருக்கு, அகில இந்திய சதுரங்கக் கூட்டமைப்பு சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஏராளமான பாடசாலை மாணவர்களும் ஆனந்துக்கு வாழ்த்துக்கூற விமானநிலையத்துக்குத் திரண்டு வந்திருந்தனர்.

வரவேற்பு குறித்து ஆனந்த் கூறுகையில், ''என்னை வரவேற்க வந்த அனைவருக்கும் நன்றி. இது மிகவும் மகிழ்ச்சியான தருணம்'' -என்றார். (ங)

# ஐ.பி.எல் லா? டெஸ்டா?

## சிக்கலில் நியூசிலாந்து

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் வீரர்கள் அடுத்த வருடம் இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியொன்றைத் தவறவிடுவார்கள் என்று கூறப்படுகிறது. நியூசிலாந்து வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றவுள்ளதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுடனான ஆஷஷ் தொடர் உட்பட இங்கிலாந்து கிரிகெட் அணியின் அடுத்த வருடத்திற்கான போட்டி அட்டவணைகளை இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை நேற்று முன் தினம் வெளியிட்டிருந்தது. இதில் நியூசிலாந்துடன் இடம்பெறவுள்ள தொடருக்கான போட்டி அட்டவணையும் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகவே குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்தவருடம் நியூசிலாந்து வீரர்கள் 5 வாரங்கள் கொண்ட ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றுவார்களெனில் இங்கிலாந்துக்கெதிராக இடம்பெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முதல் நாளிலேயே இங்கிலாந்தைச் சென்றடையக் கூடியதாகக் காணப்படும். இதன் காரணமாக முதலாவது போட்டியில் அந்த வீரர்கள் பங்குபற்ற முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறான நிலை ஏற்பட்டால் இங்கிலாந்து அணியுடன் நியூசிலாந்தின் இரண்டாம் நிலை அணியொன்றே மோதவேண்டி நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஐ.பி.எல். போட்டிகளில் நியூசிலாந்து வீரர்களான ரோஸ் ரெய்லர், டானியல் வெற்றோரி, பரென்டன் மக்கலம், டக் பரேஸ்வெல் ஆகியோர் முழுமையான டெஸ்ட் வீரர்களாகக் காணப்படுவதோடு, ஜேம்ஸ் பராங்ளின் மற்றும் நதன் மக்கலம் ஆகியோருக்கும் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

தவிர, ஜெஸி ரைடர் ஒப்பந்தத்தில் காணப்படாத போதிலும், அடுத்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றுவார் என நிச்சயமாக எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே முன்னணி வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றினால் டெஸ்ட் போட்டி தொடர்பாக என்ன முடிவினை எடுப்பது என்ற குழப்ப நிலை நியூசிலாந்துக் கிரிக்கெட் சபைக்கு ஏற்படலாம்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நியூசிலாந்துக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் தலைவர் ஹீத் மில்ஸ், நியூசிலாந்து வீரர்கள் - ஐ.பி.எல். போட்டிகளைத் தெரிவுசெய்வதற்கான வாய்ப்புக் காணப்படுவதாகத் தெரிவித்தார். அத்தோடு வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளைத் தவறவிட்டு இங்கிலாந்து டெஸ்ட் போட்டியில் பங்குபற்றினால் தான் ஆச்சரியமடைவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

நியூசிலாந்துக் கிரிக்கெட் வீரர்கள் தங்களது வருடாந்த ஒப்பந்தத்தில் பெற்றுக்கொள்ளும் ஊதியத்தை விட ஐ.பி.எல். போட்டிகளில் அதிகமாகச் சம்பாதிக்கின்றனர் என்பதோடு, ஐ.பி.எல். போட்டிகளில் தங்களைப் பங்குபற்ற அனுமதிப்பதற்காக நியூசிலாந்துக் கிரிக்கெட் சபைக்கு தங்களது போட்டி ஊதியத்தின் 10 சதவீதத்தைச் செலுத்துகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந)

**மணல் விற்பனைக்குண்டு**

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 22,500/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

(18625)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



மண்ணில்
01.08.1960

விண்ணில்
05.05.2012

அமரர்
**வஸ்தியாம்பிள்ளை**
**லூசியன் சுகேந்திரன் (சுகே / BASTI)**
உரிமையாளர் - வஸ்தியன் அச்சகம்
(பழைய மாணவர் - யா/ புனித ஜோன் போஸ்கோ, யா/ பரியோவான் கல்லூரி)

அமரர் வஸ்தியாம்பிள்ளை லூசியன் சுகேந்திரன் அவர்களின் பூதவுடலைப் பிரான்சிலிருந்து கொண்டுவருவதற்குச் சகல வழிகளிலும் தோள்கொடுத்துதவிய எமது அன்பு நண்பி சிறீ குடும்பத்தினருக்கும்; திடீர் மரணச் செய்தியறிந்து துயருற்றிருந்த வேளையிற் சகல துறைகளாலும் உதவி புரிந்தவர்களுக்கும்; உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசிமூலமும், இணையம்மூலமும், நேரிலும் வந்து அனுதாபம் தெரிவித்து, எமது துயரிற் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும்; மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், மரணச் சடங்கிற் கலந்து கொண்டவர்களுக்கும்; தேவையறிந்து உதவிக்கரம் நீட்டிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

**விற்பனைக்கு**

XK-xxxx இலக்கமுடைய Hunk மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0779790899



**Toyota COROLLA**
கார் விற்பனைக்கு
GR-xxxx First Registration
Brand new 2002 White colour
Full Option Power Auto transmission mint Condition.
Contact- 0777358337

**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

இறுதிப்பிரிவு
**O/L DAY CLASS**
ஆரம்பம்- 06.06.2012,
8-2 மணி வரை
இப்பிரிவுக்கு 75 மாணவர்கள் மட்டுமே
05.06.2012 ற்கு முன் அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
நிர்வாகி.

**கார் விற்பனைக்கு**

Toyota COROLLA 121 மொடல் வெள்ளை நிற One Owner, WP JW-xxxx தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. Company Maintainance உடன் Top Condition.
தொடர்பு- T.சண்முகநாதன்
75, அம்மன் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம். (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு முன்பாக).
தொ.பே- 0712510025

**விற்பனைக்கு**

செங்கல், கருங்கல் சல்லி,
அத்திவாரக் கற்கள்,
நிலப்பதிப்புக் கற்கள் குறைந்த விலையில் விற்பனைக்கு.
தொடர்புக்கு-
0773818799

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Batch - 1: 05.06.201 9.00 - 12.00
Batch - 2: 05.06.201 3.00 - 5.00
Batch - 3: 11.06.2012 9.00 - 12.00

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**Microsoft Certified Network Engineering**
ICTA Scholarship Software
Exam Fee upto 47$
Course Fee Per Module 18000
மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
மேலதிக விபரங்களுக்கு தயக்கம் இன்றி MCAI CAMPUS உடன் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்



**MCAI CAMPUS**
SMS Your name & Course to 77 5 520 940 & Get Schol.
243, Adiyapatham Road, Kalviyankadu
Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience
www.mcaicampus.info
Supported by Jaffna Computer Society
Closing Date 06.06.2012

**நெஞ்சம் நெகிழும் இதய அஞ்சலி**



எங்கள் மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான பிரதி விவசாயப் பணிப்பாளர் - முல்லைத்தீவு திரு.சட்சணமூர்த்தி யோகேஸ்வரன் அவர்களின் அருமைப் புதல்வனும், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவனுமாகிய
செல்வன் யோகேஸ்வரன் சிரிதரன்
அகாலமரணம் அடைந்த செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம்.
ஆற்றமுடியாத இந்தத் துயரை எங்கள் அனுதாப வார்த்தைகளால் தேற்ற முடியாது தவிக்கின்றோம்.
மகனைப் பிரிந்த எங்கள் பிரதிப் பணிப்பாளரினதும் அவர் குடும்பத்தினரினதும் சோகத் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம்.
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கல்) அலுவலகம், முல்லைத்தீவு.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.